விவேகம்: 6 அறிவு: 9

# விவேகி

*

செப்டம்பர் 1965 விலை சதம் 40

# ஆசீர்வாதம் அச்சகம்—புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 274

## 'ஆசீர்' வெளியீடுகள் - விலை விபரம்

### படிமுறைக் கணிதம்

| | | | |
|---|---|---|---|
| 2 | ஆம் வகுப்புக்குரியது | | 1-25 |
| 3 | ,, | ,, | 1-50 |
| 4 | ,, | ,, | 1-75 |
| 5 | ,, | ,, | 2-00 |
| 6 | ,, | ,, | 2-00 |
| 7 | ,, | ,, | 2-00 |
| 8 | ,, | ,, | 4-00 |
| 9 | ,, | ,, | 6-00 |

### கணிதப் பயிற்சிகள்:

| | | | |
|---|---|---|---|
| J. S. C. | வகுப்புக்கு உரியது | | 1-60 |
| G. C. E. | ,, | (தமிழ்) | 1-60 |
| ,, | ,, | (சிங்களம்) | 1-60 |
| ,, | ,, | (ஆங்கிலம்) | 1-60 |

### கணித மாதிரிகை வினாக்கள் :

| | |
|---|---|
| 5 ஆம் வகுப்புக்கு உரியது | -75 |
| J. S. C. | -75 |
| G. C. E. ,, | 1-00 |
| ஆசிரிய கலாசாலை பிர.பரீட். | 1-00 |

### படிமுறை அட்சரகணிதம்

| | | |
|---|---|---|
| 6 | ஆம் வகுப்புக்குரியது | 1-60 |
| 7 | ,, | 1-60 |
| 8 | ,, | 1-75 |

பயிலுந்தமிழ் 1-ம் பாகம் 2-00

### படிமுறை மனக்கணிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஆம் வகுப்புக்கு | உரியது | | -6 |
| 3 | ,, | ,, | ,, | -75 |
| 4 | ,, | ,, | ,, | -9 |

### பிற நூல்கள் :

| | |
|---|---|
| G.C.E. பாஷை மாதி. வினா | 1-25 |
| புதுஉலக சரித்திரம் | 7-75 |
| சம்ஸ்கிருத இலக்கண பயிற்சிப்புத்தகம் | 6-00 |
| சம்ஸ்கிருத சிஷாப் பிரதம சோபானம் | 1-00 |
| பூரணன் கதை | 2-50 |
| இலங்கைப் பூமிசாத்திர வினா விடை | 1-2 |
| நாடோடிப் பாடல்கள் | 1-5 |
| வன்னியின் செல்வி | 1-5 |
| எஸ்தாக்கியார் நாடகம் | 1-5 |
| பரீட்சைகளிற் சித்திபெறுவது எப்படி? | 1-00 |
| "விவேகி" மாத இதழ் வருடசந்தா | 4-00 |

**ASIRVATHAM PRESS & BOOK DEPOT**

32, KANDY ROAD, JAFFNA

T'Phone: 274

தெணியான்

# விவேகி

இன, மத, கட்சிச் சார்பற்ற
திங்கள் இதழ்

★

காரியாலயம் :
32, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை)

274

★

விவேகியில் பிரசுரமாகும் எழுத்தோவியங்கள் அத்தனையும் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவற்றை எழுதியவர்களே அவற்றுக்குப் பொறுப்பாளராவர்.

## உள்ளே . . . . .

டக் டக் பதில் ... 5
ஏன் சிரித்தாள் ... 9
கீர்த்தனை ... ... 11
நோத்முதல் கோபல்லவா 13
பொதுவான நோய்கள் 21
தம்பிக்கு! ... ... 25
பிடியைப் பழித்த கொடியிடையாள்! 29
நல்லைக் கீர்த்தனை ... 30
குழந்தை வளர்ப்பும் இலக்கியமும் 31
திருப்பம் ... ... 34
சுவாலை ... ... 39
"வீரன் தாவீதின் காதலும் மீகாளின் சாகசமும்" ... 41
எப்படியோ...போகட்டும்! 46
புது உலகம் தாராய்! 49
சீதா ... ... ... 51
சிங்கள இலகுபாடம்-5 57
புத்தக மதிப்புரை ... 60
'செப்ரெம்பர் பதினொன்று' 61
குறுக்கு எண்போட்டி-19 65

★

# கடவுள் வணக்கம்

ஏழைமக்கள் போதுமென்ற இதயம்ப டைத்துலகில்
இன்பமாய் வாழவேண்டும்
எப்பொழுதும் பெரியவர்கள் ஏதமிலாநீதிநெறி
இன்னதென் றுணர வேண்டும்
வாழவழி காட்டுகின்ற மாசற்ற வல்லபத்தை
மனமார வாழ்த்த வேண்டும்
மனத்தாலுந் தீமைக்கு மரியாதை கொடுப்பதை
மறந்திடும் பண்பு வேண்டும்
சூழலெதிர்த் தநியாயம் தொடர்ந்துதான் செய்தாலும்
சோராதி ருக்கவேண்டும்
துடிக்கின்ற சிந்தைதனை அடக்குமா தவம்வேண்டும்
தூயமனச் சாந்தி வேண்டும்
பாழுமொரு பாவியென் றேளனஞ் செய்தாலும்
பாசாங்கு தவிர்க்க வேண்டும்
பரமனே! ஏழைமுறைப் பாடுகேட் டருளுவாய்
பரிபூர ணானந்தமே.

—சுதந்திரஜீவன்

விவேகி
VIVEKI — திங்கள் இதழ்

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

விவேகம் 6 | விசுவாவசு ஹூ ஆவணி மீ (செப். 65) | அறிவு 9

# பொன்

பொன்னும் ஒரு மண்தான். அது மண்ணுள் மண்ணாக மறைந்துள்ளது. ஆனால் அஃது ஒளி உள்ளது; அழுத்தம் பெற்றது; கனம் நிறைந்தது. அதனால் அதனைப் 'பொன்' என்று கூறுகிறோம். பொன்னை நாம் பொருளாக மதிக்கிறோம். பொருளனைத்தினும் பொன்னைச் சிறந்ததெனப் போற்றுகிறோம்.

நாம் பற்றுவைத்துப் பாராட்டும் மனைவி மக்களைக் கூடப் பொன்னே! மணியே என்று புகழ்கின்றோம் ஞானியர்கள் இறைவனைப் பொன்னென்று ஏத்தித் துதித்திருப்பதைத் தேவாரங்களிற் காணலாம். "மாசறு பொன்னே"! என்று கோவலன், கண்ணகியைப் புகழ்ந்ததாக இளங்கோவடிகள் கூறுகிறார். செல்வ மக்களைப் 'பொன்னி' என்று பெரிட்டழைப்பதுங் கண்கூடு.

பலரது அரிய உழைப்பின் பயனாகப் பெறப்படுவது பொன். உழைப்பின் அளவாக அப்பொன்மீது மதிப்பு உயர்கிறது. உயர்ந்த உழைப்பின் பரிசாக ஒளிமிக்க பொன் கிடைக்கிறது. முதலில் அது மண்ணோடு மண்ணாக மாசுபடிந்து கிடக்கிறது. தீயிலிட்டுப் பலமுறை காய்ச்சக் காய்ச்சப் பிரபை வீசுகிறது. ஒளிவீசும் பொன்னாகப் பார்க்கும் போது உள்ளத்திற் களிப்பு விஞ்சுகிறது. உழைப்பின் துன்பமே மறந்துபோகிறது.

மேலும், பலநாள் துன்பத்திற் கிடைத்த பயனாகிய பொன் அழியாத செல்வமாகவும் அமைகின்றது. உழைப்பவனுக்குப் பெருமையையும் அளிக்கின்றது. அவனுக்கு மட்டுமன்றி. அவன் சுற்றத்துக்கும் துணையாய் உதவுகிறது. பிறரும் அவனைப் பாராட்டக் காரணியாகிறது.

இப்பொன்னின் பெருமை நிலையை அறிந்த பேரறிவாளரான வள்ளுவர் மனித குலத்தைப் பொன்னாக்க நினைத்தார். பொன்னைக் காட்டிப் புகழ்ந்து சமுதாயத்தை மாண்புடையதாக்க வழிகாட்டினார்.

சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பம்
சுடச் சுடநோக்கிற் பவர்க்கு. என்றார்.

மனிதன் மற்றைய உயிர்களிலும் சிறந்தவன். தொழில் முயற்சியால் சிறப்புடையவன். தனக்காகத் தொழில் செய்வதுடன் பிறர் நலம்கருதித் தொழில் புரியவும் கடமைப்பட்டவன். எப்போது தன் இன்பத்தைக் குறைத்துக்கொண்டு அறியாமையை அகற்ற முயற்சிக்கின்றானோ அப்போது மனிதன் உயிர்களில் தலை சிறந்தவனாகின்றான். துன்பத்தைக் கண்டு அஞ்சாது துன்பத்தையே இன்பமாக மாற்றியமைக்கும் மனப்பான்மை மனிதனைப் புனிதனாகவே மாற்றிவிடும்.

பொன்னானது, மண்ணில் இருந்து பிரிந்து, அனல் சுடச்சுட மாசொழிந்து, ஒளிவீசி, எப்படிப் பெருமை பெறுகிறதோ அவ்வாறே மனிதனும், இன்ப வேட்கையினின்றும் பிரியவேண்டும். துன்பநெருப்பால் சுடப்படவேண்டும். அறிவென்னும் ஒளிவீசி ஆன்ம விளக்கம் பெறவேண்டும்; பொன்னாய் மிளிரவேண்டும்.

இன்னும், பொன்னானது செல்வமாகவும், அணியாகவும் சிறந்து விளங்குவதுபோல, தன் உழைப்பை மனிதன் பிறருக்குப் பயன்படுத்தும்போது அவன் மக்கட் செல்வமாகவும், அணிகலமாகவும் பாராட்டப்படுவான்.

இத்தகைய பொன்னான கருத்துக்களைப் புலவர் பெருமான் ‘பொன்’ மீதுவைத்து விளக்கியிருப்பதைப் படித்து அவர் கருத்தைப் பொன்னாக மதிப்பதும் எமது வாழ்வைப் பொன்னாக்குவதும் எம்மனைவரதும் பெருங்கடனாகும்.



# "டக் டக்" பதில் விவேகி

எம். எம். எம். மஃறூப்,
"ஹமீட் பிளேஸ்"
குறுக்குத் தெரு,
கல்முனை—5

★ விவேகியில் சித்திரத்தொடர் கதை வெளியிட்டால்என்ன?

வெளியிட எமக்கும் ஆவல்! கதைக்குதகுந்த சித்திரத்தை வரையக்கூடிய ஓவியர் கிடைப்பது அரிது! கிடைத்தாலும் எமக்குரிய காலத்தில் முடித்துக் கொடுக்கக் கூடியவர் கிடைக்கவில்லை; ஆதலால்தான் அவ்வெண்ணத்தை நாம் மறந்து பல வருடங்களாகின்றன!

★ ராஜாஜி தி. மு. க. வில் சேர்ந்து விட்டாராமே உண்மையா ?

அந்த நிலைக்கு அவர் இன்னும் வரவில்லை !

வி. பிரான்சீஸ்
உணவுக் கட்டுப்பாட்டு இலாகா,
மன்னார்.

★ சிலர் நல்லவர்போன்று நடிக்கின்றனர். இதை எப்படிக் கண்டு பிடிப்பது ?

அவர்கள் உறவாடும் நண்பர்களைக் கொண்டு !

★ உயிருக்குயிராக நேசிக்கும் ஒருவரை இறந்தபின் மறு உலகில் சந்திக்க முடியுமா?

முடியாது ! மறுஉலகில் உற்றார், உறவினர்கள் என்ற பாகுபாடு எதுவும் கிடையாது என்பதே எல்லா மதக் கொள்கைகளும். மறு உலக வாழ்வில் நல்லவர்கள் யாவரும் என்றும் முடிவில்லாத மகிழ்ச்சியை அனுபவிப்பர் !

பரம் தமிழ் மார்பன்,
6, நல்லூர் கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஏழை எப்பொழுது மகிழ்ச்சி அடைவான் ?

தான் பெற்ற செல்வத்தின் மழலை மொழியைக் கேட்கும் பொழுது !

★ உத்தமான பெண் எதைச் சகிக்க மாட்டாள் ?

அவமானத்தை !

★ கனவு ஏன் ஏற்படுகிறது ?

அத்துமீறி போசனம் அருந்துவதாலும், ஒருவித கடல்

மீனை உண்பதாலும் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்!

தமிழ்தாசன்,
''மலர்விழி இல்லம்,''
செம்பியன்பற்று.

★ எம்போன்ற பலவாசகர்கள் 'மலர்விழி' வெளிவராததையிட்டு கவலையாக இருக்கிறார்கள். விரைவில் வெளியிட்டு எங்கள் கவலையை போக்குவீர்களா ?

இன்றைய நிலையில் ''மலர்விழி''யை வெளிக்கொண்டு வருவது கஷ்டம்; இருந்தும் உங்கள் ஆதரவை பார்க்கும் பொழுது வெளிக் கொண்டு வரவே ஆவலாக இருக்கிறது! எப்படியும் ''மலர்விழி'' புத்தாண்டு முதல் தொடர்ந்து வெளிவரும்!

★ ஜெனவரி முதல் நாம் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் பத்திரிகைக்கு கேள்வி பதில் அளிக்கும் தொழிலை ஏற்றுக் கொள்வீரா, எம்சியே ?

இக்கேள்விக்கு தனிப்பட்ட முறையிலோ அல்லது நேரிலோ என்னைச் சந்தித்தால் பதில் கிடைக்கும்.

★ இலங்கைத் தமிழ் பிரதிநிதிகளில் திறம்பட பேசும் ஆற்றல் பெற்றவர் யார் ?

ஆங்கிலத்தில் யாழ். பிரதிநிதி ஜி. ஜி பொன்னம்பலம், ஆங்கிலத்திலும் தமிழிலும் ஏக காலத்தில் குறித்த விடயத்தை தரமாக பேசக் கூடியவர் கிளிநொச்சி பிரதிநிதி கா. பொ. இரத்தினம்!

பகவான்,
பறிந்த நுவர.

★ விவேகி பத்திரிகையை தாங்கள் வெளியிடுவதன் காரணம் பணம் சம்பாதிக்கவா? மக்கள் படித்து அறிவுபெறவா?

நல்லகேள்வி கேட்டீர் பகவானே !

உ. சுப்பிரமணியம்,
64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய ''பட்ஜட்'' பற்றி தங்கள் கருத்தென்ன?

அவ்வளவு மோசமில்லை; இருந்தும் விவேகியின் பக்கங்களையோ விலையையோ குறைக்கக்கூடிய விதத்தில் ''பட்ஜட்'' அமையவில்லை

★ இந்திய பாகிஸ்தான் எல்லை தகராறுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

இதனால் உலக யுத்தம் ஏற்பட்டாலும் ஏற்படலாம் இந்த யுத்தத்தால் அமெரிக்காவுக்குத்தான் அதிக நஷ்டம் நேரும்!

★ சினிமா இசை அமைப்பாளர்களான விசுவநாதன்--இராமமூர்த்தி பிரிபட்டனராம் உண்மையா? காரணம்!

பிரிந்தது உண்மை ; அதை விட உண்மை இருவரும் ஒருவரை ஒருவர் சுறண்டியது !

எம். எம். இர்பான்,
29, கொன்ரிறேட், காலி.

★ ....................

............

தங்கள் கடிததித்ல் இருந்தவைகளை பலதடவை படித்

துப் பார்த்தேன். தங்கள் துணிவுக்கு என் பாராட்டுக்கள். தங்கள் மதத்தில் யான் எந்தவித குறையும் எழுதவில்லை. தாங்கள் வழிபடும் மதம் வேறூர் நாட்டில் இருந்துவந்த மதம் என்பதை நீர்முதல் விளங்க வேண்டும். உங்கள் அன்னை உம்மை தொட்டிலில் இட்டு தாலாட்டிய மொழி தமிழ். நீர் முதன் முதல் பேசிய மழலை மொழி தமிழ். தமிழகத்தில் அக்பர் ஆட்சிக்கு முன் தமிழ்பேசுபவர்களில் நீங்கள் வழிபடும் மதத்தை தழுவியவர்கள் கிடையவே கிடையாது. அக்பரின் ஆட்சிக்காலத்தில் இன்று ஈழத்து தமிழ் மக்கள் மத்தியில் சிங்களமும், தென் இந்திய தமிழ் மக்கள் மத்தியில் ஹிந்தியும் திணிக்கப்படுமாப் போல் அன்றைய அக்பர் ஆட்சியிலும் தாங்கள் வழிபடும் மதம் திணிக்கப்பட்டது. அதுபோல்தான் ஆங்கில ஆட்சிகாலத்தில் கிருத்து மதமும் திணிக்கப்பட்டது. நீங்கள் தமிழ் பேசுபவராக இருந்தால் நான் இன்று எழுதியது சரி; நீர் அமுதம் போன்ற தமிழை கொலை செய்யும் அரேபியராக இருந்தால் நான் எழுதியதை பிழையாக கருதலாம்! எதை ஆராய்ச்சி செய்வதாக இருந்தாலும் சரித்திரத்தின் வாயிலாக ஆராய்ச்சிசெய்யவேண்டும்; மத நூல்களில் அல்ல! யான் கூறியது இலங்கையிலும், தென் இந்தியாவிலும் இஸ்லாம் மதத்தை வழிபடும் தமிழ்பேசும் மக்களையே ஒழிய அராபியரை அல்ல!

பி. லாசரஸ்
பரண்ட், அங்கமுவா.

★ மிஸ்டர் எம்சியே, இங்கர்சாலைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

அந்த அறிஞரின் ஆற்றலை எடைபோட எனக்கு தகுதியில்லை!

★ தற்பொழுது ஈழத்தில் எத்தனை படங்கள் தயாராகின்றன?

மூன்று படங்கள் கருவில் இருப்பதாகத் தெரிகிறது. இவைகளில் எல்லாம் கருவில் சிதைவுற்றுப் போகின்றனவோ அல்லது நல்ல பிரசவமாகின்றனவோ என்பதை எந்த டாக்டராலும் கூறமுடியாது.


★ பிரதி மாதமும் எத்தனை விவேகிகள் தயாராகின்றன?

பிரதி மாதமும் விவேகியாரை சந்திக்கச் குறைந்த பட்சம் 17,000வாசகர் வரையில் காத்திருக்கிறார்கள்!

பி. ஏ ஜேம்ஸ்
யாழ்ப்பாணம்.

★ சென்ற இதழில் பென்சன் கிடைக்காது என்றுமட்டும் எழுதியிருந்தீர்கள் ஏன் என்று குறிம்பிடவில்லையே?

சோம்பேறிகளுக்கும், ஆண்மையற்றவர்களுக்கும் பென்சன் கொடுக்க வேண்டியதில்லை. அப்படிக் கொடுத்தாலும் அதைப் போய் பெறுவதற்கும் அவர்களுக்கு தென்பில்லை! அவர்கள்வீட்டில் காவலுக்கு வளர்க்கப்படும் நாலுகால் பிராணி போன்றவர்கள். அது எஜமான் இறந்தால் வேறெங்கும் போகாமல் ஏஜமானின் பிணத்தண்டை கிடந்து இறந்து போகும். அது போலவேதான் நீர் கூறியவரும் செய்வர். ஆண்மையற்றவர் இருந்தென்ன பிரயோசனம்? அவர்களுக்கு இந்த உலகத்தில் வாழ எவ்வித தகுதியுமில்லை!



அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவருமான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. ஸி. அவர்கள் அண்மையில் நடைபெறவிருக்கும் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்கும் இலங்கைத் தூதுக் குழுவினருக்குத் தலைமை தாங்கி 29-8-65 ஞாயிற்றுக்கிழமை விமானமூலம் கட்டுநாயகா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றூர்கள்.

ஆங்கில மொழியில் நிரம்பிய ஆற்றலும், நாவன்மையும் வாதத்திறமையும் கொண்ட திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் இலங்கை சார்பில் ஐ. நா. பொதுசபைக்குச் செல்லும் குழுவினருக்குத் தலைமை தாங்கிச் செல்வது வரவேற்கத் தக்கதேயாகும்.

இன்று இலங்கையில் நிலவும் கொந்தளிப்புகளுக்கு அமைதி காணும் முறையில் திரு ஜீ. ஜீ. அவர்களின் ஐ, நா. விஜயம் அமைந்தால் அது முழு இலங்கை மக்களாலும் போற்றப்படுவதோடு இலங்கையின் சமூக ஒற்றுமையும், சுபீட்ச வாழ்வும் கிட்டுவதற்கு அடிக்கல்லாகும் என்பதில் சந்தேகமிராது.

# ஏன் சிரித்தார்!

—குமார் தனபால்—

மனிதனின் இதயத்தில் கொட்டிக் கிடக்கும் ஆசைகளைப் போல் வானத்திலேயும் எண்ணற்ற தாரகைகள் வாரி இறைக்கப்பட்டிருக்கின்றன.

மனிதனின் ஆசைகளுக்கு அளவே இல்லை—அதற்கு நான்மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா? என் உள்ளத்திலேயும் பலவித ஆசைகள் பரவிக் கிடந்தன. ஆனால் அதில் ஒரே ஒரு ஆசை மட்டும் என் இதயத்தின் ஒரு மூலையில் எழுந்து நின்று நர்த்தன மாடி என்னை சித்திர வதை செய்தது. அந்த ஆசை தான் கதை எழுதவேண்டுமென்ற ஆசை! எப்படியாவது ஒரு கதையாவது எழுதி என் பெயர் பத்திரிகையில் வரவேண்டுமென்ற அடங்காத ஆசை! அந்த ஆசையின் வேகத்தை நேற்று என் காதலி சந்திரா இன்னும் அதிகமாகத் தூண்டிவிட்டாள்.

''அத்தான் நீங்கள் நன்றாகப் படித்திருக்கிறீர்கள். பட்டங்கள் பெற்றிருக்கிறீர்கள். நிறைந்தஅறிவும் உங்களிடம் அடங்கி இருக்கிறது. உங்களால் ஒரு கதை எழுத முடியாதா? நீங்கள் கதை எழுத வேண்டும். அது பத்திரிகையில் வர வேண்டும். பல பேர் உங்களைப் பாராட்ட வேண்டும். என் காதலர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்று என் சினேகிதிகளுக்கு நான் சொல்லிப் பெருமைப்பட வேண்டும். இதுதான் என் ஒரே ஆசை—நிறைவேற்றுவீர்களா?'' என் உயிர்க் காதலி சந்திரா இதை என்னிடம் சொல்லி முடித்தாள்.

''அன்பே! என்னை அவ்வளவு ஆற்றல் இல்லாதவன் என்று இவ்வளவு நாளும் எண்ணி இருந்தாய். நாள் ஒரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் மூலை முடுக்கெல்லாம் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வளர்ச்சியைத் தடை செய்யக் கூடாதே, எம் போன்ற திறமைசாலிகள் வழிவிட்டுக் கொடுத்தால் தானே அவர்களும் வளரமுடியும் என்ற எண்ணத்தில் இவ்வளவு காலமும் இருந்துவிட்டேன். இன்று என் காதலி என்னை ஒரு எழுத்தாளனாகக் காணவிரும்புகிறாள். கண்ணே! இதோபார் ஒன்றென்ன ஓராயிரம் கதைகள் புதுப்புதுக் கருத்துகளோடு எழுதி வருகிறேன்.

விறு விறுவென வீடு வந்து சேர்ந்து விட்டேன். பேப்பர்களை எடுத்தேன். பேனாவில் மையை நிரப்பிக் கொண்டேன். கதிரையை இழுத்து அருகில் போட்டுக்கொண்டேன். எழுத்தாளன் பாணியில் சிறிது நேரம் சிந்தித்தேன். இன்று என் செய்கைகள் என் தம்பி தங்கைகளுக்கு புதுமையாக இருந்திருக்க வேண்டும். ஒன்று இரண்டு மூன்றாக ஏழு ஜெனமங்கள் என மேசையை சுற்றிக்கொண்டு என்னையே இமைவெட்டாது, ஆவென்ற வாய் மூடாது பார்த்துக்கொண்டு நின்றார்கள். என் கற்பனை தடைப் பட்டது முழித்துப்பார்த்தேன்வயிறு பற்றி எரிந்தது. ''ஓடுங்கோ சனியன்களே!'' அவைகள்போன இடம் தெரியவில்லை. ஏனென்றால்அடுத்ததாக என்ன நடக்கும் என்றும் அவர்களுக்குத் தெரியும்.

எப்படிக் கதை எழுதுவது? சீச்...சீ... இதென்ன தர்மசங்கட

மான நிலையில் மாட்டிக்கொண்டேன். எது எப்படி இருந்தாலும் நல்ல சுவையான கதை ஒன்றை எழுதி சந்திராவிற்கு காட்ட வேண்டும். என் அன்புக் காதலி சந்திராவை நினைத்ததும் எனக்கு கற்பனைக்குப் பஞ்சமா? ஆனால் அவைகளை எழுத்துருவில் வடிக்கத் தெரியவில்லையே !

"கதை எழுதுவது கறிசமைக்கும் வேலையல்ல. அது ஒரு பிரசவ வேதனை" யாரோ ஒரு பிரபல எழுத்தாளர் தன் சிறுகதைத் தொகுப்பில் இப்படி எழுதி இருந்தார். பிரசவ வேதனையா? அடேயப்பா! அதை எப்படி என்னால் சகிக்க முடியும்? கதை எழுதுவதை ஒத்திப்போடலாம்தான். ஆனால் நாளை என் சந்திரா என்னை எள்ளி நகையாடுவாளே. சே... எப்படியாவது எழுத வேண்டும். எப்படி எழுதுவது. என் சிறிய மூளையை எல்லாப் பக்கமும் குழப்பிப்பார்த்து விட்டேன். ம்... ஒரு சொல்லுக்கூட என் மூளையில் இருந்து பிறக்கவில்லையே !

"களவையும் கற்று மற" இந்த ஆழிசூழ் உலகில் உள்ள முக்கால் வாசிப்பேர் களவெடுத்துத்தானே கனவானாக வந்திருக்கிறார்கள். திருட்டுத் தனத்தால் புகழ்சேர்ந்தவர்கள் தொகை தானே அதிகம். நானும் திருடினாலென்ன? சீச்...சீ... திருடுவதா? திருட்டுத்தனமும் சந்திராவின் காதல் உள்ளமும் சிறிது நேரம் போரிட்டன. நான் என்ன செய்ய? திருட்டுத்தனம் வென்று விட்டது.

என் அறையின் மூலையில் உள்ள தூசுபடிந்த அலுமாரியிலுள்ள புத்தகங்கள் அனைத்தையும் கிளறிக் கொட்டுகிறேன். ஒரே ஒரு கதை என் இதயத்தைக் கவர்ந்தது. யார் எழுதி இருப்பார்கள்? "யாழினி" என்ற பெயர் இருந்தது. ஆண்டைப் பார்த்தேன் 1954ம் ஆண்டு. இப்போது இதை யார் கவனிக்கப் போகிறார்கள். என் பேனாவும் பேப்பரும் மோதத் தொடங்கின.

* * *

"சந்திரா ! இதோபார் ஒரே நாளில் நான் எழுதிய கதையை. அவளிடம் அந்தக் கதையைக் காட்டினேன். அவள் அதைப் படித்தாள். சிரித்தாள். ஏன் சிரித்தாள்? அந்தக் கதையில் நகைச் சுவையும் கலந்து இருந்தது. அதைத்தான் ரசித்துச் சிரிக்கிறாளோ !

"ஐயோ ! ஐயோ! ! ஏன் இப்படிப் பித்தலாட்டம் பண்ணுகிறீர்கள் ?"

"பித்த......லாட்டமா ?"

"அங்கை இங்கைபோய் கடைசியாக அடிமடியிலேயே கைவச்சிட்டியளே !"

"ச......ச......சந்திரா !"

"இந்தக் கதையை எட்டு ஒன்பது வருசத்துக்கு முன்பு நான்தான் "யாழினி" என்ற புனைப் பெயரில் எழுதினேன். என்னுடைய கதையை திருடி எழுதி என்னிடமே காட்டுகிறீர்களா ? நல்ல காலம் பத்திரிகையில் வந்து பலபேர் நகைக்காமல் விட்டார்களே! அத்தான்......அத்தான்...நடந்தது நடந்து விட்டது. நீங்கள் எங்கே போகிறீர்கள் ? அத்தான்......" ★

''த்யாகைய்யர்''

# கீர்த்தனே

## (கு. வேலாயுதம்பிள்ளை)

இராகம்—குந்தலவராளி தாளம் — ஆதி

மே 28 { ஸமபதநிஸ் / ஸநிதபமஸ

### பல்லவி

சரசர சமரைகசூர —சரதிமதவிதார ||

### அநுபல்லவி

ஸுரரிபுமூல—பலமனுதூல
கிருலகனலஸம—மௌ ஸ்ரீ ராம ||

### சரணம்

தொலிஜேசினபா-பவனகுடாரமா
கலனேஸே-யகலேனி
பனுவினுவிரிசி-வலசினஸ்ரீரகு
குலவரப்ரோவுமு-த்யாகராஜநுத ||

### பதஉரை

ப— சரசர=தர்ப்பையை பாணமாக உடையவரே
ஸமரைகசூர=யுத்தத்தில் பிரதானமான சூரனே.
சரதி=சமுத்திரத்தின்
மத=கர்வத்தை
விதார=அக்கியவரே

அ— ஸுரரிபு=தேவசத்துருவான (இராவணனது)
மூலபலமனு=மூலபலமெனப்பட்ட
தூலகிருலகு=பஞ்சுமலைக்கு.
அனலஸமமௌ=அக்கினிக்குச் சமமான
ஸ்ரீராம—ஸ்ரீ ராம பிரானே.

ச— தொலி=முன்னுல்
ஜெசின=செய்த
பாபவன=பாபமாகிற காட்டிற்கு
குடாரமா=கோடரி போன்றவரே
கலனேன்=யுத்தத்திற்குத் தகுந்ததும்
ஸேயகலேனி=செய்தற்கரிய
பனுவினு=பலம் பொருந்திய வில்லை
விரிசி=ஒடித்து
வெலசின=விளங்கிய
ஸ்ரீரகுகுலவர=பெருமையான ரெகுவம்சத்தில் சிறந்தவரே.
ப்ரோவுமு=காப்பாற்றுவாய்
த்யாகராஜனுத=த்யாக ராஜனுல் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவரே.

### பொழிப்புரை

தர்ப்பையைப் பாணமாக உடையவரும், யுத்தத்தில் பிரதான சூரரும் சமுத்திரத்தின் கர்வத்தை யடக்கினவரும், இராவணனது மூலபலமாகிய பஞ்சுமலைக்கு நெருப்புக்குச் சமமானவரும், பூர்வஜென்மத்தில் செய்த பரபமாகிற காட்டிற்குக் கோடரி போன்றவரும், யுத்தத்திற்குத் தகுந்ததும், செய்தற்கரிய பலமான வில்லை ஒடித்து வெற்றி கொண்ட ரகுகுல சிரேஸ்ட்டரும் ஸ்ரீத்யாகராஜனுல் ஸ்தோஸ்திரம் செய்யப்பட்ட ஸ்ரீராம பிரானே என்னை ரக்ஷிப்பாயாக.

**ஸவரம்**

ப —ஸாமா ஸாமா பா தா தா | தாபா ஸ்நிநித | தபபம மா ; ||
சர சர ஸ்மரை க சூ ர ;
ஸாமாபாதா நீதா-ஸ்நிதப | மா ; மா ; | பத நிததபபம ||
சர திமதவி தா ரா......... அ......

அ—மா நீ தாஸ்ா – நீதாஸ்ா | மாஸ்ாம்ாஸ்ா | ஸ்நிநீ நிததா ||
சூ ர ரிபு மூல பல மனு தூ - வ -
மர் மர் ம்ாம்ா ஸ்ாஸ்ாஸ்ாஸ்ர் | மர் ; ஸ்ா ; | ஸ்நிதப மா ; ||
கி ரு ல க ந ல ச ம மௌ ஸ்ரீ ரா – மா.

ச— தா தா தா ; நீதாஸ்ா ; | நீ தா நீ பா | தா, ப மா ; ||
தொலிஜே ' ஸினபா பவ நகு டர் ; ரமா ;
பா பா பா ; தா தா நீ ; | தா நீ-நிததா—ஸா ; ; ; ||
கலனே நனுஜே யகலே நீ......

"பலவிலுநுவிறசி" என்ற பகுதியை அனுபல்லவி போல் பாடவும்.

**குறிப்பு :** இக்கீர்த்தனையில ராமபணத்தின் மகிமையையும் இராவணனது பஞ்சுமலையை தகிர்த்ததையும் சமுத்திர ராஜனது கர்வத்தை யடக்கியதையும் பலம்பொருந்திய தேவவில்லாகிய (ஜெனகன் மகள் சிதாதேவியின் வில்லை) ஒடித்ததையும், போன்ற இராம பிரானின் பராக்கிரமத்தை எடுத்துக் காட்டும் கீர்த்தனையாகும்.


# படிமுறை அட்சர கணிதம்

**பாடவிதானமும், பயிற்சிகளும், பரீட்சைவினுக்களும்**

படிமுறையாக அமைந்தன

வரிசை நூல்கள் :

6 ஆம் வகுப்புக்கு உரியது 1-60
7 ஆம் ,, ,, — 1-60
8 ஆம் ,, ,, — 1-75

**ஆசிர்வாதம் அச்சகம் சக புத்தகசாலை**

**32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்**

தொலைபேசி : 274

# நோத்முதல் கோபல்லவா வரை

## 24. பண்டாரநாயகவின் அரசாங்கம்

(க. சி. குலரத்தினம்)

திருவாளர் சொலமன் வெஸ்ற் றிச்வே டயஸ் பண்டார நாயக அவர்களைத் தலைவராகக் கொண்ட மக்கள் முன்னணி அரசாங்கத்தை அமைத்தது. புத்தளத் தொகுதியின் பிரதி நிதியாய கமீத் குசெயின் சீக் இஸ்மெயில் அவாகள் வாசகராய் ஏக மனதாகத் தெரியப் பெற்றுர். இப்பெரியார் முன்னர் முதலாவது பாராளுமன்றத்தில் 1949 முதலாக நிர்வாக சபைகளின் உதவித் தலைவராயும், பின்னர் இரண்டாவது பாராளுமன்றத்தில் 1952 தொடக்கம் உதவி வாசகராயும் இருந்து பாராளுமன்றத்தை அலங்கரித்தவர்.

தம்புல்ல தொகுதியின்பிரதிநிதியாக திரு T. B. தெனக்கூன் அவர்களும், கம்பளைத் தொகுதியின் பிரதிநிதியாக திரு R. S பெல்பொல அவர்களும் முறையே உதவி வாசகராயும், நிர்வாக சபைகளின் உதவித் தலைவராயும் ஏக மனதாகத் தெரியப் பெற்றனர். மூன்றுவது பாராளுமன்றத்தின் முதலாவது வைகல் 20-4-1956இல் ஆள்பதி நாயகம் சேர் ஒலிவர் குணத்திலகா அவர்களால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பண்டாரநாயக அவர்களின் மதிப்புக்குரிய மக்கள் முன்னணி அரசாங்கத்தின் மந்திரசபை பின்வருமாறு முதலில் அமைக்கப்பட்டது :

1. திரு. S. W. R. D. பண்டாரநாயக அவர்கள்.
   பிரதமர், பாதுகாப்பு, வெளிநாட்டுஅலுவல்கள்.
2. திரு. விஜயானந்த தகநாயக அவர்கள்.
   கல்வி.
3. திரு. சாள்ஸ் பார்சிவல், டி. சில்வா அவர்கள்.
   காணி, காணி அபிவிருத்தி, சபைமுதல்வர்.
4. மேற்சபையினர் திரு. மாணிக்கு வடுமேஸ்திரி, கென்றிக் டி. சில்வா Q. C. அவர்கள்
   நீதி.
5. திரு. பீதுரு கீவா. விலியம் டி. சில்வா அவர்கள்,
   கைத்தொழில், மீன்பிடி.
6. திரு. ஸ்ரான்லி டி. சொயிசா அவர்கள்.
   நிதி.
7. திரு. டொன். பிலிப் ரூபசிங்க குணவர்த்தனு அவர்கள்
   விவசாயம், உணவு.
8. திரு. திகிரிபண்டா இலங்கரத்தினு அவர்கள்
   தொழில், வீடமைப்பு, சமூக சேவைகள்.
9. மேற் சபையினர் திரு. அலெக்சாண்டர் பெரேரா யயசூரியா அவர்கள்
   உள்நாட்டு அலுவல்கள்.
10. திரு யயவீரகுருப்பு அவர்கள் உள்ளூர் ஆட்சி கலாசார அலுவல்கள்.

11. திரு கசிலா அப்துல் சமீத் மரைக்காயர் அவர்கள்
தபால், வானொலி, தகவல்.
12. திரு. மைத்திரிபால சேனநாயக அவர்கள்
போக்குவரத்து, வேலைப்பகுதிகள்.
13. திரு. றிச்சாட் கொதபாய சேனநாயக அவர்கள்.
வணிகம், வர்த்தகம்.
14. திருமதி விமலா விஜயவர்த்தன அவர்கள்
சுகாதாரம்.

பண்டாரநாயக அவர்கள் 1956 இல் அமைத்த மகாசன எக்சத் பொரமுன எனப்படும் மக்கள் முன்னணியை, முதலாவது மக்கள் ஐக்கிய முன்னணி என்றே நாங்கள் அழைத்தல் வேண்டும். ஏனெனில் விப்லகார சமசமாசக் கட்சி என்ற பெயரோடு அம்முன்னணியில் சேர்ந்த தோழர் பிலிப் குணவர்த்தனவும் வில்லியம் சில்வாவும். அம்முன்னணி முறிந்ததும் அப்பெயரோடு தாங்கள் பிரிந்து போயினர். எனவே பண்டாரநாயக அவர்களின் கட்சியினர் தமது பழைய பெயராய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் இயங்கினர்.

முதலாவது மக்கள் முன்னணியில் 1956 இல் வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைத்த 51 பிரதிநிதிகளுள் ஆறு பேர் தோழர் பிலிப்குணவர்த்தனவின்விப்லகாரி சமசமாசக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அறுவரும் 1959 இல் பண்டாரநாயக அவர்களோடு அபிப்பிராய பேதப்பட்டபோது அரசாங்க வரிசையை விட்டு எதிர்க்கட்சி வரிசையை அலங்கரிக்க விலகல் செய்தனர். தோழர்கள்பிலிப், விலியம் சில்வா, மாத்தளைப் பிரதிநிதி நிமால் கருணதிலக, கண்டிப் பிரதிநிதி பி. தெனக்கூன், அம்பாந்தோட்டைப் பிரதிநிதி லக்ஸ்மன் ருசபக்சே, கொழும்பு மத்தி மூன்றுவது பிரதிநிதி தெமிஸ் ஆகிய அறுவரும் ; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரான டெடிகமப் பிரதிநிதி திரு. எம். பி. கேறத் அவர்களும் மக்கள் முன்னணியை விட்டு விலகி இருந்தனர். இவர்களே இரண்டாவது மக்கள் முன்னணியினராவர். இது நிறக,

மக்கள் முன்னணிக்கு நல்ல பெரும்பான்மைப் பலம் இருந்தது.



**பூனை எலிபிடிக்கும் என்று தானே நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதற்கு மாறாக எலிக்குஞ்சுக்குப் பூனை பால் கொடுத்த சம்பவம் நடைபெற்றுள்ளதென்றால் அது அதிசயம் தானே. ஆமாம் ! இது உண்மை —கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இந்தியாவில் கோவை மாவட்டம் என்ற இடத்தில் ஒருவரின் வீட்டில் தன்னந்தனியாகக் கிடந்த எலிக்குஞ்சொன்றுக்கு பூனை தனது குட்டிகளோடு சேர்த்து பால் கொடுத்து வளர்க்கிறதாம்.**

**— அ. கனகசூரியர்**

எதிர்க்கட்சியினர் ஆறு தனிப்பட்ட கட்சியினராய், எவராவது 14%பிரதி நிதித்துவத்துக்கு மேற்படாதிருந் தனர். பண்டாரநாயக தமது முன்னணியினரை முதலில் வெகு கௌரவமாகக் கூட்டி வைத்திருந் தார்.

பிரதமர் பண்டாரநாயகவுக்கு அவர்தம் தேர்தற் பிரசாரத்தின் போது வாய்ப்பறை சாற்றிய வெளிப் பகர்ப்புக்களை நிறை வேற்றி நடை முறையிற் கொண்டு வரவேண்டிய பொறுப்புகள் ஏற் பட்டன. அவையாவன : இலங் கையை ஒரு குடியரசாக்குதல், தோட்டங்கள் பெருந் தொழில்கள் என்பனவற்றைத் தேசியமயமாக் குதல், பிரித்தானியரின் இராணுவ தளங்களைத் திருக்கோணமலையி னின்றும் கட்டுநாயக வினின்றும் நீக்குதல் என்பனவாம்.

பண்டாரநாயக அவர்கள் ஆட் சிக்காலத்தில் ருசியா, போலந்து, ருமேனியா, இஸ்ரவேல் ஆகிய நாடுகளோடு தூதமைச்சர்களை நிறு வித் தொடர்பு கொண்டார். சீனப் பிரதமர் சூ என்லாய், இந்தியப் பிரதமர் நேரு, யப்பானிய பிரத மர் கிசி ஆகியோர் இலங்கைக்கு வருகைதந்து சிறப்பித்தார்கள். இலங்கையை ஒரு குடியரசாக்குதல் வேண்டும் என்றும் அதற்கானவழி களில் அரசயாப்பைத் திருத்திய மைத்தல் வேண்டும் என்றும் நட படிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை பரிபூரண சுதந்திரம் பெற்று ஆணிலப்பதநாடாய் தன் இறைமைப்பலமுள்ளதாய் நிலவிய போதிலும் 1955ம் ஆண்டு வரை யில் ஆங்கிலேயரின் நிழலில் ஒதுங்கி வாழ்ந்தது என ருசியர் போன்ற பிற நாட்டினர் கருதி னர். அதற்குக் காரணமில்லாமல் போகவில்லை. இலங்கையின் மிகப் பெரிய இயற்கைத் துறைமுகமாய திருக்கோணமலையில் பிரித்தானிய ரின் கடற்படையும், கட்டு நாயக விமானத்தளத்தில் அன்னாரின் விமானப்படையும் தங்கியதால்

---

**உங்கள் அச்சு வேலைகள்**

★ தமிழ்

★ සිංහලම්

★ ENGLISH

**எந்த மொழியில் செய்யப்படவேண்டும்?**

# ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

**என்ற விலாசத்தில் விசாரியுங்கள்.**

போண் : 274

பிறர் அவ்வாறு கருதினர். எனவே பண்டாரநாயக பிரித்தானிய தளங்களை மாத்திரமல்ல அவர்கள் இலங்கையருக்கு அளித்துக் கௌரவித்துவந்த பட்டங்கள் பதக்கங்களையும் நிராகரித்து இல்லாமல் செய்துவிடுவதாக பண்டாரநாயக தமது தேர்தற்கொள்கையில் முன்னர் குறிப்பிட்டுவந்தார். அங்ஙனமே அவர் 15-10-57இல திருக்கோணமலைத் தளத்தையும் 1-11-57இல் கட்டுநாயக தளத்தையும் வெள்ளையரிடமிருந்து வெற்றிகரமாக மீட்டார்: "வெள்ளையனே வெளியே போ"எனப் பிறர் செய்கின்ற கூக்குரல் எதுவுமின்றிப் பண்டாரநாயக அதனைச் சாதித்து விட்டார்.

பிரித்தானியர் தந்திரோபாயங்கள் தெரிந்த பெரிய பேரரசுவாதிகள். அவர்கள் முன்னர் நிலவிய தமது பெரிய சாம்ராச்சிய நாடுகளை அச்சுக் குலையாமல் கவர்ச்சிகரமான புதிய பெயரில் பொதுநலவாய நாடுகள் எனப் பெயரிட்டுத் தமது சின்ன விரலசைய அந்நாடுகள் பொம்மைகளாக ஆடும் வண்ணம் வைத்திருந்தார்கள். அதற்காகவே பிரித்தானியர் கேந்திரத் தானங்களாய ஜிப்ரோல்ரர், ஏடன், திருக்கோணமலை, கொங்கோங் முதலிய இடங்களைத் தமது சொந்த நிலங்களாகவோ அல்லது குத்தகை நிலங்களாகவோ வைத்திருந்தனர்.

பண்டாரநாயக அவர்களைப் பொறுத்த மட்டில் அவர் பேரரசுவாதிகளை விரும்பவில்லை. பொதுநலவாயத்தையும் விரும்பவில்லை. ஆனுல் அவருடைய குமரப் பருவத்தில் அவர் முதலாவது மகாயுத்தத்தின் போது யுத்த நிதிக்காக-பேரரசு வாதிகளின் திருவிளையாடல்களுக்காக ஆயிரக் கணக்கில் அள்ளிக் கொடுத்த வள்ளலாய் இருந்தவர் என்பதை மறக்க முடியாது.

பண்டாரநாயக அவர்கள் சீனுவுடன் நெருங்கிய தொடர்பு பூண்டார். சீன அரசாங்கம் இலங்கைக்கு 7,50,00000ரூபா றப்பர் செய்கையின் அபிவிருத்திக்கும் 7,0000000ரூபா நெசவுத் தொழிற்சாலை வேலை செய்வதற்கும் உபகரித்தது. பண்டாரநாயகஇலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தியடைவதற்கு முயற்சி செய்தார். சீனித் தொழிற்சாலை, உப்புத்தொழில், சீமெந்து, ஓடு, உரம் மின்சாரக் கருவிகள், சைக்கிள் வண்டி உபகரணங்கள் என்பனவுக்காக ஊக்கமெடுத்தார். வருடந்தோறும்15000 சைக்கிள் வண்டிகள் இலங்கையில் உருப்படியாக்கப்பட வேண்டுமென்ருர்.

இலங்கையைக் கைத்தொழில் வளமாக்குவதால் பழைய விவசாயத்தைக் கைவிடுவதென்பதல்ல. யப்பானிய நெற்சாகுபடி முறையில் நல்ல பசளையிட்டு விளைவைப் பன்மடங்கு அதிகரிப்பிக்கவும்,உலர் வலயக் காடுகளில் தேக்கு முதலிய பயன் தருமரங்களை நாட்டவும் வழி வகுக்கப்பட்டது. புதிதாக 39000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெற்றது. அதிலே 7800 குடும்பங்கள் 5,50,00000ரூபா செலவில் குடியேற்றப் பெற்றனர். இத்தகைய முன்னேற்றங்கள் நடைபெற்றபோதிலும் சாபக் கேடான நிகழ்ச்சிகள் 1957 இன் பிற்பகுதியில் நடைபெற்றன. கனத்த மழையும் பெரு வெள்ளமும் நிலச்

சரிவும் காரணமாக 60 பேர் இறந்தனர், 20000 மக்கள் வீடிழந்து தவித்தனர், அரசாங்கத் திணைக்கள அலுவலகங்கள் அழிந்தன. இவற்ருல் 50,0000000 ரூபா பெறுமதியான சேத மேற்பட்டதென்பர்.

இலங்கைச்சரித்திரத்தில்முன்னர் 1915ம் ஆண்டில் சிங்களவருக்கும் சோனகருக்கும் இடையில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்திலும் பார்க்கப் பெரிய அளவில் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் 1958ம் ஆண்டில் வகுப்புக் கலவரம் நடைபெற்றது. அதைபபற்றி இங்கே விபரிக்காமல் வேரெருசந்தர்ப்பத்தில் விபரமாய அறியத்தரலாம்.

பண்டாரநாயக பொதுவுடைமை நாடுகளுடன் மேலும் நெருங்கிய தொடர்புவைத்தார். அதனுல் ருசியாவிலிருந்து வர்த்தகக் குழுவினர் 17 பேர் இலங்கைக்கு வருகைதந்து இரு நாடுகளின் வணிகப்பெருக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடி ஆலோசித்தனர். பொருளாதார தொழில் நுட்ப உதவி என்ற அம்சத்தில் ருசியர் 12,0000000 ரூபாவை 12 ஆண்டுகளில் வழங்குவதாக உடன்பட்டனர். சீன 'அரசாங்கம் 50,0000000 ரூபா உதவியைக் குறைந்த வட்டியில் தந்துதவுவதாக உடன்பட்டது. கானு நாட்டு வர்த்தகக் குழுவினர் இலங்கைக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். பிரித்தானியா, நியூசீலந்து ஆகிய நாடுகளின் பிரதமர்கள் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு வருகை தந்து சிறப்பித்தார்கள்.

மக்கள் முன்னணியைத் திறம்படக் கூட்டியமைக்கப் பக்க பலமாயிருந்தவரும் அதன் மகத்தான பூட்கைகளை வகுத்தவருமான தோழர் பிலிப் குணவர்த்தனு அவர்கள் சமதர்மப் போக்கில் அரசாங்கத்தை இழுத்துக் கொண்டு போனதை மந்திரத்திலும் அரசாங்கப்பிரதிநிதிகள் கூட்டத்திலும் இருந்த முதலாளி வர்க்கத்தார் அறவே வெறுத்தனர். வெள்ளைக்காரர் நூறுவருடங்களுக்கு முன் ஒரு ரூபா ஒன்றரை ரூபா கொடுத்து ஏக்கர் கணக்கில் நிலம் வாங்கி இன்றுவரை எத்தனை கோடி ரூபா உழைத்து விட்டார்கள். எனவே இனிமேல் இலங்கை தனது அரசை ஏற்படுத்திய பின் பிறர் சுரண்ட வாழமாட்டாது. வெள்ளைக்காரத் துரைமாருக்கு ஏதாவது நட்டஈடு கொடுத்துத் தோட்டங்களைத் தேசத்தின் சொத்தாக்க வேண்டும் என்று இடவர்கள் முயன்றதை முதலாளிகள் விரும்பவில்லை. முதலாளிகள் பிலிப் அவர்களையே வெளியேற்ற முயன்ருர்கள். அதில் வெற்றியும் பெற்ருர்கள்.

தோட்டப் பகுதி தேசத்தின் சொத்தாக்கப்படாவிட்டாலும் உலகம் புகழும் கொழும்புத்துறை முகம் தேசத்தின் சொத்தாக்கப் பட்டது. ரயர் ரியூப் தொழிற்சாலையும் உருக்குத் தொழிற் சாலையும் ருசியர் உதவியில் உருவாக்கப் பட்டன.

இலங்கையை ஒரு நலந்தரும் நாடாக அமைத்தல் வேண்டும் என்றே பண்டாரநாயக கணுக்கண்டார். நலந்தரும் நாடென்றல் அங்கு வாழும் குடிமக்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் குறைவில்லாமல் செய்து வழங்கும் அற்புதமான ஒரு கற்பக நாடு எனலாம். இராமராச்சியம்

என்றும யூரோப்பியா என்றும் பழங்கதைகளில் அது பற்றிப் பேசப்படும். பிரித்தானியாவில் பிவ ரிச் திட்டம் நடைமுறைக்கு வந்த பின் அது ஒரு நலம் புரிநாடு எனப்படும். அது போன்ற அமைப் பைப் பண்டாரநாயக பெரிதும் விரும்பினர். பிச்சைக்காரர் இல் லாத நாடு அயோத்தி. கொள் வார் இலாமையால் கொடுப்பாரும் அங்கே இல்லை என்பர் கம்ப நாடார்.

யூகோசிலோவகிய நாட்டுத் தலைவர் திரு. மார்சல்ரிரோ அவர் கள் 1959ம் ஆண்டின் சனவரி மாதத்தில் இலங்கைக்கு வந்தார் கள். அவர் மூன்று ஆண்டுகளில் 70,000000 ரூபா உதவி தருவதாக வாக்களித்தார். சீனவுடன் இலங்கை செய்த பழைய உடன் படிக்கை புதுப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இலங்கை 30,000 தொன றப்பர் அனுப்பவும் 2,30,000 தொன் அரிசிபெறவும், ஒழுங்கு செய்யப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தில் ஒரு அம்சத்தைக் குறித்தால் முந் திய ஆண்டைவிட இவ்வாண்டிலே ஏற்றுமதி வருமானம் 2,90,00000 ரூபாவால் அதிகரித்து 171,10,00000 ரூபாவாய் இருந்தது. இறக்குமதி வெகுவாகக் குறைந்தது. முன்னர் 180,50,00000 ரூபாவா யிருந்த தொகை இப்போது 173,60,00000 ரூபாவாயிற்று.

தேசீயத் திட்டமிடல் சபை பத்து ஆண்டுத்திட்டம் என ஒரு திட்டத்தை ஆரம்பித்தது. அதன் படி 1360,10,0 0000 ரூபா செல விடவும் இதில் 61% அரசாங்கப் பணமாயும் 39% தனியார் முதலீ டாயும் இருக்கும் எனத்திட்டமிட்ட னர். தேயிலை, றப்பர், தென்னை நடுகைக்கு 120,0000000 ரூபாவும், கைத்தொழில் அபிவிருத்திக்கு 271,40,00000 ரூபாவும், செலவா கவும் இத்திட்டத்தில் 1958-ம் ஆண் டளவில் 2,37000 மக்கள் வேலை வாய்ப்புப் பெறவும் தயாரிக்கப் பட்டது. அன்றித் தேசிய வருமா னம் 474,20 00000 ரூபாவிலிருந்து 890,50,00000 ரூபாவாக உயரும் என்றும் எல்லாமாய் 1400000 புதியவேலை வாய்ப்புக்கள் ஏற்படும் எனவும் அமைப்பாளர் கருதினர்.

முன்னர் 1958-ம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்ட அவசரகாலம் 10 மாதங்கள் நிலவிற்று. அந் நிலைமை 13-3-59 இல் நீக்கப்பட்டது.

**சேர்ந்துவிட்டீர்களா !** **சந்தாதரராக**

**விவேகி**

**இன்றே சேருங்கள் பயன்பெறுங்கள்**

**விவேகி**

29, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

## சைவ உலகத்தின் பேரிழப்பு

# சர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் மறைவு



(திருக்கேதீச்சரம் சிரமதானத் தொண்டர்களுடன் சர். வைத்தியநாதன்)

இலங்கை வாழ் சைவப் பெருமக்களின் சிந்தையைக் கலக்கிய துக்கத்துக்குரிய நாள் 27-8-65 வெள்ளிக்கிழமை என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கடந்த பத்துவருடங்களாக திருககேதிச்சரம் ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டு அல்லும் பகலும் உழைத்து வந்த செம்மல் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தமது எழுபத்தோராம் வயதில் மரணத் திரையுள் மறைந்தார் என்று கேள்வியுற்றதும் திகைப்படையாதார் எவருமில்லையென்றே கூறலாம்.

பத்துவருடங்களுக்கு முன்னர் சைவத் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்திருந்த இவர் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் வீடமைப்புமந்திரியாக கடமையாற்றியவராவர்.

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவராய இவர் விஞ்ஞானப்பட்டதாரியாகி, சிவில் சேவையிற் பிரவேசித்து, பின்னர் முறையே நீதியரசராகவும், அரசாங்க அதிபராகவும் கடமையாற்றி, நிரந்தரக் காரியதரிசியாகவும் செனட்டராகவும், உயர்வுகள் பெற்றுச் சேவை செய்தவராவர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சைவப்பிரசாரம் செய்து பெருமை பெற்ற இவர் திருக்கேதீச்சரப் பணிகளுக்காகச் செய்யவேண்டிய கருமங்கள் யாவற்றையும் செய்து முடித்து, தம்மையே அர்ப்பணம் செய்துள்ளமை சைவப் பெருமக்களின் மனத்தைவிட்டு என்றும் அகலாது என்பது துணிபு.

சர். வைத்தியநாதன் அவர்களது குடும்பத்தினருக்கும், சைவப் பெருமக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வைத்தியப் பகுதி-4

# நோயை நிதானித்தலும் பரிகரித்தலும்

## 1, பொதுவான நோய்கள்

ஜே. கொன்ஸ்ரன்ரைன்

இப்பகுதியில் மானிடர் யாவரையும் தாக்கக்கூடிய சில நோய்களைப்பற்றி ஆராய்வோம். காய்ச்சல் என்பது எவரையும் தாக்கக்கூடியது. உணவு, நீர் என்பவற்றின் வேறுபாடுகள் பகல்தூக்கம், இரவு நித்திரை விழிப்பு, மழை, பனி, வெயில் ஆதியவற்றால் தாகுண்ணுதல் பருவகாலம் மாறுவதினால் ஏற்படும் சீதோஷ்ண வேறுபாடு, 14 வேகங்களை அடக்குதல், அதிர்ச்சி, பயம், கடும் கோபம் உடம்பில் விஷம் சேருதல் முதலிய காரணங்களினால் காய்ச்சல் உண்டாகின்றது.

காய்ச்சல் எண்வகைப்படும் அவை : வாதசுரம், பித்தசுரம், சிலேட்மசுரம், வாதபித்தசுரம் வாதபித்தசிலேட்டமசுரம் சிலேட்ம சுரம், சன்னிசுரம், ஆகந்துகசுரம் என்பனவாம். இவற்றில் கடைசியிற் கூறிய ஆகந்துக சுரமானது புறக்காரணங்களினால் அதாவது, விழுதல், விபத்தில் சிக்குதல், பயம், சரீரத்தில் விஷம் சேருதல் முதலிய காரணங்களால் உண்டாவது. ஏனையவை அகக் காரணங்களினால் உண்டாவன. இவற்றில் சன்னி சுரம் தவிர்ந்த ஏனைய சுரங்களின் குணங்கள் சகலருக்கும் தெரிந்திருக்குமாதலின் அவற்றை விவரிக்கத் தேவையில்லை என் நம்புகிறேன். சன்னி சுரமானது பின்வரும் குணங்குறிகளை யுடையதாகவிருக்கும். அவையான : பொருத்துக்களில் மிகுந்த வேதனை, தலையில்வேதனை கண் இமைகள் ஒட்டிக் கொள்ளுதல், நித்திரை இன்மை, பசிஇன்மை, தேகத்தின் மீது சிவப்பான அல்லது கறுப்பான கிரந்தித் தடிப்புகள், நெஞ்சில் முட்டு, எந்நேரமும் சளி இழுப்பு, மலசலம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவருதல், விக்கல், மேல் மூச்சு, தேகமானது சிலவேளை கடும் உஷ்ணமாயும், சில வேளை கடும் சீதளமாயும் இருத்தல், நாவறட்சி, நாக்கில் முட்கள் உண்டாதல். காதுகளில் இரைச்சல், கண்டபடி பிதற்றுதல் முதலியனவாகும். இக் குணங்கள் சிலதோ, எல்லாமோ காணப்படின் சன்னி சுரம் என நிதானித்துக் கொளளலாம், இந்தச் சன்னியானது 13 வகைப்படும். அவற்றுள் தாந்திரிக சன்னி சாந்திக சன்னி ஆகிய இரண்டும் சுகமாக்கப் படக்கூடியன. அதாவது சாத்தியம். மற்றும் சிங்கசன்னி கண்டகுப்த சன்னி, சித்திப்பிரம சன்னி, கர்ண சன்னி, ஆகியநான்கும் கஷ்டத்தின் மேல்சொஸ்தமாக்கப்படக்கூடியன. அதாவது கஷ்டசாத்தியம் ஏனைய நேத்திரசன்னி, பிரலாப சன்னி இரத்த சன்னி, அந்தக சன்னி, தாகசன்னி, சீதள சன்னி, அபிநியாச சன்னி ஆகிய ஏழும் சொஸ்தமாக்க முடியாதன. அதாவது அசாத்தியம்.

இப்பதின்மூன்று சன்னிகளுள் எதுவாயினும் முகத்தில் விகற்ப இலட்சணத்தைக் காட்டுமாயின் அதை முகவாத சன்னி எனவும், பெண்களுக்கு பிரசவகாலத்தில் காணப்படுமாயின் காயாசன்னி என்றும், சூதககாலத்தில் தோன் றின் சூதகசன்னி என்றும் கூறப் படும். ஏனையவற்றையும் இங்ங னமேகொள்க.

**சன்னிகளுக்குக் கால எல்லை:**

சாத்திய சன்னிகளில் தாந் திரிக சன்னிக்கு 31 நாள். சாந்திக சன்னிக்கு 7 நாள்.

கஷ்டசாத்திய சன்னிகளில், சிங்கசன்னிக்கு 17 நாள். கண்ட குபத சன்னிக்கு 13 நாள். சித்தப் பிரமசன்னிக்கு 19 நாள். கர்ண சன்னிக்கு 60 நாள்.

அசாத்திய சன்னிகளில் நேத் திர சன்னிக்கு 8 நாள், பிரலாப சன்னிக்கு 14 நாள், இரத்த சன் னிக்கு 11 நாள், அந்தக சன்னிக்கு 11 நாள், தாக சன்னிக்கு 21 நாள் சீதள சன்னிக்கு 15 நாள். அபி ஞயாச சன்னிக்கு 15 நாள்.

இக்குறிப்பிட்ட கால எல்லை யிலே இச் சன்னிகள் படிவடையும், அல்லது இக்கால எல்லைக்குள் மரணத்தை விளைவிக்கும்.

இனி காய்ச்சல் சன்னி என்ற தலைப்புகளின் கீழ் ஆராயப்படுவன வாயும் வழக்கத்தில் உள்ளவையு மான சுரவகைகளை விவரிப்போம்.

இதில் விவரிக்கப்படும் நோய் கள் யாவும் முன்னர் கூறிய எண் வகைச் சுரங்களின் ஜன்ய சுரங் களே என உணரவும். முற் குறிப் பிட்ட ஆகந்துக சுரத்தின் பிரிவு கள் வருமாறு: அவை நான்கு வகைப்படும்.

1. அபிசாரசுரம்: பசாசுக ளின் ஆதிக்கத்தால் உண்டாகிறது. இச்சுரம் கண்டோர்க்கு மேனியெங் கும் பெரிய பெரிய கொப்புளங்கள் தோன்றும். தெய்வங்களின் உத வியை நாடியும், வைத்திய உதவி யுடனும் இதைச் சொஸ்தப்படுத்த லாம். இது கஷ்டசாத்திய நோயாகும்.

2. சபித்தல் சுரம்: தெய்வ கோபத்தினாலும், பெரியோரின்


# கேள்விப்பட்டீர்களா?

**குக்கல் மாத்திரை**

**குக்கல் கிருதம்** இவற்றை உபயோகித்து நூற் றுக் கணக்கான சிறுர்கள் கொடிய குக்கல் நோயி னின்றும் விடுதலை பெற்றிருக்கிறுர்கள். ஏன் உங்கள் பிள்ளைக்கும் இந்த மருந்துகளை உபயோகித்துப் பயனடையக் கூடாது

தேவைக்கு

ஜே. கொன்ஸ்ரன்ரைன்

வைத்தியர்

அச்சுவேலி

சாபத்திஞலும் உண்டாகும். தெய்வ உதவி, பெரியவர்களின் ஆசி வைத்திய உதவி என்பனவற் ருல் சொஸ்தமாகும். இதுவும் கஷ்டசாத்தியமானது.

3. அபிகாத சுரம்: அடிபடு தல் எலும்பு உடைதல், காயம், நெருப்பின் உஷ்ணம் உடம்பு அலுக்க வேலை செய்தல் ஆகிய காரணங்களிஞல் இந்நோய் உண் டாகிறது. பரிபக்குவ முறைகளா லும்சத்துள்ள உணவுகளை உண்பதி ஞலும் இந்நோய் சொஸ்தாகும்.

4. அபிஷேகசுரம்: புறத்தி லிருந்து உடம்பில் விஷம் சேர்வதி ஞல் உண்டாகிறது. உடம்பில் ஊறிய விஷத்தை அகற்றுவதி ஞல் இந் நோய் சொஸ்தமாகும். விஷம் சேருவது பல விதங்களில் உண்டாகும். விஷப்பிராணிகள் நம்மைத் தீண்டுவதிஞல், நச்சுப் பொருட்களை உண்டதிஞல், சுடு காடு, சாக்கடை முதலிய இடங் களிலுள்ள நச்சுக் காற்றைச் சுவா சிப்பதிஞல், மதுபானங்களை மித மிஞ்சிக் குடிப்பதிஞல், இன்னே ரன்ன காரணங்களிஞல் புறத்திய லுள்ள விஷங்கள் நம் சரீரத்துள் சென்று விடுகின்றன.

**முறைக்காய்ச்சல்:**

இது குளிர்சுரம் எனவும் கூறப் படும். சுரமானது தோலைப்பற்றி நின்று காயுமாயின் இரவும் பக லும் காய்ந்து கொண்டிருக்கும். இரத்தத்தைப் பற்றிநின்ருல் இர வில் ஒரு சில மணிநேரமும், பக லில் ஒரு சில மணிநேரமும் காயும். தசையைப் பற்றி நிற்குமாயின் ஒன்றுவிட்டொரு நாள் காயும். சப்ததாதுக்களைப் பற்றி நிற்குமாயின் மூன்று நாளுக் கொரு விசைகாயும். எலும்பைப் பற்றி நிற்குமாயின் நாலு நாட்க ளுக் கொருவிசை காயும். மச்சை யைப் பற்றி நிற்குமாயின் ஐந்து நாட்களுக் கொருமுறை, அல்லது ஆறுநாட்களுக்கொருமுறைகாயும். ஈண்டு குறிப்பிட்ட சுரவகைகளின் மூலம் ஜன்மிக்கும் சுரங்கள் அனந் தம் அவற்றின் ஜன்மங்கள் 64 வகையெனவும், அவை ஒவ்வொன் றிலுமிருந்து ஜன்மிக்கும் சுரவகை கள் 274 எனவும் நூல்கள் விவ ரிக்கின்றன. இவற்றை விரிக்கப் புகின் பெருகுமாதலின் இத்துடன் நிறுத்துதல் நன்றெஞ எண்ணுகி றேன். இனிச் சுரத்துக்கான சிகிச் சைகளை ஆராய்வோம்.


**விஷம்தீண்டிற்ரு?**

**விஷம் தீண்டியபின் நாள்கணக்கில் மயக்கமா?**

**பழைய விஷமா?**

**எதுவாஞலும் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.**

**ஜே. கொன்ஸ்ரன்ரைன்**

**விஷகடிவைத்திய**

**அச்சுவேலி**

**1. அசீரணத்துடன் கூடிய சுரத்துக்கு :**

நெல்லிவற்றல், தான்றிக்காய், கடுக்காயோடு, திப்பிலி, மோடி, மிளகு, சுக்கு, வசம்பு, சித்தர்மூலம் இவற்றைச் சமஎடை கூட்டி கஷாயம் செய்து சாப்பிடலாம்.

**2. முறைக் காய்ச்சலுக்கு :**

(அ) நெல்லிவற்றல், தான்றிக் காய், வெட்பாலே வேர், பேராமட்டி, நிலவேம்பு, கடுக்காய்த் தோல், சுக்கு இவற்றை சமஎடை கூட்டி கஷாயம் செய்து பருகலாம். அல்லது,

(ஆ) சீந்தில், சிற்றமட்டி, பேரமட்டி, சித்தர் மூலம், நிலவேம்பு, சுக்கு, நிலப்பனங்கிழங்கு, வேப்பம் கூர் இவற்றைச் சம எடை கூட்டிக் கஷாயம் வைத்து உண்ணச் சகல முறைக் காய்ச்சலும் பரிதி முன் பனிபோலப் பறந்தோடும். அல்லது

(இ) ஆடாதோடை, பேய்ப்புடல், வெட்பாலேப் பட்டை, திராட்ஷை, அதிமதுரம், தேவதாரு, திரிபலே, சீந்தில் கொடி, கோரைக் கிழங்கு இவற்றைச் சம எடை கூட்டி கஷாயம் வைத்துத் தேன் கலந்து பருக எந்த விதமான நாட்பட்ட முறைக்காய்ச்சலும் ஒழிந்து போகும்.

**3- மாலேயில் காணும்சுரத்துக்கு:**

கடுகு ரோகணி, கண்டங்கத்தரி வேர், திப்பிலி, சுக்கு. நிலவேம்பு, பேய்ப்புடோல், தும்மட்டி வேர், நெல்லிவற்றல் இவற்றை சம எடை கூட்டிக் கஷாயம் செய்து அருந்தலாம்.

**4. இரவில் காணும்காய்ச்சலுக்கு:**

(அ) சுக்கு, மிளகு, பேராமட்டி, தும்மட்டி வேர், பாலேவேர். நிலேப்பாலே வேர், சகதேவி வேர், இவற்றைச் சம எடைகூட்டிக் கஷாயம் செய்து அருந்தலாம். அல்லது,

(ஆ) மும் முட்டிகள் (சிற்றுமுட்டி, பேரா முட்டி, நாகமுட்டி) சுக்கு, பாலேவேர், விஷ்ணு கரந்தை இவற்றைச் சம எடை கூட்டிக் கஷாயம் செய்து அருந்தலாம,

# பலதும் பத்தும்......

—ஜோ. ஏ எம் தாஸ்—

இரண்டு திருடர்கள் ஒரு வீட்டில் திருடினுர்கள்.

"வீட்டுக்குப் போவதற்குள் நாம் திருடிய பணம் எவ்வளவு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்துவிடுவோமே?" என்ருன் ஒரு திருடன்'

"நமக்கு ஏன் அந்தக் கஷ்டம்? காலேயில் பேப்பரில் பார்த்துத் தெரிந்து கொண்டால் போகிறது !" என்ருன் மற்றவன்.

★ ★ ★

மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாற்றை 'சுத்தானந்தா பிக்சர்ஸ்' என்ற படத்தயாரிப்பாளர்கள் தயாரித்து வருகிருர்கள். இதில் மாணிக்கவாசகராக, கவியோகி சுத்தானந்த பாரதியார் நடிக்கிருர் ! பாண்டிய மன்னனுக எஸ். வி. சுப்பையா நடிக்கும் இப்படத்தின் கதை, வசனத்தை சுத்தானந்த பாரதியாரே எழுதியுள்ளார். மற்றும், முத்துராமன், தேவிகா, மணிமாலா ஆகியோரும்' இப்படத்தில் நடிப்பார்கள் எனத் தெரிகிறது.

5. **சர்வ சுரக் கஷாயங்கள்:**

இவை மிகவும் விசேடமானவை அவை :

(அ) சுக்கு, பற்படாகம், ஆமணக்கம் வேர், கோரைக் கிழங்கு. சித்தர் மூலம், வசம்பு, சிறு கீரைவேர், இவற்றைச் சம எடை கூட்டிக் கஷாயம் இட்டு அருந்தலாம் அல்லது,

(ஆ) சித்திர மூலம், செவ்வியம், சீன்றிக் கொடி, விஷ்ணு கரநதை, சுக்கு, நிலவேம்பு, முள்வேலன், இவற்றைச் சம எடை கூட்டி கஷாயம் இட்டு அருந்தலாம். அல்லது,

(இ) பற்படாகம், நிலவேம்பு, சுக்கு, புன்னைவேர், செவ்வியம், பிரியங்கணப்பூ, கடுக்காய்த் தோல், சித்தர்மூலம், இவற்றைச் சம எடை கூட்டிக் கஷாயம் இட்டு அருந்தலாம்.

6. **கபத்துடன் கூடிய சுரத்துக்கு :**

சித்திர மூலம், மரமஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, ரோகணி, வெட்பாலை அரிசி, சிறு நாகப்பூ இவற்றை சம எடைகூட்டி சூரணித்து (வெயிலில் காய வைத்து இடித்து அரித்து எடுத்தல்) மூன்று விரல்களைச் சேர்த்துக் கிள்ளக் கூடிய அளவு எடுத்து வெந்நீரில் கலக்கிச் சாப்பிடுவதுடன் முன் கூறிய சர்வசுரக் கஷாயம் ஒன்றையும் அருந்தி வரலாம்.

8. **சர்வ சன்னிகட்கும் கஷாயங்கள் :**

(அ) கண்டங்கத்தரிவேர், புன்னைவேர், சிற்றுமட்டி வேர், நிலக்கடம்புவேர், போரமட்டி வேர். வில்வ வேர், வல்லவேர், பெருங் குமிழ் வேர், முள்ளங்கத்தரி வேர், வாகைவேர், பாதிரிவேர். சுக்கு இவற்றைச் சம எடை கூட்டிக் கஷாயம் செய்து கொடுக்கச் சகல சன்னிகளும் நீங்கும். அல்லது

(ஆ) சுக்கு, வசம்பு, சேமம், நில்வேம்பு, திப்பிலி, புனைவேர். பற்படாகம் பேய்ப்புடோல் இவற்றைச் சம எடை கூட்டிக் கஷாயம் வைத்துஅருந்தலாம்

படித்துவிட்டீர்களா!

சிறந்தபதிப்பு! குறைந்தவிலை!! நிறைந்தகருத்து!!!

ஈழத்தின் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற எழுத்தாளர்

—டொமினிக் ஜீவா—

அவர்களின் சிறந்த படையலான

**சாலையின் திருப்பம்**

கனிவுநிறைந்த கதைகள்—மனங்கவரும் நடைகள்
படிக்கப்படிக்க உவகையூட்டும் அரியதொகுப்பு.

வாங்கிப் படித்து இன்புறுங்கள்.

விலை: ரூ 2-50

# தம்பிக்கு...!

**(செல்வி இ. சரஸ்வதி)**

என அன்பான தம்பி தமிழ்ச் செல்வா !

உன் அன்புக் கடிதம் கண்டேன். மகிழ்ச்சி. நன்றியும் கூட கடந்த திங்கள் 23 ஆம் நாளன்று நான், கண்டியிலுள்ள ஏழைச் சிறுவர்களின் விடுதியொன்றுக்குச் சென்றிருந்தேன். அதனுற்றான் உன் கடிதத்திற்கு உடனடியாகப் பதிலிறுக்க முடியாமற் போய் விட்டது. அக்கா புரிந்திடும் பணியால் ஏற்படும் சிரமங்கள் நீர் அறிந்த விடயந்தானே? என் செய்வேன? எனக்குப் பிடித்தமான-மன மகிழ்ச்சியான தொழிலும் இதுதானே !

தம்பி ! கடந்த கடிதத்தில் யான் எழுதிய அறிவுரைகளை, ஆழ்ந்து-சிந்தித்துப் படித்திருக்கிருய் என்பதை உனது கடிதம் 'உள்ளங்கை நெல்லிக் கனி'யென எடுத்துரைக்கின்றது. இந்தக் கடிதத்தில் மனித உள்ளத்தில் உறையும் ஒரு பிராணியைப்பற்றி எழுதப் போகிறேன்.

''மனித உள்ளத்தில் உறையும் பிராணியா? இது என்ன பிராணி? இப்படி எழுதியிருக்கிருள் அக்கா? இந்தப் பிராணி எங்கே? எப்படி? எப்போது? வாழுகிறது என்று கேட்கத் தோன்றுகிறதா? திகைக்காதே! கடிதத்தைப் படித்துப்பார் தம்பி ! ஆண்டவனின் படைப்பில் மனிதன் ஓர் (அற்புத) சிறந்த சிருஷ்டியாவான். மனிதன் எல்லாவிதத்திலும் சிறந்த சிந்தனையாளனுகவும், அறிவுடையவனுகவும் சிறப்புற்று வாழ வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். அந்த விருப்பத்தின் பேரில் மனிதனுக்கு ஓரறிவைக் கூடக் கொடுத்துள்ளார் இறைவன். மனிதனுடைய ஓரறிவுத் திறமையினுலேயே, அவனை விலங்கினத்திலிருந்து பிரித்துப் 'பகுத்தறி' வாளன் என்ற பிரிவுக்குள் அடக்கியுள்ளார் இறைவன்.

தம்பி ! மனிதனுக்கு ஆண்டவன் 'பகுத்தறிவு' என்ற ஒன்றை ஏன் படைத்தான்? என்பது பிரச்சனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம். எதையும் உணர்ந்து செயலாற்ற மனிதனுக்கு இந்தப் பகுத்தறிவு மிகவும் பேருதவி புரிகின்றது. பகுத்தறிவு இன்றேல், நாம் மிருகத்தின் குணநடைகளுக்கு ஒத்தவர்களாவோம். மனிதன் மிருக நிலையை அடைந்தால், அவனுடைய நிலைமை என்னவாகும் என்பதை நீ கற்பனைக் கண் கொண்டு சிந்தித்துப் பார் ! அண்மையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்து வெளிவந்த. ''நான் வணங்கும் தெய்வம்'' என்ற படத்தை நீ பார்த்திருப்பாய் என நினைக்கிறேன். அதில் நடிகர் திலகம் மிருகத்தின் நிலையை அடைந்த விடத்து, அவரின் கோர நடிப்பைக் கண்டு என் மேனி சிலிர்த்தது; அப்பொழுது என் சிந்தனை இறைவனின் பால் சென்றது. கடவுள் கருணையுள்ளங் கொண்டவர் என்பதை எண்ணி எண்ணி என்னுளம் புளகாங்கிதமடைகிறது.

கடவுளின் கருணை உள்ளத்திற்கு மனிதப் பிறப்பெடுத்தவர்களாகிய நாம் செய்ய வேண்டிய நன்றிக் கடன் என்ன? அவரளித்த 'பகுத்தறி'வைக் கொண்டு; அன்பை அணிகலனாகப் பூண்டு; பண்பை வளர்த்து; பாரினில் பகுத்தறிவாளர்களாக வாழ்ந்திட வேண்டும். ஆனால் இன்றைய நாகரிக உலகில், அதுவும் இந்த நூற்றாண்டில் மனிதனின் பண்புகளெல்லாம் மாறி, மிருகத்தின் குணங்களை எட்டிப்பிடித்துக் கொண்டிருககிறான். இன்னும் சில காலத்துக்குள் மனிதன் மிருகத்தைப் போல வந்து விடுவானோ? என்று அஞ்ச வேண்டியுளது.

மிருகத்தினிடம் நாம் கூடுதலான நல்ல பண்பு செயல் சிந்தனைகளைக் காண்பதரிது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதனிடம் இக்குணங்களைப் பெருமளவில் நாம் (எதிர்) பார்க்கக் கூடியதொன்று. இப்படிப்பட்ட மனித உள்ளத்தில் தான் 'ஆற்றாமை' என்னும் பிராணி வாழுகின்றது. ஆற்றாமை என்றதும் ஆற்றில் வாழும் ஆமை என்று எண்ணி விடாதே! மனித இதயத்தில் வளரும் "ஆசை" என்னும் நீரில்வாழ்கின்ற 'பொறாமை' என்ற ஆமையைத்தான் ஆற்றாமை என எழுதியுள்ளேன். இஃதே மனித உள்ளத்தில் உறையும் பிராணியாகும். இப்பொழுது புரிகிறதா என்ன பிராணி என்று?

இந்தப் பிராணி மனித இதயத்தில வாழும் வரை மனித சமுதாயம் முன்னேற முடியாது. இதற்கு ஒருபழமொழிகூட உண்டு. "ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது" என்பதே அந்தப் பழமொழியாகும். இதனை நாம் படித்தும், அறிந்தும், கேட்டும் இருக்கிறோம். இந்தப் பழமொழியை நன்கு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தோமானால், இஃது நடமாடுகிற இடமெல்லாம் நாசமாக்கி விடும் என்ற உண்மை தெற்றெனத் தெரிகின்றது.

தம்பி! ஒருவன் வாழ்க்கையில் எத்துணை சிறப்புடையவனாக வாழ்ந்த போதிலும்; இந்த ஆமை அவனது இதயத்தில் வாழுமேயானால்; அனைத்தையும் அடியோடு அழித்து விடும். அதிகமாக இந்த ஆமை இருப்பவர்களிடம், ஒருவருக்கொருவர் கெடுத்து வாழும் குணந்தான் அதிகரித்திருக்கும். எண்ணற்ற பெரியார்களின மரணத்திற்கும், ஒரு நாட்டில் போட்டி பூசல்கள் எற்படுவதற்கும் இந்த ஆமைதான் மூலகாரணம் என்பதை நீ அறிவாயா?

பொறாமையால் மற்றவர்களைப் பழிவாங்கிப் பேரானந்தப் படலாம். ஆனால் அந்த ஆனந்தத்துக்கு அழ வேண்டிய காலம் வராமல் போய்விடாது. இதனைப் பெரும் பாலானோர் உணரத் தவறி விடுகின்றனர். பிறரைத் துன்பத்திலாழ்த்தி இன்பம் காண்பவர்களின் வாழ்க்கையில் மன அமைதியும், மகிழ்ச்சியும் நிலவாது, வாழ் நாள் முழுதும் 'மனச்சாட்சி' என்ற ஒன்று அவர்களை வாட்டி வதைத்துக்கொண்டேயிருக்கும்.

எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றினால் எவ்வாறு எரியுமோ, அவ்வாறுதான பொறாமை' வளரும் இதயத்தில் 'ஆசை' என்ற எண்ணெயை ஊற்றினால் 'பொறாமைத்தீ' சுவாலை

விட்டு எரியத் தொடங்கும். சுவாலை விட்டு எரியும் நெருப்புடன் விளையாடினால் என்ன நடக்கும் ? என்பதை நீ அறிவாய்தானே ? அவ்வாறுதான் பொறாமை என்னும் நெருப்புடன் விளையாடினால், நெஞ்சம் முழுவதையும் எரித்துத் தீய்த்து விடும்.

அன்புத் தம்பி ! இத்தரணியில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனிடமும் 'அறிவு' என்ற ஒன்று இருந்து கொண்டேதானிருக்கிறது. அறிவில்லாதவன் எவனும் இவ்வுலகில் இல்லை. ஆனால், அந்த அறிவை நடைமுறையில் கடைப்பிடிப்பதில்தான் மனிதன் பிசகி விடுகின்றான். எதையும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய, மனிதனின் சிந்தையில்; கொலை, களவுகள், காமம், பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் போன்ற துர்க்குணங்கள் நாளுக்கு நாள் முளைத்துக் கொண்டே வருகின்றன. அவைகளை வேரோடு பிடுங்கி எறிவதற்கு எவருமிலர்.

இன்று நாட்டில் கொலை, கொள்ளை, காமம் போன்ற குற்றங்கள் மிகுந்து காணப்படுகின்றன. இவையெல்லாம் ஏன் ஏற்படுகிறது என்பதை நீ அறிவாயா ? இந்தப் பாழாய்ப்போன 'பொறாமை' செய்யும் திருவிளையாடல்தாம் ! இவ்விதக் குற்றங்கள் புரிபவர்களைச் 'சட்டம்' என்று ஒன்று குறுக்கே நின்று தடுக்கின்றதே அக்கா ? என நீ வினவக்கூடும். அஃதுதான் முற்றிலும் பிழை என்கிறேன் தம்பி. ஏன் தெரியுமா ? குற்றம் புரிபவர்களைச் சில வேளைகளில் சட்டத்திடமிருந்து தப்பிவிடச் செய்ய முடியும். அஃது எப்படி என்பதை நான் இங்கு விளக்கத் தேவையில்லை. நீ உயர் வகுப்பு மாணவனாதலால் அதனைப் புரிந்து கொள்வாய் என நினைக்கிறேன்.

தம்பி ! இவ்வையகத்தில் அனைவரும் பொறாமை இன்றி மகிழ்ச்சியாக வாழவேண்டுமெனின், ஏழைபணக்காரன், உயர்ந்த சாதி–தாழ்ந்த சாதி, படிப்புள்ளவன்–படிப்பற்றவன்; பண்டிதன்–பாமரன் போன்ற இன்னோரன்ன வேற்றுமைகளுக்கு எம் மனதில் இடங் கொடுக்கக் கூடாது. உதாரணமாக :–

ஒரு கெட்டிக்கார மாணவனையும், கெட்டிக்காரனல்லாத ஒரு மாணவனையும் எடுத்துக் கொள்வோம். கெடிக்கார மாணவனை ஆசிரியர் புகழ்வதும், போற்றுவதும் இயற்கைதானே ? ஆனால் கெட்டிக்காரனல்லாத மாணவனைப் புகழவோ, போற்றவோ எந்த ஆசிரியரும் விரும்பார். படிப்பில் உயர்ந்த மாணவனை ஆசிரியர் முதுகில் தட்டிப் புகழும் பொழுது, படிப்பில் குறைந்த மாணவன ஆசிரியரின்செயல்கண்டு மனங் குமுறுவான் ; அவனது இதயம் பொறாமை கொள்ளும் ; வேதனைத்தீயால் வெந்து சாம்பும். இதனால் அவனின் உள்ளமும் உடலும் வலுவிழந்து, படிப்பில் வெறுப்புக் கொள்ளத் தொடங்குவான். அதனால் அவனின் வருங்கால வாழ்வே கெட்டுச் சீரழிந்து விடும். அப்படியானால், படிப்பு ஏறாத மாணவனை என்ன அக்கா செய்வது ? என்ற வினாவை என்னிடம் நீ கேட்கக் கூடும் ?

கேள், பதிலிறுக்கிறேன். நான் இறுக்கும் பதில் உன் வருங் கால வாழ்க்கைக்கு வழிகாட்டி யாக இருக்கட்டும்!

'குணம் நாடிக் குற்றமும் நாடி
அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்'

என்பது வான்புகழ் வள்ளுவனின் வாக்காகும். இக் குறளின் கருத் துப்படி கெட்டிக்கார மாணவனை ஆசிரியர் அன்புக் கரங்களால் அர வணைப்பது போல, கெட்டிக்கார னல்லாத மாணவனையும் அரவ ணைக்க வேண்டும். அப்போது அந்த மாணவன் ஒருவித மன மகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியை யும் அடைவான்; அவனது இதயத் தில் 'பொறாமை' என்ற ஒன்று தோன்ற மாட்டாது; கல்வியிலும் கூடிய கவனம் செலுத்தத் தொடங்குவான்; மற்ற மாணவர் களுடன் மனம் விட்டுப் பழகி, யானும் வருங்காலத்தில் நாட்டுக் கும் வீட்டுக்கும நல்ல இளைஞனாக வருவேன் என்ற நல்லெண்ணம் அவன் நெஞ்சமதில் உதிக்கும்.

தம்பி! நான் இதுவரை கூறிய வற்றிலிருந்து பொறாமை யினின்று விடுபட வழி என்ன என்பதை அறிந்து புரிந்து கொண் டிருப்பாய். இதைப்பற்றி இன் னும் விரிவாக எழுதிச் செல்ல லாம். ஆனால் அக்காவின் கடமை 'வா வா' வென்று அழைக்கிறது. எனவே, இறுதியாக ஒன்று கூறி இக்கடிதத்தை முடிக்கவிருக் கிறேன்.

தம்பியே! வருங்கால வள ரும் பயிர்களாகிய நீரும், உம் முடன் இணைந்து கல்வி கற்கும் இளைஞர்களும் ஒன்று பட்டு சாதி, மத பேதமின்றி; ஒருவருக்கொரு வர் உதவிசெய்து; விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டு; இவ்வையகத்தில் அன்பை வளர்த்து; ஆற்ரு மையை அழித்து; அறிவுடை அறிஞர்களாகவும், ஆன்றோர்க ளாகவும், சான்றோர்களாகவும் சீரிய வாழ்க்கை நடத்துவீர்களாக!

வணக்கம். நலம்

இவ்வண்ணம்,
உன் அன்பு அக்கா
தமிழ்ச் செல்வி

★

ஈழத்தின் பிரபல எழுத்தாளர்
'நந்தி'
அவர்களின் சிறந்த படையலான
'மலைக் கொழுந்து'
வாங்கிப் படித்து இன்புறுங்கள்,
விலை: ரூ. 4/-

இலக்கியத்தில் யானை...4.

# பிடியைப் பழித்த கொடியிடையாள்!

"ஜெயம்." பீ.ஏ.

**சோழ** வளநாடு. சோறுடைய பெருநாடு. காவிரியின் களைப்பால் கவின்கொழி நாடு. கிள்ளிவளவன் ஆண்ட நாடு...... அங்கு.........

நாட்டைச் சுற்றி வலம் வந்து நாட்டின் கோலம அறிந்து செல்வது அரசன் வழக்கம். ஒரு நாள் சோழன் வலம் வந்தான். கால் நடையாகவல்ல யானையின் மீதேறி வருகிறான். ஆம் சோழனைத் தன் முதுகில் எற்றி வரும் யானை ஒரு பெண் யானை. பிடிநடை நடந்து வருகிறது......

அந்நேரம்......

மன்னனைக் கண்டு மையல் கொண்ட மடந்தையர் பலர் தங்கள் தங்கள் வீட்டு வாசலில் நின்று விழி மூடாமல் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். பிடி நடைபோட்ட யானையும் கொஞ்சம் வேகமாகவே நடந்து செல்கின்றது. அதன் காரணமாக அந்தப் பெண்களால் அரசனின் எழிலை அவ்வளவாகப் பார்க்க முடியவில்லை. மையல் கொண்டிருந்த ஒரு மங்கை நல்லாள் எப்படியும் மன்னவனை முழுமையாகப் பார்த்து விடவேண்டும் என்ற ஆவலால்வாயிலண்டை வருகிறாள். ஆனால், பிடியோ வேகமாகப் போய்விடுகிறது. கோபம் அவளுக்குப் பொத்துக்கொண்டு வருகிறது.........ஏசுகிறாள். யாரை. மன்னவனை அல்ல. அவனைச் சுமந்து சென்ற யானையை. ஏசும் போது அவள் பாவிக்கும் சொற்கள் உண்மையிலேயே அவள் மனநிலையைச் சொல்லாமல் சொல்லுகின்றன; பெண்ணுக்கு இயல்பாக ஏற்படும் பொறாமையைப் பொட்டெனக் காட்டுகின்றது. ஆம். அவள் ஏசுகிறாள் இப்படி.........

"பெண் யானையே. சீ. உனக்கு வெட்கம் இருக்கிறதா. பெண்ணாய்ப் பிறந்தும் ஒரு ஆணை உன்மேலேற்றிக் கொண்டு திரிகின்றாய் ஊர்வழியாக. நீல நிறப் பூக்களைப் பறித்து, ஆரம் தொடுத்து கழுத்தில் அணிந்து கொண்டு புது மாப்பிள்ளைப்போல் உன்மேல் ஏறி வலம் வருகிறான் பொன்னிவளவன். நீ வெட்கமின்றி சுமந்து செல்கின்றாய். குளத்தில் பூத்து நீல நிறம் காட்டும் பூக்களைப் போல, மேகக் கூட்டங்களை தவழ்ந்து விளையாடும் இந்தக் காவரி நாட்டின் பெண்குலத்தின் பேரியல்பை அறியாது; கற்பினை பெருமையைக் காவாது செல்கின்றாயே. நீயும் ஒரு பெண்ணா! என்னே அவள் கோபம். அவள் கோபப்படக் காரணம்....நமக்குத் தெரியும் தானே......பிடி என்ன பாவம் செய்தது.........

நீள்நிலத் தார்வளவன் நின்
மேலான் ஆகவும்
நாணாதே என்றும் நடததிய
தால்-நீள்நிலம்
கண்தண்மை கொண்டு அலரும்
காவிரி நீர்நாட்டுப்
பெண்தன்மை அல்ல பிடி.
—(முத்தொள்ளாயிரம்)

# நல்லைக் கீர்த்தனை

(அரியாலையூர் வே. ஐயாத்துரை)

இராகம்-கரகரப்பிரியா, தாளம்-ஆதி

பல்லவி

அன்பர் கூடு மிடமே—ஆனந்தக்
கந்தன் வாழுந் தலமே—நல்லைப்பதி (அன்பர்)

அனுபல்லவி

இன்பங் காணு மிடமே—எழில்மிகும்
செந்தில் வேலனுறை செல்வமோங்கும்பதி (அன்பர்)

சரணம்

தொண்டர் போற்றித்தொழத் துன்பம் நீங்குமிடம்
கண்ட போதில் களி கொண்டு ஆடுமிடம்
வண்டு பாடும்மலர்ச் சோலை சூழவே
என்றும் நல்லையென நின்றி லங்கும்பதி (அன்பர்)

"அல்லல் களைந்திடுவான்"

நல்லைப் பதிதனிலே-நின்றுநித
நாளும் அருள்பொழியும்
செல்வக் குமாரனையே-தினந்தினம்
சென்று வணங்கிடுவோம்

முல்லைச் சிரிப்பினோடு முருகனும்
மோகனப் பவனிசெய்வான்
எல்லை கடந்த அன்பால்-குமரனை
ஏத்தி வணங்கிடுவோம்

கல்விப் பொருள்தருவான்-கைநிறையக்
காசு பணந்தருவான்
அல்லல் களைந்திடுவான்-ஆறுமுகன்
ஆனந்தக் காட்சிகண்டால்

சொல்லிற் சுவைதருவான்-தூயவனைத்
தோத்தரித் தேதுதித்தால்
தொல்வினை யாற்றிடுவான்—கந்தனையே
தூய்மையுடன் துதித்தால்

நல்வகைப் பாடலிலே—குமரனும்
நாளும் நடம்புரிவான்
வல்லமை தந்திடுவான்—முருகனை
வாயார வாழ்த்திடிலே !

# குழந்தை வளர்ப்பும் இலக்கியமும்

இரா. ஐசெக்.

குழந்தைகளுக்காக எழுதுவதற்கு மேனாட்டிலே ஒரு பெரும் எழுத்தாளர்படையேஇருக்கின்றது. அதுமட்டுமல்ல தனிப்பிரசுராலயங்கள், புத்தக நிலையங்கள், பேசும் பட நிறுவனங்கள், அச்சகங்கள், வாசிகசாலைகள் முதலியன வெல்லாங்கூட இருக்கின்றன. கோஷ்டி மனப்பான்மையோ, பிரதேச உணர்ச்சிகளோ, பேதவாதமோ அங்கு இத்துறையைப் பொறுத்த வரை கிடையாது. சற்று விளக்கமாகச் சொல்வதானால் குழந்தை வளர்ப்பைப் பற்றி பெற்றோர்களுக்கு ஆலோசனைகள், பயிற்சிகள் என்பனவும் அங்கு கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் கணித்துப் பார்க்கின்ற போது வாழ்வியல் அமைப்பில் குழந்தைகளுக்கு மேனாட்டார், அளிக்கின்ற மதிப்பு எத்தகையதென நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

## நாளைய மேதை

குழந்தையின் வளர்ச்சிபற்றி மேனாட்டர் குறிப்பிடுகையில், 'இன்றைய குழந்தைகள் நாளைய மேதைகள்' என்று பெருமைப் படுகின்றனர். இது எத்துணை உண்மை என்பதை நாம் சிந்திக்க முற்பட வேண்டும். சிந்தித்துப் பார்க்கின்ற அதே வேளையில் இன்றைய குழந்தைகள் நாளைய மேதைகளாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் முதலில் தெரிந்து கொள்ளல் அவசியம். முதன் முதலில் ஒரு குழந்தையின், எதிர்காலத்தை எண்ணிப்பார்ப்பதற்கு நல்ல பழக்க வழக்கங்களோடு கூடிய உடல் வளர்ச்சியும் பின்பு முறையான கல்வியுந்தான் என்பது முடிபு. நல்ல பழக்க வழக்கம் என்பது பெற்றோரின் கண்காணிப்பாலும், அக்குழந்தை வளர்கிற சூழ்நிலையாலும் பெறப்படும். முறையான கல்வி என்பது பருவத்திற்கு - முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக அமையத்தக்க குழந்தை இயல்புக் கேற்ற கல்வியாகும். இதில் கட்டாயக் கல்வியும் அடங்கும். கட்டாயக் கல்வி, ஆசிரியரின் மனோநிலைக்கும், இயல்புக்கும்ஏற்பத்தான் குழந்தையிடம் நிலைக்கும். பயமுறுத்துவதாலோ துன்புறுத்துவதாலோ குழந்தையின் மனதை மாற்ற முடியாது. இப்படியான குழந்தைகளை திடீலடையச் செய்யும் போக்கு ஆசிரியரிடமோ பெற்றோரிடமோ இருக்குமானால் இளமையிலேயே கல்வியின் மீது குழந்தைகளுக்கு வெறுப்பு ஏற்பட்டு விடும். இந்த விடயத்தில், ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பது மாறி 'இளமையின் வெறுப்பு முதுமைத் துடிப்பு' என்றாகிவிடும்.

ஆகையால் குழந்தையை வளர்க்கின்ற போதே அதன் மன இயல்புகளை அறிய வேண்டும். அங்ஙனம் அறிவதற்கு நம்முடைய மனம் பக்குவப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் பெற்றோரின் - வளர்ப்போரின் மாதிரியைப் பிரதிபலித்துத்தான் குழந்தைகள் வளரும். இதை உணர்ந்துதான் சிசு பராமரிப்பு நிலையமும் மேனாட்டில் இயங்குகிறது.

குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு அத்திவாரமிடக் கூடிய வயது ஒன்றரையாகும். அப்படியென்றால் விளக்கெண்ணெய்குடிக்கப் போகும் குழந்தைக்கு சீனி கொடுப்பதைப் போல, கல்விக்குரிய ஆசையை தொடக்குவிப்பதுடன் இவ்வண்ணம் பெற்ற ஆசையில் மூன்றரை நான்கு வயதில் கல்வியில் நாட்டஞ் செலுத்தக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இப்படியாக வளர்வுறும் குழந்தை ஐந்து வயதில் தன்னைபபற்றிய சிந்தனையில் ஈடுபடும். இவ்வண்ணம் தம்மையுணர்ந்து கொண்ட போது மிகவும் பொறுப்பான முறையில் அவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் போக்கில் தவறுகள் காணப்பட்டால் உடனுக்குடன் எளிதான முறையில் தண்டிக்க வேண்டும்.

இளமையிலே கவர்ச்சியான வண்ணப் படங்கள் மீதுதான் அவர்களுக்கு ஆவல் உண்டாகும். எனவே அழகிய படங்கள் மூலம் பெரிய எழுத்துக்கள் வாயிலாக கல்வியைப் புகட்ட வேண்டும். சின்ன-குட்டிக்கதைகள், இனிமையான பாட்டுகள், விடுகதைகள் எல்லாம் அவர்களை பிரியப் படுத்துவனவாகும். சிறிது சிறிதாக போதனையில் தரமான மாற்றம் காணப்படவேண்டும். இப்படியே வளரும் குழந்தை வெறும் புத்தகப் பூச்சியாக மட்டும் இருக்கக் கூடாது. மனனம் செய்தல், பேசுதல், பத்திரிகை படித்தல், உலக அறிவு,எழுதுதல் என்பவற்றிலெல்லாம் பயிற்சி பெற வேண்டும். இதற்கெல்லாம் பெற்றோர், ஆசிரியரோடு இலக்கிய வாதிகள் தொண்டும் அளப்பரியது. எழுத்தாளர் கையில்தான் இன்றைய உலகம் இருக்கின்றது என்றால் மிகையில்லை. அதிலும் குழந்தை எழுத்தாளர்களின் சேவை-தொண்டுதான் எல்லாவற்றிலும் மேலானது. அப்பழுக்கற்றது.

## குழந்தை இலக்கியமும் எழுத்தாளர்களும்

நம் ஈழநாட்டைப் பொறுத்தவரை குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சி சமீபகாலமாக குன்றி வந்துள்ளதென்பதை யாரும் மறுக்கவோ-மறைக்கவோ முடியாது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் நம் மத்தியிலிருந்த குழந்தைப் பத்திரிகைகளும் குழந்தை எழுத்தாளர்களும் இன்று இருந்த இடந் தெரியாமற் போய் ஒரு சில பத்திரிகைகளிலும், வானொலியிலும் மட்டுமே குழந்தைகளுக்கான பகுதிகள் உயிர்மையுடனிருப்பது வருத்தப் படக் கூடியது.

இந்தத் தளர்ச்சிக்கு காரணமென்னவென்று யூகித்தால், குழந்தைகளுக்காக எழுதுவதை வளர்ந்து விட்டோமெனக் கருத்திற் கொண்டு கேவலமாக எண்ணுகின்றமையும், எழுத்தில் இலாப நட்டம் பார்க்கின்றமையுமேயன்றி வேறெக் காரணமும் இருக்க முடியாது.

இப்பொழுது இருந்திருந்து குழந்தைகளுக்கு எழுதுபவர்கள் வளர்ந்து விட்டவர்களை மலையாகக் கருதும் ஆரம்ப எழுத்தாளர்களே தான். இவர்களுக்கு மடுத்து குறிப்பிடவேண்டுமானால் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது எழுதும் மாணவ—ஆசிரியர்கள்தான் அவ்

வப்போது தங்களாலியன்ற சேவையைச் செய்கின்றூர்கள். இதற்கு உதாரணமாகக் கொண்டால் பள்ளிக்கூடங்களில் நடாத்தும் கையெழுத்துப் பத்திரிகைகளேயும், ஆண்டு மலரையும் குறிப்பிடுவதோடு ஆண்டு தவருது எடுக்கப்படும் கலே விழாக்கள், ஆண்டு விழாக்கள் போன்றவைகளேயும் சொல்லலாம்.

இன்னெரு முக்கிய விடயமென்னவெனில மற்றைய நாடுகளில் எழுத்தாளர்கள் தங்களுக்கென்று ஒரு தனித்துறையை-வழியை வகுத்துக் கொண்டு எழுதுகின்றனர். இங்கோ, எல்லோரும் எல்லாத் துறைகளேயும் சொந்தமாக்கிக் கொள்ள விரும்புகிருர்கள் இதனுல் எத்துறையிலும் ஒருவருக்குப் போதிய வளர்ச்சி கிட்டாமற் போய் விடுகிறது. பாவம். இருக்கின்ற வெளியீட்டகங்களாவது குழந்தைகளுக்கென்று ஏதாவது வெளியிடுமா வென்றுல், துப்பறியும் கதைகளேயும் மந்திர, தந்திரக் கதைகளேயும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. தப்பித் தவறி குழந்தைப் பத்திரிகைகள் வெளி வந்தால் ஓரிரு இதழ்களோடு சரி. இந் நிலே நீங்கி குழந்தைகளின் மேல் மனமிரங்கி, குழந்தை நலத்தில் அக்கறை செலுத்தி, குழந்தை இலக்கியத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தும்படி வளர்ந்த எழுத்தாளர்களே அல்ல—ஆரம்ப-குழந்தை இலக்கியப் பற்றுள்ள எழுத்தாளர்களேக் கேட்டுக் கொள்ளும் குரல்களில் என் குரலும் ஒன்று !

அதே நேரத்தில் குழந்தைகளுக்காகப படைக்கும் படைப்புகள் குழந்தைகளுக்குப் புரிகிற வண்ணம் இருக்க வேண்டும்-பயன் பெறுவதாயும் எழுதவேண்டும். 'இட்லி, சட்னி...'' போன்ற படைப்புகள் வேண்டாம். கவிதைகள், கதைகள் ஒன்று எதையோ எழுதி, குழந்தைப் பக்கம் என்று புகைப்படங்களே மட்டும் பிரசுரிப்பது மணல் வீடு கட்டுவது போலாகும்.

போனது போக வருங்காலத்திலாவது குழந்தை இலக்கியம் வளர-குழந்தைகள் நலம் பேணப்பட அரசினரும் ஏற்ற ஒழுங்குகள் செய்வார்கள் என்று விரும்புவதுடன் சாகித்ய மண்டலம் போன்றன குழந்தை எழுத்தாளர்களே கைதூக்கி விட முன்வரவேண்டும். குழந்தைகளின் வளர்ச்சிதான் சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சி, நாட்டின் நாளேய வளர்ச்சியுமாகும்.


# "விவேகி"

**திங்கள் இதழ்**

| | |
|---|---|
| வருட சந்தா | 4-00 |
| தனி இதழ் | -40 |

**நிர்வாகி,**

29, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்

தொலே பேசி : 274

சிறுகதை

# திருப்பம்

எஸ். எல். சவுந்தரநாயகம்

பாடசாலை ஆரம்பமாகுவதற்கு சில நிமிடங்களிருந்தன...

பாடசாலைக்கு முன்புள்ள பசும்புல் வெளியிலே அங்குமிங்குமாக உலாவிக் கொண்டு நின்றார், தலைமையாசிரியர் சற்குணராஜா.

தூரத்திலே மதியமுதன் பாடசாலையை நோக்கி விறுவிறென்று வருவதை தலைமையாசிரியர் சற்குணராஜா நன்கு அவதானித்தார்.

மதியமுதனுடைய நடையின் வேகம் வரவர அதிகமாவது சற்குணராஜாவின் சந்தேகத்துக்குத் தூபமிட்டது.

சற்குணராஜாவின் மனம் சேற்றில் நட்ட கம்பமாக ஆட்டங் கொடுக்கத் தொடங்கியது.

அவருடைய மன ஆழியிலே எண்ண அலைகள் பல எழுந்து மடிந்து நர்த்தன மாடிக் கொண்டிருந்தன.

மதியமுதனின் வதனம், சற்குணராஜாவுக்கு, கர்ணகடூரமாகக் காட்சிதந்தது......

சற்குணராஜாவின் ஐயத்தை நூற்றுக்கு நூறு ஊர்ஜிதம் பண்ணிக் கொண்டிருந்தது, மதியமுதனின் கையிலிருந்த இரண்டடி நீளமுள்ள துவரந்தடி.

வெளியிலே நடமாடிக் கொண்டுநின்ற ஆசிரியர் சற்குணராஜாவை 'தற்பாதுகாப்புணர்ச்சி' பாடசாலைக் கட்டிடத்துக்குள் நுழைத்துவிட்டது. பாடசாலைக்குள் நுழையும் பொழுது தலைமையாசிரியர் சற்குணராஜா துணையாசிரியை 'மலரரசி' யைக் கூப்பிட்டார்.

"மதியமுதன் வருகிற நிலை நல்லாயில்லை. அவன் சண்டைக்குத்தான் வருகிறான். எதற்கும் நாம் ஆயத்தமாயிருப்பது நல்லது ரீச்சர்......"

இவ்வாறு கூறிய சற்குணராஜா, முழுக்கையாக விடப்பட்டிருந்த நெஷனல் ஷேர்ட்டுக் கைகளை மடித்துச் சுருக்கி விட்டுக் கொண்டார். றிஸ்றவாட்சையும் கழற்றி மேசையில் வைக்கும்படி ஒரு பொடியனிடம் கொடுத்துவிட்டார். வேட்டியையும் மடித்துச் சண்டிக்கட்டுக் கட்டிக் கொள்ள எத்தனித்தார்.

மதியமுதனும் பாடசாலை வாயிலை நெருங்கி விட்டார்......

தலைமையாசிரியர் சற்குணராஜா மதியமுதன்மேற் கொண்ட சந்தேகம் அர்த்தமற்ற தொன்றென்று அலட்சியம் செய்துவிடக் கூடியதல்ல.

தகுந்த காரணத்தை ஆதாரமாகக் கொண்ட நியாயமான சந்தேகந்தான் சற்குணராஜாவின் சந்தேகம்.

சராசரி வரவு முப்பத்தைந்து பிள்ளைகளையுடைய தேவர்புரம் ஆரம்பப் பாடசாலையிற்தான் சற்குணராஜா தலைமையாசிரியராகவும், மலராசி துணையாசிரியையாகவுங் கடமையாற்றிக் கொண்டிருந்தனர்.

தேவர்புரத்து ஆரம்பப் பாட சாலையிலே ஆசிரியர்கள் தங்கக் கூடிய வீட்டுவசதியிருந்தது.

சற்குணராஜாவுக்கு முன்பு தேவர்புரத்துத் தலைமையாசிரியரா கக் கடமையாற்றிய இளஞ்செழி யன், பாடசாலை அறையிலே தங்கி யிருந்துதான் கடமையாற்றினுர்.

சற்குணராஜாவோ பாடசாலை அறையில் தங்கியிருந்து கடமை யாற்றவில்லை......

தேவர்புரத்திலிருந்து மூன்று மைல் தூரத்துக்கப்பாலுள்ள 'புலி யூர்' என்கிற கிராமத்திலுள்ள ஒரு வீட்டில் தங்கி நின்றுகொண்டு, தினமும் பைசிக்கிளில் தேவர்புரம் போய்த்தான் கடமையாற்றினுர்.

பாடசாலை அறையிலே சற்குண ராஜா தங்காமைக்கு அவர் கூறிய காரணம் ''வசதிக்குறைவு,, என் பதே. தேவர்புரத்தைவிட புலி யூர் எவ்விதத்திலும் வசதி கூடிய வொரு கிராமமுமல்ல. தேவர் புரத்து மக்களைவிட புலியூர் மக்கள் அதிகம் படித்தவர்களுமல்ல, அறி வாளிகளுமல்ல, பண்புடையவர் களுமல்ல அப்படியென்ருல்......?

தேவர்புரத்து மககள் தாழ்த தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்க ளென்கிற ஒரேயொரு காரணத்தி ஞற்தான் சற்குணராஜா புலியூரில் 'ஜாகை' யை வைத்துக் கொண் டாரென்று சிலர் பேசிக் கொண் டார்கள். ஆனுல், சற்குணராஜ தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வர்தானென்பதும் தேவர்புரப்பகு தியிலே அவர் உயர்த்தப்பட்ட வகுப் பினராக நடிக்கிருரென்பதும் சற் குணராஜா மட்டுமேயறிந்தவொரு பரம இரகசியம். அது அவ்வாருக .........

உதவியாசிரியை மலரரசி உண மையில் உயர்த்தப்பட்ட வகுப் பைச் சேர்ந்தவர்தான். என்ருலும் சற்குணராஜாவைப்போல அயலூ ரிற் தங்கி நின்று தேவர்புரத்துக் குப் போய்க் கடமையாற்றவில்லை.

பாடசாலை அறையிலே தன் தாயின் துணையுடன் தங்கி நின்று கொண்டுதான் மலரரசி கடமை யாற்றினுர்.

''தாழ்த்தப்பட்ட மக்கள் வதி யும் ஒரு கிராமத்திற் தங்கிநிற்பது அவ்வளவு உசிதமல்ல. தேவர் புரத்திலிருந்து இரண்டு மைல் தூரமான கோழியூரில் தங்கிநின்று கொண்டு தினமும் போய்க் கடமையாற்றலாமே! அதற்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்து தரலாம்.........'' என்று, சற்குணராஜாவுட்பட பலர் மலரர சிக்கு இலவச ஆலோசனைகள் கூறி ஞர்கள்; தெண்டித்தும் பார்த்தார் கள்......ஆனுல் மலரரசி அவ்வா லோசனைகளை அவ்வளவாக மதிக்க வில்லை.

''உயர்வு தாழ்வற்றவொரு மறுமலர்ச்சிச் சமுதாயததை நிர் மாணிக்கும் பொறுப்பு வாய்ந்த புனித டணியாகிய ஆசிரியத் தொண்டுபுரியும் நாமே அவ்விதம் வேற்றுமை பாராட்டி நடப்பது பண்பான செயலல்ல என்கிற எண் ணத்துடன் மலராசி தேவர்புரத் திலேயே தங்கிநின்று கடமை யாற்றலாயினா.

தேவர்புரக் கிராமத்து மக்க ளிடையேயும் இரண்டு பெரும்பிரிவு களும் பல உட்பிரிவுகளும் இருந்தன.

ஒரு பிரிவினர் மற்றப்பிரிவின ரைப்பற்றி அவதூறு சொல்லல், புறங்கூறல், பழித்தல், நகைத்தல்

அவர்களைவிட தாங்கள் ஒழுக்கத் திற் சிறந்தவர்களென்று அயல் மனிதர்களுக்கு அறிமுகம் பண்ணி வைத்தல் ஆதியன தேவர்புர மக்களின் மாறாத பழக்கமாகி விட்டது.

மலரரசி தேவர்புரத்துக்குக் கடமையாற்றச் சென்ற தொடக் கத்திலே பாடசாலை அறைவீட்டிற் தங்கவில்லை. முதன் முதலில்...

அவ்வூரிலே ஓரளவு விஷயந் தெரிந்தவராயும் வயது சென்ற வராயுமிருந்த 'அம்பலவாணர்' என்பவருடைய வீட்டிற்தான் தங்கி யிருந்தார்.

தேவர்புரத்திலுள்ள ஒரு பிரி வினரின் தலைவரான அம்பல வாணர் வீட்டில் மலரரசியும் தாயும் தங்கியிருந்து கடமையாற்றி வந்தது, மறுபிரிவினரின் தலை வரான மங்களநாதருக்குக் கட் டோடு பிடிக்கவில்லை

மங்களநாதர் மலரரசியையும் தாயையும் அடிக்கடி சந்தித்து—

''அம்பலவாணன் மிகவும் கெட்டவன். அவனுடைய மக்கள் மருமக்களெல்லாம் படு அயோக்கி யன்கள. நீங்கள் அவனுடைய வீட் டிற் தங்கியிருப்பது கூடாது. என் சொல்லைமீறித்தங்க விருப்பமென் ருல்தங்கியிருங்கள், பிற்பாடுஉங்க ளுக்கு அவங்களால் அவமானம் நேருங்காலத்தில் எங்களிடம் எது வுமேசொல்லக்கூடாது. அங்கேயி ருந்தீர்களானால நிச்சயமாகஅவமா னப்பட்டுக் கொண்டுதான் வெளிக் கிட வேண்டிவரும. ஏதோ நான் அறிஞ்சதை சொல்லிவிட்டேன. இனி உங்கள் விருப்பம்.........'' என்று அறிவுரை கூறிவந்தார்.

''அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் ?'' என்று மலராசியும் தாயும் மங்கள நாத ரிடம் 'மாற்றுவழி' கேட்டார்கள்.

''எனது வீட்டில் இரண்டு அறைகள் சும்மாதான் கிடக்கின் றன. அதிலே ஒரு அறையில் வந்து இருங்கள். நான் வேண் டிய உதவிசெய்கிறேன்.'' என்று மங்களநாதர் தைரிய மூட்டினர்.

மங்களநாதரின் மாற்றுத் திட்டம் மலரரசிக்கும் தாய்க்குந் திருப்தியளிக்கவில்லைப் போலும்.

இதைச் சூசகமா அறிந்தார் மங்களநாதர். அவருடைய நரி மூளையில் ஒரு திட்டம பிறந்தது.

''சரி சரி ! அம்பலவாணனு டைய வீட்டால் வெளிக்கிட்டு என்னு டைய வீட்டில் வந்து தங்க விருப்ப மில்லையெனருல், பள்ளிக்கூட அறைவீட்டில் தங்கியிருங்கள். நான் வேண்டிய உதவிசெய் வேன்......'' என்று, பிறிதொரு வழியைக் காட்டினர்.

மங்களநாதர் போட்ட இரண் டாவது திட்டத்தின் கீழ் செயலாற் றுவதற்கு மலரரசியுந் தாயும் இசைந்துவிட்டனர். அதாகப் பட் டது; பாடசாலை அறைவீட்டுக்கு 'ஜாகை'யை மாற்றிக் கொண்டார் கள்.

தனது திட்டம நிறைவேறிய தைக் கண்ட மங்களநாதர் மன மகிழ்ந்தார்.

ஓய்வு நேரங்களிலே மங்கள நாதர் பிரிவைச் சேர்ந்த பெண் கள், கூட்டம் கூட்டமாகவும் தனித் தும் சென்று மலரரசியுடனும் தாயாருடனும் பொழுது போக் காக உரையாடுவார்கள். பேண் பார்ப்பார்கள். விறகு வெட்டிக் கொடுப்பார்கள். தண்ணீரள்ளிக் கொடுப்பார்கள். குளத்திற்கு

குளிக்கப் போகும் பொழுது துணையாகப் போவார்கள். தங்கள் சிறு பிள்ளைகளைக் கொண்டு மலராசியினதும் தாயாரினதும் சேலைகளைக் கூடத் துவைத்துக் கொடுப்பார்கள். இரவிலே துணைக்கு நாலைந்துபிள்ளைகளைப் படுக்கவும் அனுப்பி வைப்பார்கள்.

இவ்விதமாக மங்களநாதர்பிரிவினர் மலராசிக்கும் தாய்க்கும் உதவி புரிந்து வந்தனர்.

மங்களநாதர், மலரரசிக்கு ஏன் அளவுக்கதிகமாக இப்படி உதவி புரிந்தும் புரிவித்தும் வந்தார் தெரியுமா? சோழியன குடுமி சும்மாய் ஆடாதது போல் அந்த உதவிகளின் பின்னணியில் மங்களநாதருக்குப் பல சுகங்களிருந்தன

முதலாவது பலன் :- மலரரசியையும் தாயையும் கருவிகளாக்கி அவர்கள் மூலமாக அம்பலவாணர் கூட்டத்தாரை அவமானப் படுத்துதல்.

இரண்டாவது சுகம் : அம்பலவாணர் பகுதிப் பிள்ளைகளைப் பார்க்கிலும் தனது பகுதிப்பிள்ளைகளை மலரரசி மூலமாகக் கவனமாகப் படிப்பித்து விடுதல்.

மூன்றாவது சுகம் : வயது ஐந்து பத்துக்களைத் தொட்டுங் கூட இன்றும் மாறுமலிருக்கும் கீழ்த்தர இச்சைக்கு மானஸீக விருந்தளித்து மகிழ்தல்... வெட்கக்கேடானசுகம்.

ஆமாம்! மங்களநாதரின் மனோநிலையையும் கிராமமக்களின் அறியாமையையும் மற்றுமுள்ள பகை, வன்மம், பழிக்குப்பழிவாங்கும் திட்டங்களைப்பற்றியும் உலக அநுபவமற்ற மலரரசி என்ன அறிவார்?

பருவத்திஞல் மெருகிடப்பெற்று உயிரும் உணர்ச்சியுமுள்ள பத்தரைமாற்றுப் பசும்பொன் சிலையொன்று பக்கத்திலே வீற்றிருந்து, நினைக்குந்தோறும் பார்க்குந்தோறும் நெஞ்சிலே தித்திப்பையூட்டுகின்ற தேனூறும் செவ்விதழ்களைத்திறந்து முத்துச்சரத்தைக் காட்டி மோகனப்புன்னகை புரிவதை...

குழலினும் யாழினுமினிய மழலைத்தேனையும் தோற்கடிக்கும் அமுதச்சுவையிற் பேசிப்பேசி இன்பப்போதையூட்டுவதை...

பார்த்துக்கேட்டு மகிழும்பொன்னுன சந்தர்ப்பம்—மூன்ருவது சுகம்—மலாரசியை பாடசாலையறைக்குகொண்டுவராவிட்டால் மங்களநாதர் எவ்வண்ணம் அநுபவிப்பார்?

மலரரசி அம்பலவாணர் வீட்டிலிருந்திருப்பின். மங்களநாதருக்கு அந்தச்சுகம் கிட்டுவதேது? அம்பலவாணர் வீட்டுக்குத்தான் அவர் போவதில்லையே.

மலராசி, மங்களநாதரை எந்த ஸ்தானத்திலே வைத்து எத்தகைய உணர்வுடன் சிரித்துப் பேசிப் பழகினுற் தானென்ன? அவருக்குக் கவலையில்லை.

அவருடைய இரசிகபோக்கின் அர்த்தத்தை மலராசி புரிந்து கொள்ளாதவரையிற் தொந்தரவில்லைத்தானே!

நனவிலே திரையிற் தோன்றும் சினிமா நட்சத்திரங்களைக் கண்டு காதலித்து, கனவிலே கலந்துறவாடி இன்பந்துய்த்துமகிழும் ரசிக கூட்டத்திலே அங்கத்துவம் வகிப்பவராக ஐம்பதுவயதை எட்டிப்பிடித்த மங்களநாதர் இருப்ப

தைப்பற்றி மற்றோர் எப்படி அறியமுடியும் ?

மங்களநாதரின் வேண்டு கோளின் பேரிலும், அவரும் அவருடைய மனைவி மக்களும் செய்து வந்த உதவிகளுக்குப் பிரதியுபகாரம் போலவும் மங்கள நாதரின் இரண்டு சிறுவர்களுக்கு மலரரசி இலவசமாக இங்கிலீஷ் டியூஷன் சொல்லிக் கொடுக்க ஒப்புக் கொண்டமையால், அவர் இரண்டாவது சுகத்தையும் அடைந்தது போலாயிற்று.

மங்களநாதரின திட்டத்தின் கண்ணுள்ள முதலாவது பலனை-முக்கிய பலனான அம்பலவாணரையும் அவருடைய குடும்பத்தினர்களையும் மலரரசி வாயிலாக அவமானப படுத்தி பழிவாங்கும் கைங்கிரியத்தை நிறைவேற்றுவதற்குத்தான் கடும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது......

எனறாலும் விட்டு விடுவாரா?

மங்களநாதரும் அவருடைய மனைவி மககளும் அவருடைய கட்சியைச் சேர்ந்தோர்களும் மலரரசியுடனும் தாயாருடனும் பேசும் பேச்சுக்களில் முககால்வாசி-என் முழுவதுமே அம்பலவாணர் குடும்பத்தைப் பற்றிய அவதூறு மொழிகளாகவே இருந்தன.

அம்பலவாணருடையவும் அவருடைய குடும்பத்தைச் சார்ந்தோர்களுடையனவுமான குற்றங்களை எடுத்துக் காட்டுபவைகளாகவேயிருந்தன.

இவ்வாறு நாளாந்தமும் பாடசாலை அறையிலே விமர்சிக்கப் படும் அம்பலவாணர் குடும்பத்துப் புறணிகளை, கேட்டுக்கொண்டு நிற்கும் சிறுவர்கள் கண், காது, மூக்கு, வாய்கள் வைத்து உருவகப்படுத்தி அம்பலவாணர் பகுதியினரிடம் சொன்னார்கள்.

அதற்கு அம்பலவாணா பகுதியார் கூறும் பதில்களையும் இரகித்து ஒனறுடன் ஒன்பதைச் சேர்த்துப் பத்தாக்கி மலரரசியிடமும் தாயிடமும் ஒப்பித்தார்கள்.

அதன் பயனாக அம்பலவாணர் வீட்டாருக்கும் மலரரசிக்குமிடையில் கடும்பகை மூண்டது. மலரரசியின் தாயாரான அன்னம் ஆயிரம் பேர்களுடைய நாவன்மையை ஒருங்கே பெற்றவொரு அடங்காப்பிடாரி. அகம்பாவி.

'தானும் மகளும் மட்டுந்தான் மனிதர்கள்; அறிவுள்ளவர்கள். மற்றையவர்களெல்லோருமே—குறிப்பாக தேவர்புரத்து மக்களெல்லோருமே-மூடர்கள் அறிவில்லாதவர்கள்; மிருகங்களுக்குச் சமானமானவர்கள்' என்கிற கொள்கையுடையவர். தன் கொள்கைப் படி அம்பலவாணர் வீட்டாரை கீழ்த்தரமான வார்த்தைகளால் வாயில் வந்தபடி திட்டித்தீர்த்தார், அன்னம்.

அன்னம் திட்டியதைக் கேள்விப்பட்ட அம்பலவாணரின் மனைவி தையல்நாயகியம்மையாரும் மருமகன் மதியமுதனும் பாடசாலை அறைக்குப்போய் மலரரசியிடமும் அன்னத்திடமும் விசாரித்தார்கள்.

தையல்நாயகி அம்மையாரும் மதியமுதனும் நேர்மையான முறையிற் கேட்கப்போனதையும் சண்டைக்குப் போனதாகத் தப்பர்த்தம் புரிந்துகொண்ட அன்னம், அவர்களை நேர்முகதாவினும் மானபங்கப்படுத்தியே பேசினார்.

(தொடரும்)

விஞ்ஞானக் கட்டுரை

# "சுவாலை"

கல்முனை - அஸ்ரப்

விஞ்ஞானத்தின் சிறப்புப் பிரிவான 'இரசாயனவியலை'ப்பற்றி நாம் பயிலும்போது அதில் நம்மைச் சுற்றியுள்ள பொருட்களைப் பற்றியும், அவற்றில் நடைபெறும் மாற்றங்களை'ப்பற்றியும் அறிகின்றோம்.

நாம், நம் அன்றாட வாழ்விலே எத்தனையோ பொருட்களுடன் அண்டி வாழ்கின்றோம். வெளிச்சத்தைப் பெறுவதற்கும், வெப்பத்தைப் பெறுவதற்கும் சுவாலை அவசியம். சுவாலையையிட்டுப் படிப்பதற்கு 'மெழுகு வர்த்தி' ஓர் சிறந்த உதாரணமாகும்.

சாதாரணமாக எரிந்து கொண்டிருக்கும் ஓர் மெழுகு வர்த்தியின் சுவாலையை அவதானித்தால் அதில் பின்வரும் நான்கு பகுதிகளை அவதானிக்க முடியும்.

1. நிறமற்ற பகுதி.
2. செம்மஞ்சள் நிறப்பகுதி.
3. ஒளியற்ற இருண்டபகுதி.
4. நீலநிறமுடைய பகுதி.

ஒரு பொருள் எரிபற்று நிலையையடைந்து ஒளியும், வெப்பமும் வெளிவிட்டு ஒட்சிசனோடு சேரும் கிரியை எரிதல் எனப்படும். மெழுகுவர்த்தி காபனும், ஐதரசனும், ஒட்சிசனும் சேர்ந்த ஓர் இரசாயனச் சேர்வையாகும். சுவாலைக்குக் காரணம் மெழுகுவர்த்தி அல்ல; ஏனென்றால் மெழுகுவர்த்தி ஒருபோதும் எரிவதில்லை. எரிபொருள் ஆவியாகி, அவ்வாயுவே எரிந்து சுவாலைக்கு காரணமாகின்றது.

காற்று, காபனீரொட்சைட்டு, ஒட்சிசன், ஐதரசன் போன்ற இன்னும் பல வாயுக்கள் சேர்ந்த ஓர் கலவையாகும். சுவாலையில் காணக்கூடிய பலதரப்பட்ட பகுதிகளுக்கு காரணம், எரிபொருளுடன் காற்று (ஒட்சிசன்) கலக்கும் விகிதமே. மெழுகு வர்த்தியின் சுவாலை கூம்பு வடிவானது.

## "எரிபொருள் எவ்வாறு எரிகின்றது?"

மெழுகுவர்த்தியின் திரியில் தீக்குச்சியைக் கிழித்து வைத்தவுடன், தீக்குச்சியிலிருந்து உண்டாகும் வெப்பம் திரியின் வெப்ப நிலையை *எரிபற்று நிலைக்கு உயர்த்துகின்றது. திரி எரிபற்று நிலையையடைந்ததும் எரியத் தொடங்குகின்றது. திரி எரிவதனால் உண்டாகும் வெப்பம், மெழுகுவர்த்தியிலுள்ள மெழுகை உருக்குகின்றது. மெழுகின் வெப்ப நிலை உருகு நிலைக்கு உயர்த்தப்பட்டவுடன் அதுஉருகுகின்றது. திரவ நிலையிலிருந்து உருகும் மெழுகு, வெப்பநிலை உயர, அடர்த்தியிற் குறைந்து திரிவழியாக மேலெழுந்து வாயுவாக மாறுகின்றது. இவ்வாயு காபனும், ஐதரசனுமாகப் பிரிந்து ஒட்சிசனோடு சேருகின்றது. இதனாலேயே சுடர் உண்டாகின்றது.

இவ்வாறு ஒட்சிசனோடு சேரும் ஐதரசன் வெப்பத்திற்கும் காபன் அணுக்கள் ஒளிர்விற்கும் காரணமாயுள்ளது. சுவாலையை நன்கு அவதானித்தால் பின்வரும் முறையில் பகுதிகளைக்காண முடியும்.

1. வெளிப்புறமாக மெல்லிய உறைபோன்று மங்கலான சுடருடன் தெரியும் பகுதி.
2. சுடரின் அடிப்பாகத்தில் பிரகாசமாகத் தெரியும் நீல நிறப்பகுதி.
3. சுடரின் மேற்புறமாக $\frac{3}{4}$ பங்கிற்கு மேல்தெரியும் வெண் மஞ்சள் நிறப்பகுதி.
4. திரிக்கு நேர்மேலே உட்புறமாக, தெரியும் கூம்பு வடிவுடைய ஒளியில்லாத இருண்ட பகுதி.

மெழுகுவர்த்தி எரியும்போது எல்லாக் காபன் அணுக்களும் ஒட்சிசனோடு சேர்வதில்லை. ஆகவே மெழுகு வர்த்தியின் தகனம் முற்றுத தகனமாகும். சுவாலையில் வெளிப்புறமாயுள்ள நிறமற்ற வெப்பத்திற்கு காரணமாயுள்ள பகுதிக்குக் காரணம் ஒட்சிசனோடுசேரும் ஐதரசன் அணுக்களே. இவ்வாறுசேர்ந்த அணுக்கள் நீராவியாக மாறுகின்றது. சுடரின் ஒளிர்வுள்ள மஞ்சள்நிறப் பகுதிக்கு காரணம், ஒட்சிசனோடு சேரமுடியாமல், உயர்ந்த வெப்ப நிலையையடைந்து ஒளிவீசும் காபன் அணுக்களே ஒட்சிசனோடு சேரவாய்ப்புள்ள காபன் அணுக்கள் காபனீரொட்சைட்டாக மாறுகின்றது. ஒட்சிசனோடு நன்கு சேரவாய்ப்பற்ற காபன் அணுக்கள் காபனோரொட்சைட்டாக மாறுகின்றது.

1 கிராம் காபன் காபனீரொட்சைட்டாக மாறும்போது 7836 ** கலோரி வெப்பம் வெளிவிடுகின்றது. 1 கிராம் காபன் காபனோரொட்சைட்டாகமாறும் போது 2199 கலோரி வெப்பம் வெளிவிடுகின்றது. 1 கிராம் ஐதரசன் நீராவியாகும்போது 34.86 கலோரி வெப்பம் வெளியாகி விடுகின்றது. வெப்பச் சக்தியில் ஒரு பகுதி ஒளிச் சக்தியாகவும் மாறுகின்றது. (காபனோரொட்சைட்டு நச்சுத் தன்மையான வாயுவாகும். சுவாசிக்கும் காற்றில் 5% இருந்தாலேயே மரணம் சம்பவிக்கும் பொருட்கள் எரியுமிடங்களில் போதியளவு காற்று இல்லாவிட்டால் நச்சுத்தன்மையான காபனோரொட்சைட்டு உண்டாகும். ஆகவே பொருட்கள் எரியுமிடங்கள் போதிய காற்றோட்டமுள்ளதாக விருப்பது அவசியம்.

சுவாலை உட்குழிவானது மெழுகுவர்த்தி சக்தியை வெளிவிடுவது இரசாயன மாற்றமாகும். சக்தி வெப்பமாகவும் ஒளியாகவும் வெளிவிடப்படுகின்றது. மெழுகு வர்த்தி எரியும் போது பின் வரும் மாற்றங்கள் நடைபெறுகின்றன.

1. காபோவைதிரேற் $= Co + H_2$
2. $Co + Co_2 = Co_3$
3. $2H_2 + o_2 = 2H_2o$
4. $Co + o_2 = Co_2$
5. $Co_3 + o_2 = Co_2$

குறிப்பு : இரசாயனக் குறியீடுகள் : காபன் $= Co$

காபனீரொட்சைட்டு $= Co_2$, ஒட்சிசன் $= O_2$, ஐதரசன் $= H_2$
காபனோரொட்சைட்டு $= Co_3$ நீராவி $= H_2o$.

* எரிபற்று நிலை : பொருள் எந்த பெப்பநிலையில் ஒட்சிசனோடு சேர்ந்து ஒளியும் வெப்பமும் வெளிவிடுகின்றதோ, அவ் வெப்ப நிலையே எரிபற்று நிலை எனப்படும்.

** கலோரி : 1 கிராம் நீர் 1° சதமவளவை வெப்ப நிலைக்கூடாக உயர்த்தப் படுதற்கு தேவையான வெப்பக் கணியம்.

தொடர்ச்சி

# "வீரன் தாவீதின் காதலும் மீகாளின் சாகசமும்"

—ஜி. எஸ். சாமுவேல்—

தாவீது அரண்மனையிலிருந்து திரும்பி வந்து தன் தந்தையின் ஆட்டுமந்தைகளை, வனாந்தரத் தோரமிருந்த இடங்களில் தன் மேய்ப்பருடன் சேர்ந்து மேய்த்துவந்தான். ஏறக்குறைய மூன்றாண்டுகளாக அவன் வனாந்தரங்களில் அலைந்து திரிந்தான். அக்காலத்தில் தாவீதும், அவன் தோழனாகிய எலெயாசரும் எத்தனையோ காட்டு மிருகங்களுடன் தங்கள் தங்கள் சமர்த்தைக் காட்டியிருக்கின்றனர். அதைப் போலவே, தங்களின் ஜென்ம விரோதிகளான பெலிஸ்தியரையும் வனமிருகங்களைப் போலவே கருதி, அடிக்கடி திடீர்திடீரென அவர்கள் மீது எதிர்த்துத் தாக்கி அழித்திருக்கின்றனர். தாவீதும் அவன் நண்பனான, எலெயாசரும் பெலிஸ்தியரில் அநேகரைக் கொன்றொழித்து வந்தனர். தாவீது, சவுலரசனை விட்டுவந்த பிறகு அடிக்கடி பெலிஸ்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் சிறு சிறு யுத்தங்கள் நடந்து வந்தன. இஸ்ரவேலர் எல்லோருமே மந்தை மேய்ப்பாளராகவிருந்தனர். பெலிஸ்தியரோவென்றால், அக்காலத்தில் நாகரீகத்தில் சிறந்தோராகவும், சிறந்த வீரர்களாகவுமிருந்தனர். பெலிஸ்தியர் அடிக்கடி இஸ்ரவேலரின் மந்தைகளிற் புகுந்து அவைகளை மடக்கியோட்டிச்சென்றனர். அந்நேரம், இஸ்ரவேல் மந்தை மேய்ப்பாளர் பெலிஸ்தியரோடுசண்டை போடுவதும்அடிக்கடி நடைபெற்றனர்

## அத்தியாயம் 10

ஒரு நாள் தாவீதின் ஆட்டு மந்தையை ஒரு பெருங்கூட்டம் பெலிஸ்தியர் வந்து வளைத்துக் கொண்டனர்! அந்நேரம் தாவீது வேறூர் பால் தங்கள் இனத்தான் ஒருவனுடைய மந்தைகளைப் பெலிஸ்தியர் மடக்கிக் கொண்டதைக் கேள்விப்பட்டு அவர்களுக்கு உதவி செய்யப் போய்விட்டான். தாவீதின் சிறு மந்தையைப் பலம் பொருந்திய பெலிஸ்தியர் கூட்டம் ஒன்றுவந்து மடக்கிக் கொண்டதைக் கண்ட மேய்ப்பர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

நிலைமையை நன்கறிந்து கொண்ட எலெயாசர், சற்று நேரம் யோசித்தான். தன் உயிரைத் திரணமாக மதித்துத் தங்கள் தேவனாகிய கர்த்தரை நினைத்தான். அவரையே தன் பெலனாக எண்ணினான். மனத் திடங்கொண்டான். எங்கள் சேனையின் கர்த்தரே! நீரே என் பெலனும் என் ஜீவனுமாயிருக்கிறீர்: இதோ ஆயிரக் கணக்கான பெலிஸ்தியர் வந்துவிழுந்து எங்கள் மந்தைகளை மடக்கிச் செல்கிறார்கள். அவர்களை எதிர்ப்பதற்கோ எங்களிடம் ஆட்களுமில்லை, பலமுமில்லை. அவர்கள்

செய்யும்இந்தஅநியாயத்தைநீரே உமது கண்களாற் காண்கிறீர்.

எங்கள் பக்கத்தில் நீதியும் நியாயமும் இருக்கிறது உமது இரக்கமும் எங்களோடிருக்கிற தென்பதை இந்தப் பெலிஸ்திய ருக்கு, நீர், இன்று வெளிப்படுத்து வீராக; இதோ உமது அடியேனா கிய நான் என் பட்டயத்தை உருவிக்கொண்டு அவர்களுக் கெதிராகப் போகிறேன். வெற்றி யானாலும், தோல்வியானாலும் உம்மையே சாரும். ஆகவே என் தேவனே, என்னைக் கைவிடாதே யும் என்று தன் முழுமனதோ டும் வேண்டினான். மறு க்ஷணத் தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய அருள் அவன்மீது பாய்ந்தது. அடுத்த நொடியில் எலெயாசர் தன் பட்டயத்தை உருவிக் கொண்டு, தனியொருவ னாகப் பெருந்திரளாக வந்து மந்தைகளை மடக்கிக் கொண்டி ருந்த, பெலிஸ்தியர்மீது பாய்ந் தான். முதலடியிலேயே 20, 30 பெலிஸ்தியர்களுடைய தலைகளை வெட்டிப் பூமியில் தள்ளிவிட் டான். பெலிஸ்தியர் திகைத்த னர். எலெயாசரின் பட்டயம் மின்னல் மின்னுவதுபோல், அங்குமிங்கும் பளிச் பளிச்சென மின்னின. அவனுடைய கால் களும் கரங்களும், குயவன் திகிரி போல் சுழன்றன.

பெலிஸ்தியர் நாலா பக்க மிருந்தும் வந்து சூழ்ந்தனர். எலெயாசர், தான் மட்டும் தனி யாய் வந்ததினால் பெருந்திர ளான பெலிஸ்தியரால் அவன் கிட்ட நெருங்கக்கூட முடிய வில்லை. பெலிஸ்தியரே தங்கள் எதிரி ஒருவனென்றறியாது தங் கள் பட்டயத்தை தங்கள் கூட் டத்தினர் மீதே பாவித்தனர் கர்த்தருடைய கரம் எலெயாச ரோடிருந்தது. அவன் தன் கை தன் உடலோடு ஒட்டிப் போகு மட்டும் பெலிஸ்தியரை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தான். அவன் தன் கையினால் ஏறக் குறைய 800 பெலிஸ்தியரை வெட்டி வீழ்த்தினான். பெலிஸ் தியரும் ஒருவர்க்கொருவர் இனங் கண்டு கொள்ளாமல் வெட்டிக் கொண்டதினால்ஏறக்குறைய 500 பேர் வெட்டுண்டு மடிந்தனர். பெலிஸ்தருக்கு தேவனால் ஒருவித பயங்கரம் உண்டா கவே, அவர்கள், தாங்கள் மடக் கின மந்தையை விட்டுவிட்டுத் தங்கள் பிராணனைத் தப்புவிக்க ஓட்டமெடுத்தனர். எலெயாசர் தான் ஒருவனாகப் பெலிஸ்தியர் மீது விழுந்து பெருஞ்சங்காரஞ் செய்வதைச்கண்ட ஏனைய மேய்ப் பரும், தங்கள் பட்டயங்களை உரு விக்கொண்டு பெலிஸ்தியர் மீது



ஆகாயவிமானத்தைக் கண்டு பிடித்தவர் யார் தெரி யுமா? அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வில்பரைட், ஒலிவரைட் என்ற இரு சகோதரர்கள் கண்டு பிடித்தனர் இவர்கள் தங்களது முதலாவது விமானத்தை எப் பொழுது பறக்க விட்டனர் தெரியுமா? 190 -ம் ஆண்டு டிசெம்பர் 17-ந் திகதி பறக்கவிட் டனர். — அ. கனகசூரியர்.

பாய்ந்து தங்கள் கை, சலிக்குமட்டும் வெட்டினுர்கள். அவர்களுடைய தேவனுகிய கர்த்தர் அவர்களோடிருந்து அவர்களுக்காகப் பெலிஸ்தியரில் அன்றைத் தினத்தில் மகா சங்காரத்தை உண்டாக்கினுர். பொழுது அஸ்தமிக்கும் முன்பே எலெயர்சரும், அவன் கூட்டத்தாரும், பெலிஸ்தியரை முற்ருக முறியடித்துவிட்டுத் தங்கள் மந்தைகளைத் திருப்பிக்கொண்டு, தங்கள் கூடாரங்களுக்குத் திரும்பினுர்கள்.

தாவீது சென்றவிடத்திலோ; அவன் போவதற்கு முன்னுல் பெலிஸ்திய சேனைகள் கூட்டங் கூட்டமாக ஆங்காங்கே காணப்பட்ட, இஸ்ரவேல் மந்தைகள் மடக்கித் தங்கள் தேசத்திற்கு ஒட்டிக் கொண்டிருந்தனர். இஸ்ரவேல் மந்தை மேய்ப்பர்களோ தங்கள் தேவனுகிய கர்த்தரே தங்கள் சேனைகளின் கர்த்தர் என்ற நம்பிக்கையுடன் பலம் பொருந்திய பெலிஸ்தியருடைய பெருந்தொகையான படைவீரர்களையும் அவர்களுடைய ஆயுதபலத்தையும்சட்டை செய்யாது எதிர்த்துக் கொண்டிருந்தனர். வரவரப் பெலிஸ்திய சேனைகளின் கையோங்கிக் கொண்டுவந்தது.

இஸ்ரவேல் மந்தை மேய்ப்பரோ செய்வதறியாது தத்தளித்துக் கொண்டிருந்தனர்; பெலிஸதியர் சேனைக்குப் பக்கபலமும் அடிக்கடி வந்து கொண்டிருந்தது; பெலிஸ்திய சேனைகளும் மந்தைகளை ஓட்டிக் கொண்டு தங்கள் எல்லையைச் சமீபித்து வந்துகொண்டிருந்தன. தாவீது குதிரை மீதேறி அதிவிரைவாய் வந்து கொண்டிருக்கையில், பெலிஸ்தசேனையால் ஓட்டிக் கொண்டுவரப் பட்ட மந்தை தனக்கெதிரே வருவதைக் கண்டுவிட்டான். மறு நொடியில பெலிஸ்திய சேனு சமுத்திரத்தினுள் புதிந்து தன் வாளாயுதத்தால் பெலஸ்திய சேனு வீரர்களின் மீது பாய்ந்து அவர்களில் அநேகர் தலைகளைச் சீவி எறிந்தான். தாவீதின் குதிரையோ மின்னல் வேகத்தில் குயவன் திரிகைபோல் சுற்றிச் சுற்றி வந்தது. சற்று நேரத்தில் மந்தைகள் ஓட்டுவதை விட்டு விட்டுப் பெலிஸ்திய சேனை தாவீதை வளைத்துக் கொண்டது.

தாவீதின் குதிரையோ மின்னலைப் போல் அப்பெலிஸ்திய சேனையுள் புகுந்து, அங்கும் இங்கும், எங்கும் தானுகவே காட்சியளித்துக் கொண்டிருந்தது. ஆகவே பெலிஸ்தியர்களுக்குத் தங்கள் எதிரி ஒருவன் என்ற எண்ணமில்லாமல், பலரே தங்கள் படையுனுள் புகுந்து தாக்குவதாக எண்ணி உக்கிரமுடன் போரிட்டனர். முன்னுல் ஊரை நோக்கிச் சென்ற தங்கள் சேனைகளுக்கிடையில் ஏற்பட்ட பேரிரைச்சலைக் கேட்டு, இஸ்ரவேல் மேய்ப்பருடன் சண்டையிலீடுபட்டிருந்த பெலிஸ்திய சேனை திகைத்துத் தாங்கள் மடக்கிக் கொண்டிருந்த மந்தைகளை விட்டு விட்டுத் தங்கள்நாட்டை நோக்கி ஓட்டமெடுத்தனர். அதைக் கண்ட இஸ்ரவேல் மேய்ப்பரும் உற்சாகமடைந்தது அவர்களைத் துரத்திச் சென்றனர். தாவீதோடு யுத்தஞ் செய்த பெலிஸ்தியர் சேனைக்குள் கலவரம் மூண

டது. அவர்களே! தங்களுக்குள் ஒருவரையொருவர் ஆள் அடையாளந் தெரியாமல் வெட்டிக்கொண்டனர். சர்வவல்லவரின் அனுக்கிரகம் தாவீதின் மேல் விழவும் அவர் மகா சக்தியடைந்து பெலிஸ்திய சேனையைச் சின்னாபின்னமாக்கினார். பெலிஸ்திய சேனாவீரர்கள், அவனுக்கெதிர் நிற்க முடியாமல் பயந்தோடத் தொடங்கினர். அதே நேரத்தில் அவர்கள் சேனையைப் பின்னாலிருந்து இஸ்ரவேல் மேய்ப்பரும் தாக்கத் தொடங்கினர். தங்களை எதிரிகள் முன்னும் பின்னும் வளைத்துக் கொண்டார்கள் என்று எண்ணியபெலிஸ்தியர் தங்கள் நாட்டை நோக்கி ஓட்டமெடுத்தனர். அப்படி ஓடியவர்களில் பெரும்பாலோரைக் கானகமே வேட்டையாடிவிட்டது அநேகர் தாவீதின் கையாலும், ஏனைய மேய்ப்பரின் கையாலும் விழுந்தனர். எஞ்சிய சிலரோ மிகுந்த பயத்துடன் தங்கள் நகரை நோக்கி ஓடினர்.

இப்படியாக அன்றைத் தினம் தாவீதின் கையாலும், ஒருசில மேய்ப்பரின் கையாலும் பெலிஸ்திய சேனையை, அவர்கள் தேவனாகிய கர்த்தர் முறியடித்தார். பெலிஸ்திய சேனையைத் துரத்திச்சென்ற மேய்ப்பர்களும் தாவீதும் திரும்பிவந்து, மந்தைகளை ஓட்டிக்கொண்டு தங்கள் எல்லைகளை நோக்கிச் சென்றனர். தாவீதும் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் மந்தையிருக்கும் இடத்தைநோக்கித் தன் குதிரைமீது சென்றான். வெகு நேரத்திற்குப்பின் தாவீது தன் மந்தையிருந்த இடத்தைப் பார்த்தான். அங்கே மந்தையைக் காணாது போகவே திகைத்து, நாலாபக்கமும் தன் பார்வையைச் செலுத்தினான். வெகுதூரத்தில் தரையில் கால் மாடு தலைமாடாக விழுந்து கிடக்கும் கணக்கற்ற சடலங்களைக் கண்டதும், தன் குதிரையைத் தட்டிவிட்டான். தனது இடையில் தொங்கிய நெடிய வாளா


# படிமுறை
# மனக்கணிதமும் விரைவுப் பயிற்சியும்

| | | | |
|---|---|---|---|
| 2 ஆம் வகுப்புக்குரியது | | — | -60 |
| 3 ,, | ,, | — | -75 |
| 4 ,, | ,, | — | -90 |
| 5 ,, | ,, | — | 1-00 |

ஆசீர்வாதம் அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி : 274

யுதத்தைத் தன் வலக்கையால் உருவித் தலைக்குமேலாக உயர்த்திக் கொண்டே பாய்ந்து சென்றான். அவன் மனமோ, இங்கிருந்த நம் மந்தையையும் பெலிஸ்தியர் ஓட்டிச் சென்றிருக்க வேண்டும். நம் மேய்ப்பருக்கும் அவர்களுக்கும் கடும் சண்டை நடந்திருக்க வேண்டும். நம் மேய்ப்பர்களோ வெகு சிலர், ஆனால் இங்கே வீழ்ந்து கிடப்போரோ அநேகர். இது விந்தைதான் என்று எண்ணிக்கொண்டு அவன் மனம் கவலையால் அலை மோதிக் கொண்டிருந்தது. அதற்குள் அவனுடைய குதிரையும் தரையில் வீழ்ந்துகிடப்போரைச் சமீபித்தது. ஒருசிலரின் வேதனையால் முனகும் அவலக்குரலும் அவன் காதுகளுக்குக் கேட்கத் தொடங்கின. அவன் கண்களோ! தன் மேய்ப்பர்களில் எவருடைய பிணமாவது, அங்கே தென்படுகிறதா என்று கூர்ந்து பார்த்துக் கொண்டேயிருந்தன.

அப்பெலிஸ்தியரின் எண்ணற்ற சடலங்களைக் கண்டதும் தாவீது தனக்குள்ளே! ஆகா! இத்தனை பெரிய சங்காரம் நடந்திருக்கிறதே! நம் மேய்ப்பரோ சிலர், இங்கே இறந்து கிடக்கும் பெலிஸ்தரின் எண்ணிக்கையோ ஆயிரத்திற்கு மேலிருக்கும் போலிருக்கிறது. நம் மேய்ப்பருக்குப் பக்கபலமாய் வர இப் பகுதியில் நம் இனத்தவர் ஒருவருமில்லையே! என்று தனக்குள் பலவாறெண்ணிக் கொண்டே போகும் போது, சற்று அப்பால் தன் மந்தையும் மேய்பர்களும் நிற்பதைக் கண்டான். மிகுந்த மகிழ்ச்சியடைந்து அவர்களிடம் சென்றான். பெலிஸ்தியர் வந்து, தங்கள் மந்தையைத் தாக்கியதையும், எலெயாசர் காட்டிய வீரச் செயலையும் மேய்ப்பர்கள் கூறவே, தாவீது தன் நண்பனை மெச்சிக்கொண்டு தான் போன இடத்தில் நடந்தவைகளையும் அவர்களுக்குத் தெரிவித்தான், பின்பு அவர்கள் பெலிஸ்தியர் அனைவரும் கடற்கரை மணலைப்போல் பரவி, இஸ்ரவேலருக்கு எதிராக ஏலாப் பள்ளத்தாக்கில் திரண்டிருப்பதாகவும். சவுலரசனும் இஸ்ரவேல் சேனையுடன், ஏலாப் பள்ளத்தாக்கில் பாளயமிறங்கியிருக்கிறதாகவும் கேள்விப்பட்டுத் தங்கள் மந்தைகளைப் பெலிஸ்தியரின் தேச எல்லைகளை விட்டு இஸ்ரவேலரின் நாட்டு எல்லைக்கே நடத்திக் கொண்டு போக வேண்டுமென்று, மறுநாளே அதற்கான ஆயத்தங்களைச் செய்யவும் ஆரம்பித்தனர், மறுநாள் உதயத்தில் தாவீதின் மந்தை மட்டுமல்ல, பெலிஸ்தியர் நாட்டின் எல்லைக் கருகிலிருந்த இஸ்ரவேலர் மந்தைகளை எல்லாமே இஸ்ரவேலர் நாட்டின் உட்பகுதிகளுக்கு ஓட்டிச் செல்லலாயினர். இரண்டொரு மாதங்கள் வரை, தாவீதும் அவனுடைய ஆட்களும் தங்கள் தங்கள் மந்தைகளை கவனித்து வந்தனர்.

(தொடரும்)

---

தந்தை :- 'டேய் ராமு, ஏண்டா சுவரிலே படம் கீறி சுவரைப் பழுதுபண்ணுகிறாய் ?"

ராமு :- ஆசிரியர்தானே சொன்னார் அப்பா, சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம் என்று.

தந்தை ;- .........!!!......... ?

# எப்படியோ . . . . . போகட்டும் !

★ ச. இராஜேஸ்வரி ★

சமையற்கட்டில் என் மனைவிக்கும்மகளுக்குமிடையே ஏதோ பலத்த விவாதம் நடக்கவே கையில் இருந்த வேலையைவிட்டு விட்டு அதைக் கேட்பதில் கவனத்தைச் செலுத்தினேன்.

நடுவிலே என் பெயரும் அடிபடலாயிற்று. என் பெண் இந்திராவின்குரல் சற்று ஓங்கவே என் காதைக் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு கேட்டேன்.

''அம்மா! இன்னுமொரு தடவை நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடுகிறேன். அப்பா இந்த மாதிரி எனக்கு வரன் தேடுகிறேன், வரன்தேடுகின்றேன் என்று அடிக்கடி அலைந்து கொண்டிருப்பதை நிறுத்தச் சொல்லுங்கள் அது வீண்தான். இனி என் முடிவை மாற்ற யாராலுமே முடியாது! நான் தருமலிங்கத்தைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகின்றேன்.........

இந்திராவை பேசவொட்டாது அவள்தாய் குறுக்கிட்டாள் ''இந்திரா! நாங்கள் உயிருள்ளவரைக்கும் அவனை உனக்கு கட்டிவைக்க மாட்டோம்! கனவு கூடக் காணாதே.

''நீங்கள் கட்டிவைக்காவிட்டால் பரவாயில்லை. நான் ஒன்றும் கட்டுப்பெட்டியல்ல உங்கள் வார்த்தைகளைக்கேட்டுப் பயந்து விட! நான் படித்தவள் எனக்கும் அவருக்கும் ரிஜிஸ்டர் ஆபீஸுக்கு போக வழி தெரியும்!

''இந்திரா'' என் மனைவி உச்சஸ்தாயியில் கூவினாள்,

நான் வீட்டில் இல்லை என்று எண்ணிக்கொண்டு இவ்வளவு தூரம் பேசியிருக்கிறாள் என் மகள். மேலும் மௌனமாயிருந்தால் விஷயம் விபரீதமாகிவிடப் போகிறதென்று 'இந்திரா'என்று அழைத்தேன்.

என் குரல் திடீரென்று உள்ளிருந்து கேட்டதாலோ என்னவோ பதிலும் வரவில்லை அங்கு பேச்சும் நடக்கவில்லை. சரி இம்மட்டிலாவது நம்மைக் குறித்துப் பயமிருக்கிறதே என்றெண்ணி உள்ளுக்குள் பெருமையடைந்தேன்.

''இப்படிவா, இந்திரா! என்று அழைத்தேன் இந்திரா தயங்கினாற்போல் வாசலில்வந்து நின்றாள் உள்ளேவா என்றேன். திடுமென்று அவள் முகத்தில் கடுமை ஏறிற்று விடு விடுவென உள்ளே வந்து நான் சொல்லுமுன்னரே நாற்காலியொன்றை இழுத்துப்போட்டு உட்கார்ந்து கொண்டு என்னை நோக்கி என்ன அப்பா என்று வினவினாள் திடமான குரலில். அவளுடைய என்றுமில்லாத அந்தப் புதிய தோரணையைக் கண்டு அதிர்ந்து போய்விட்டேன். என்னை நானே சமாளித்துக் கொண்டேன், படித்துப் பட்டம் பெறவைத்ததன் விளைவோ அல்லது காதலன் கற்றுத் தந்த வழியோ! நானறியேன். என் குரலில் கடுமையை யாக்கிக் கொண்டேன்.

"அம்மாவிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாயே என்ன விஷயம் என கேட்டேன். உடனடியாக அவளிடம் பதில் வெளிப்பட்டது ''என் கல்யாண விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தேன் அப்பா! கண் கலங்கிக் கொண்டிருந்த என் மனைவி சிவகாமி மெல்ல உள்ளே நுழைந்து என்னருகில் வந்து நின்றுள்

''ஓகோ! உன் கல்யாண விஷயமாக நீயே பேசிக் கொள்கிற அளவுக்கு வந்துவிட்டாயா!'' இப்பொழுது என்னையறியாமலே என் வார்த்தைகளில் சூடேறிற்று இந்திரா நிதானமாகத்தான் பேசினுள்'' ஆமாம் அப்பா! தருமலிங்கத்தைதான் நான மணம் செய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டேன் அவர் எனக்கு வாக்களித்து''..........

'இந்திரா'! நான் பொறுமையின் கடைசி எல்லையை நெருங்கினேன்.

நீ படித்தவள் என்று தான் இதுவரை நானறிவேன். ஆனுல் பண்பு கெட்டவள் என்றுநான் நினைக்கவில்லே! நினைத்ததில்லே.

இருக்கலாம் அப்பா! அம்மா எல்லாவற்றையும் சொன்னு! அதை நானும் அறிவேன் 'அவர்' உங்களுக்கு ஏழையாகவோ, வேலேயில்லாத சோம்பேறியாகவோ, குடும்பம் குலம்இல்லாத அனுதையாகவோ தோன்றலாம். ஆனுல் என்னைப் பொறுத்த மட்டில் அவர்தான் எனக்கு எல்லாம் கல்யாணம் எனக்காக! நான் செய்துகொள்ளுகிறேன். உங்களுக்காகவோ அல்லது நீங்களோ செய்துகொள்ளப்போவது அல்ல என் கல்யாணம். நான் என் வசமிழந்து கத்தினேன். இந்திரா கெட்அவுட், நட வெளியேறாயே நீ கற்றவித்தையை என்னிடமேயா காட்டுகிருய்... நான் பெற்ற மகள் நீ என்று சொல்லவே என் நாக் கூசுகிறது. நீ என் மகளே அல்ல! அவள் இறந்துவிட்டாள்! போய்விடு என் எதிரிலேயே நிற்காதே போ. போ. இந்தாங்க சிவகாமி குறுக்கிட்டாள். ஆனுல் என் பார்வையிலிருந்து கடுமையொன்றே அவளே மேலே பேசவொட்டாமல தடுத்துவிட்டது.

இந்திரா நாங்கள் உன்னைப் பெற்றவர்கள் அம்மா! எங்கள் அன்பையும் உறவையும் உதாசீனம் செய்யாதே. இந்திரா நான் சொல்வதைக் கேளம்மா. சிவகாமி கெஞ்சினுள் என்னென்னவோ செய்தாள் என் மகளோ மனம் மாறவில்லே. ''அம்மா வெளியே போகும்படி அப்பா சொல்லிவிட்டார். போகிறேன் இனி வாழப்போகிறவள் நான் தான். நீங்களல்ல! என் பதைச் சொல்லாமல் சுட்டிக் காட்டினுள். மேலும் தொடர்ந்தாள்: வெளியேறும்படி கூறிவிட்ட பிறகு என் பெயரைச் சொல்லி என்னை அழைக்கக்கூட உங்களுக்கு உரிமை இல்லே! நம்மிடையே இருந்த பந்தம் எத்தகையதாயினும் அது விட்டுப் போய்விட்டது. இனி என்ன நேரிடினும் உங்கள் வீட்டுப்படி ஏறமாட்டேன் என்பது மட்டும் நிச்சயம். வருகின்றேன், இந்திரா

மடமடவென்று தன் அறையில் புகுந்தாள். ஒரு சில விநாடிகளில் கையில் பெட்டியுடன் படி இறங்கிக் கொண்டிருந்தாள்.

இந்திரா என்று என் மனம் கூவி அழுதது. என் கண்களை நீர் திரையிட்டு மறைத்தது. சிவகாமியோ கல்லாய்ச் சமைந்துவிட்டாள். ஆனால் ஒன்றுமே முடியவில்லை. அவளை ஆசையுடன் பாசத்துடன் ஊட்டி வளர்த்தேன். இந்திரா என்ற நினைவு வந்தவுடன் நான் ஆயிரம்மைலுக்கப்பாலிருந்தாலும் அவளைக் காண அவள் மழலையமுதைக் கேட்க ஓடிவருவேன். இருவரும் அன்பைப் பொழிந்தோம் அவள் மீது நான் அவளுக்கு என்றும் ஒரு குறையும் வைக்கவில்லை. சகல உரிமைகளையும் அளித்தே கல்லூரிப் படிப்பையும் கொடுத்தேன், அவளைக் கடைசியாக நல்ல இடத்தில் மணம் முடித்துக் கொடுக்க எண்ணி இருந்தேன். அவளோ என் ஆசைகளைக் கணநேரத்தில் தகர்த்துவிட்டாள். நான் எவனை வேண்டாமென்று கூறுகிறேனோ அவன் தான் அவளுக்கு வேண்டுமாம்! என்ன பிடிவாதம்.

அவனுக்காக என்னை மட்டுமல்லாது பெற்றவாகள் பந்தத்தையுமல்லவா உதாசீனம் செய்தாள்............கேட்டால் வாழ்க்கையின் முதற் பகுதி முடிந்துவிட்டதாம். அதன் அடுத்த பகுதி இனித்தான் நடக்கவேண்டியதாம். துரோகி. மகளா இவள்?... என் கோபம் மறுபடியும் கொந்தளித்தது. சிவகாமி என்று கூவினேன். திக்பிரமையடைந்துபோயிருந்த சிவகாமி திடுக்கிட்டாள்.

செம்பில் நீர் முகந்து எடுத்து வா! என்றேன். என் இந்தத் திடீர்க் கட்டளை அவளுக்குப் புதிராக இருந்தது. நீரை செம்பில் முகந்து வந்தாள்

கைகளில் ஊற்று. குளிர்ந்த நீர் விழவில்லை. சூடான இரண்டு சொட்டு விழுந்தது. நிமிர்ந்து நோக்கினேன். சிவகாமி இந்திராவைப் பெற்றெடுத்த தாய் அழுது கொண்டிருந்தாள்.

சிவகாமி ஊற்று சொல்கிறேன். அவள் பதில் பேசாமல் செம்பை கவிழ்த்தாள். கட கட வென்று நீர் கொட்டியது எனது எந்திய கைகளில். "அழாதே சிவகாமி. பெற்ற உறவுடன் பகைத்துக் கொள்பவர்கள் பிள்ளைகளே அல்லர். இந்திராவை உருவாக்க எவ்வளவு சிரமப்பட்டிருப்போம். சிறிதாவது சிந்தித்தாளா அவள் போகட்டும் சிவகாமி! காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறிவது தான் அறிவுள்ள செயல் அவளைத் தூக்கிக் கொஞ்சிவிளையாடியதற்காக இப்பொழுது கைகளைக் கழுவுகின்றேன் அவளுக்கும் நமக்கும் உள்ள உறவை இன்றோடுவிட்டோம் என்பதற்குச் சாட்சியாகக் கையைச் சுத்தமாகக் கழுவுவோம். இந்தவினாடியோடு நமக்கிருந்த பந்தத்தை விடுகிறேன். நாம் உலகத்தில் அதிகமாக விரும்பி நேசித்தது அவளைத்தான். நாம் நேசித்தது கிட்டவில்லை அதே போல் அவள் நேசித்ததும் அவளுக்கு கிட்டாமல்...... சரேலென்று என் வாயைப் பொத்தினாள் சிவகாமி ஒரு பெருத்தவிம்மலுடன்.

உறவுடன் பகைத்து விட்ட மகளுக்கு ஏதேனும் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி நடுங்கி அந்தத்தாய் மேலே இறைவனை நோக்கி ஏதோ பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். ★

# புது உலகம் தாராய் !

— மருதூர்க்கய்யாம் —

அழிவின்றி நிலைப்பவனாய் இடனில் லாமல்
ஆதிக்கம் செய்பவனாய் அணுக்கள் யாவும்
விழியின்றிக் காண்பவனாய் வியாபித் தெங்கும்
விந்தைகள் செய்பவனாய் பரந்த அன்பு
செழிக்கின்ற நெஞ்சினனாய் செகத்தை ஆளும்
நல்ல அருள் பொங்குகின்ற இறைவ! என்றன்
எழில்நெஞ்சில் எழுகின்ற குறைகள் கேளாய்!
கேட்டு ஒரு புதுஉலகம் செய்து தாராய்!

மதியற்ற ஏழைகளைச் சுரண்டி வாழும்
வஞ்சகர்கள் வையத்தை ஆள்கின் றாரே
சதிசெய்யும் சண்டாளர் நன்மை ஏதும்
செய்யாமல் இன்பத்தில் உழல்கின் றாரே
நிதியற்ற ஏழைகள் நெஞ்சம் நொந்து
நெட்டுயிர்த்து நிலைகுலைந்து அலைகின் றாரே
கதியற்ற பாமரரை மறந்திட் டாயோ ?
காரணத்தைச் சற்றெனக்குச் சொல்லி டாயோ ?

அடுத்தவரைக் கெடுக்கின்ற ஆற்றல் மிக்கார்
அறிவுக்குப் பெட்டகமாய்த் திகழ்கின் றாரே
அடுத்தோரைக் களிக்கின்ற ஆற்றல் மிக்கார்
அறிவற்ற சிறுமையினால் நலிகின் றாரே
கொடுப்போரைக் கெடுக்கின்ற கயவர் கோடி
கும்மாளம் இடுகின்றார் குவலயத் தில்
தடுக்கின்ற நீயுமிவை பார்த்து ஏனோ
சகிக்கின்றாய் ? சொல்லாயோ ? மறந்திட் டாயோ ?

கொடுக்காது உண்ணுகின்ற குணம் படைத்தோர்
கொழிக்கின்ற செல்வத்தில் மிதக்கின் றாரே !
கொடுக்காது உண்ணாத குணம் படைத்தோர்
கூழுக்கும் வழியின்றித் தவிக்கின் றாரே !
மிடுக்காக உடையணிந்து நடையும் போட்டுச்
செல்கின்றார் கள்ளர்கள் கௌரவர் போல்
கொடுக்கின்ற இறையவனே ! கொடுமை கண்டு
கதிகலங்கி உலகத்தை மறந்திட் டாயோ ?

சூதுக்குப் பெயர் போன மாந்தர் கோடி
சூட்சிகளைச் செய்துலகில் வாழ்கின் றாரே !
சாதுகளாய் நடிக்கின்ற சண்டா ளர்கள்
சதிகள்பல திரைமறைவில் செய்கின் றாரே !
தீதினையே எண்ணிடாத நெறியின் மிக்கார்
தாழ்வுற்றுப் பழியேற்று வீழ்கின் றாரே !
ஏதுக்கு இவ்வுலகைப் படைத்தாய் நாதா
ஏனென்று சொல்லாயோ மர்மமென்ன ?

அறிவுக்குப் பேர்போனோர் எறும்பு போல
அகிலத்தில் சிறுமையினால் நலிகின்றாரே !
அறிவில்லா மூடர்கள் அறிஞர் போல
வாதங்கள் புரிகின்றார் நியதி தானோ ?
அறங்காக்கும் வேந்தர்கள் எங்கு போனார் ?
அகிலத்தை மறங்கொண்டு போகுதைய !
திறங்கொண்ட வீரர்கள் எங்கே யெங்கே ?
தற்பரனே ! கொடுமைக்கு வரம்பு கட்டாய் !

சுவனத்தில் வாழ்வதையே கருத்திற் கொண்டோர்
சொல்லொணாத் துன்பத்தில் வாழ்கின் றாரே !
புவனத்தின் வாழ்வினையே நம்பி நிற்போர்
பொருளோடும் பொன்னோடும் திகழ்கின் றாரே !
கவனத்தில் கடமையினைச் சற்றும் எண்ணார்
களிப்போடு பேரின்பம் துய்க்கின் றாரே !
புவனத்தின் செயல்களுக்கு நீதி செய்யும்
பகவானே ! இவ்வுலகை மறந்திட் டாயோ ?

பொது நலத்தைச் சற்றேனும் கருதிடா தோர்
பொன்னோடும் புகழோடும் வாழ்கின் றாரே !
நிதிவரினும் சுயநலமே நினைத்தும் பாரார்
நினைவிழந்து பொருளிழந்து தவிக்கின் றாரே !
கதியில்லா ஏழைகள் கடமை யெண்ணி
விதியோடு போராடி மடிகின் றாரே !
துதிசெய்யா மாந்தர்கள் துணிவு பெற்று
தாரணியை ஏய்ப்பதனின் மர்ம மென்னே ?

ஒருநாளும் உனையெண்ணி அஞ்சிடாதோர்
உலகத்தை ஆதிக்கம் செய்கின் றாரே !
பொருளுக்கும் பொன்னுக்கும் இச்சை கொண்டோர்
பன்றிகழி மலத்தினையும் உண்கின்றாரே !
வருங்காலம் எண்ணாமல் வாழ்கின்றாரே !
வறியவரை மதியாமல் நடக்கின்றாரே !
அருளாளா ! உனையெண்ணி வணங்கி டார்கள்
அகிலத்தை அரசாட்சி செய்வ தென்னே ?

வெறியுணர்வும் வெங்கொடுமை நினைவும் சூழ
வறியவரை வதைப்பதிலே கழிக்கின் றாரே !
அறிவின்றி அகங்காரம் கொள்கின் றாரே !
அருளாளன் இல்லையெனச் சொல்கின் றாரே !
பிறர்குற்றம் காண்பதிலே மகிழ்கின் றாரே !
பிழைசெய்யும் தனைஎண்ணா திருக்கின் றாரே !
அறம்காக்கும் இறையவனே ! முறை செய்யாமல்
இருப்பதனின் காரணத்தை இயம்பி டாயோ ?

# சீதா

★ சோக்கன் ★

"வழக்கு ஒன்றிலே வெற்றி பெற்ற சந்தர்ப்பத்திலும், வேறொன்றிலே தோற்ற பொழுதிலுமே நான் என்னை முற்றாக அழித்துக் கொண்டேன்."

— வொல்டயர் (Voltaire)

நாகராசனை அந்தக் கோலத்திலே கண்டபொழுது, சீதாவின் நெஞ்சிலே சுடர்விடத் தொடங்கிய கோபாக்கினி, அவனுடைய வார்த்தைகளால் எரிமலையாக வெடித்துச் சிதறி அவளைப் பாதாதிகேசம் வரை எரிச்சல் கொள்ளவைக்கிறது. அவள் பேசவில்லை. ஆனால் கோபத்தால் தீம்பிழம்பாகிவிட்ட விழிகள் நாகராசனைச் சுட்டெரிக்க முயல்கின்றன.

வீட்டுக்கதவோடு கதவாக நிமிர்ந்து நின்ற சீதாவை நோக்கிய நாகராசனின் கண்கள், ஒரு கணம் கூசுகின்றன. நெஞ்சைக் கோழைத்தனம் ஆக்கிரமிக்க முயலுகையில் அவன் செய்வதறியாது தடுமாறுகிறான். " 'சீ' பெட்டைச் சிறுக்கி! இவளுக்கா நான் பயப்படுவது?" என்று நெஞ்சோடு கிளர்த்தபடி, தன் கோழைத்தனத்தைப் பாம்புச் செட்டைபோல உருவி எறிந்து விட்டு, அவன் நிமிர்ந்து 'கலகல' வென்று சிரித்த வேளையிலே...

சீதா தன்னை மறந்து விடுகிறாள். "போடா வெளியே!" என்ற அவளின் கத்தலிலே வீடே அதிர்கிறது. இரத்த நாளங்கள் துடிக்கின்ற துடிப்பிலே, வெடித்தே போய்விடுமோ என்ற நிலை!

இரைச்சலைக்கேட்டுச் செல்வரத்தினமும், பூமணியும் ஓடி வருகிறார்கள். நாகராசனின் நிலையையும், சீதாவின் கோலத்தையும் கண்டு பூமணி அதிர்ச்சி அடைந்து சீதாவிற்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்கிறாள். அவளின் உடல் பட, பட வென்று நடுங்குகிறது.

செல்வரத்தினம் சர்வ சாதாரணமாக அங்கிருந்த சாய்வு நாற்காலியிலே சாய்ந்து கொள்கிறார். அவருடைய நெஞ்சமும் எரிந்து, கனிந்தாலும் அவர் பொறுமையைக் கைவிடவில்லை! வீட்டு முற்றத்திலே கல்லெறிபட்டுக் குரைத்து ஊளையிடும் நாயைப் பார்ப்பது போல இளக்காரமாக அவர் நாகராசனை நோக்குகிறார்.

தந்தையைக் கண்டதும் சீதா பெட்டிப்பாம்பாகி விடுகிறாள். பழையபடி அடக்கமும், மென்மையும் அவளை ஆட்கொள்ள, நடுங்கிக் கொண்டு நின்ற பூமணியைத் தன்னோடு அணைத்துக் கொள்கிறாள், அவள்!

"என்ன விஷயம்? எங்கே வந்தாய்?" செல்வரத்தினத்தின் கேள்வி.

அந்தக் கேள்வியிலே தொனித்த நிதானமும், சூழவிருந்த மயான அமைதியும் நாகராசனைத் துணிவு கொள்ளச் செய்கின்றன. அவன ஏகத்தாளமாகப் பேசத் தொடங்குகிறான்.

"மிஸ்டர் செல்வரத்தினம்! நீர் என்ன சாதி? இவள்—இந்

தப் பூமணி—என்ன சாதி ? இவளை ஏன் காணும் வீட்டில் அடுத்து வைத்திருக்கிறீர் ?"

அது எங்கள் சொந்த விஷயம்."

"சொந்த விஷயமோ ? ஊரெல்லாம் உம்மையும், இவளையும் சேர்த்துச் சந்தி சிரிக்கப் பேசுவது உமக்குத் தெரியாதா ?

"தெரியும் ! அதைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை. நீ இப்போ வெளியே போ."

"அட போகாவிட்டால் என்ன செய்து விடுவீர் ? உம்முடைய விஷயம் எனக்குத் தெரியாதாக்கும் ! ஏன் காணும் சாகிற காலத்திலே உமக்கு இந்த விசர் வேலை ? பூமணியை 'மிஸ்ட்ரெஸ்' ஸாக வைத்திருக்க வெட்கமில்லையா ? தூ......" நாகராசன் காறி உமிழ்கிறான் !

'பளீர்...' நாகராசனுடைய கன்னத்திலே விழுந்த அந்த அடி வளைக்காத்திலிருந்து புறப்பட்டது தானென்றாலும், அவன் நிலை குலைந்து போய் விடுகிறான் !

சீதாவும், செல்வரத்தினமும் திகைத்துப் போகிறார்கள். "பூமணிக்கா இத்தனை துணிச்சல்" அவர்களால் நம்பவே கூடவில்லை !

ஒன்று ! இரண்டு ! மூன்று ! நான்கு ! அறையா அது? பேயோ பிசாசோ வந்து முகத்தைப் பெயர்த்து எடுத்துவிட்டது போல அல்லவா இருக்கிறது ?

நாகராசன் சுருண்டு முற்றத்திலே விழுந்து உருண்டு கொண்டே போகிறான். தட்டுத் தடுமாறி எழுந்தவன் பாம்புச் சீறல் ஒன்று சீறி



**மிருக பலத்தினால் எந்த மதத்தையும் காப்பாற்றி வர முடியாது. அதற்குப் பதிலாக வாள் எடுத்தவன் வாளினாலேயே மடிவான். இது என் திடமான கருத்து.**

**—மகாத்மாகாந்தி**

விட்டுக் கேட்டைத் திறந்தவன் தான...! ஆள் போன சுவடே தெரியவில்லை !

பூமணி திரும்புகிறாள். ஓடிச் சென்று செல்வரத்தினத்தின் காலடியிலே விழுகிறாள். "ஐயா ! ஐயா ! என்னை மன்னித்து விடுங்கள் ஐயா ! நாகராசன் உங்களைச் சேற்றிலும், சகதியிலும் இழுத்துச் சென்றதை என்னால் தாங்கக் கூடவில்லை! என்னை மறந்துவிட்டேன். வாயால் பேசவே கூடாத வார்த்தைகளைப் பேசினான். ஆத்திரத்தில் பேயாகவே மாறிவிட்டேன்" என்று அவள் விம்மி விம்மி அழுகிறாள்.

'எழுந்திரு மகளே!' செல்வரத்தினம் ஆதாரவோடு சொல்கிறார். அடுத்த நிமிஷம் எதுவுமே நடவாதவர்போல் எழுந்து தம் அறைக்கும் போய் விடுகிறார்.

பூமணி ஓடிச் சென்று சீதாவைக் கட்டி அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுகிறாள்.

சீதா ஆதரவோடு பூமணியின் முகத்தை நிமிர்த்தியபொழுது, அவள் கண்களை மூடிக்கொண்டு,

பலவந்தமாக முகத்தைப் பறித்துச் சீதாவின் நெஞ்சுக்குள்ளே புதைத்துக் கொள்கிருள்.

'செய்யத்தகாததைச் செய்து விட்டேன' எனற வெட்கமோ ?

நாட்கள் உருண்டோடுகின்றன' கதிரனின் வழக்கு அப்பீல் கோட்டிலும் நடந்து முடிகிறது.

செல்வரத்தினத்தின் விடா முயற்சி, அவர் ஏற்படுத்தியிருந்த அப்புக்காத்தின் வல்லமை எல்லாம் சேர்ந்து கதிரனைத் தூக்கு மரத்திலிருந்து காப்பாற்றின, என்பது என்னவோ உண்மைதான். ஆனல் அவனுக்குப் பன்னிரண்டு வருடக் கடூழியச் சிறை கிடைத்ததை, அவர்களால் தடுத்து நிறுதத் கூடவில்லே.

அநியாயத்தை நேருக்கு நேர் நின்று போரிட்டு அதைப் பூண்டோடு அழிக்க முடியவில்லேயே என்று செல்வரத்தினமும், சீதாவும் வருந்தியது கொஞ்சமல்ல. ஆனலும் நிரபராதியான ஓர் உயிர் தப்பிப்பிழைத்ததில் அவர்களுக்கு ஓரளவு நிம்மதி ஏற்படவே செய்கிறது !

அப்பாடா ! எவ்வளவு அலேச்சல் ? எவ்வளவு பொருட் செலவு ? "சட்டம் என்பது ஓர் எலிப்பொறி அதனுள்ளே இலகுவாக நுழைந்து விடலாம்; ஆனல் வெளிவருவதுதான் கடினம்" என்று அறிஞர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிருர்கள் ?

செல்வரத்தினத்திற்குப் போதும், போதும் என்று ஆகிவிடுகிறது. இந்த ஆறுமாத இடைவெளிக்குள் மூப்பும், பிணியும் அவரை நன்கு முற்றுகை இட்டு விடுகின்றன. பூமணியின் ஏக்கமும், சீதாவின் உத்சாகமான தூண்டுதலும் இல்லாமல் இருந்தால், அவர் எப்போதோ அலுத்துக் களேத்துச் சோர்ந்து போய் இருந்திருப்பார் !

செல்வரத்தினம் என்ற திரி, கூடுவிட்டு எரிகின்ற ஒவ்வொரு சமயத்திலும் அதற்கு எண்ணெயாய் நின்று சுடர் விடச் செய்தார்கள் சீதாவும், பூமணியும் !

பூமணி, கதிரனின் நிரபராதித் தன்மையை உணர்ந்து கொண்டதற்குப் பிறகு நாளிலும் பொழுதிலும் அவனுக்காகவே உருகத் தொடங்கிவிட்டாள்; 'அத்தான் விடுதலேயாவாரா ? தூக்குமரத்திலே தொங்குவாரா ?' என்று தெரிந்து கொள்ள இயலாது அவளின் நெஞ்சம் 'ஆச்சி பூச்சி' ஆடியது கொஞ்சமா ? நஞ்சமா ?

அதைப் பார்க்கும் கல்லும் உருகிக் கரைந்தோடும் என்ருல், சேவைக்கும் இரக்கத்திற்கும் இலக்கியங்களாக விளங்கிய செல்வரத்தினமும், சீதாவும் உருகியதா பெரிது ?

"உம்! கடவுள் இரங்கிவிட்டார். அத்தானின் உயிர் பிழைத்துவிட்டது. ஆனல் அவரைப்பற்றி நலிக்கும் அபவாதம்தொலேயவில்லேயே! அப்புவை அவர்தான கொன்ருர் என்றுசட்டமும், ஊரும், உலகமும் தூற்றிக்கொண்டுதானே இருக்கின றன? அதன்பிரதிபலிப்பாகச் சிறையிலேபன்னிரண்டு வருடங்களே அவர் கழித்தே ஆகவேண்டும். பழி ஓர் இடம் பாவம் ஓர் இடமா?" என்று பூமணி தனிமையிலே வருந்தியபடி தான் இருக்கிருள !

அவளின் துன்பத்திற்குமுடிவு ஏது ?


துன்பத்தால் உறிஞ்சப்பட்டுச் சக்கையாகி விட்ட உடல். சிந்தனை பிரவாகித்து ஓடியபின் வற்றி வெடித்த கலர் நிலம் போன்ற முகம். குழிவிழுந்த கண்கள். பற்றைக் காடு போலத் தாடி மூடிய கன்னங்கள். காலத்திற்கு முன்பே கவலையில் நரைத்த தலை மயிர்க் கற்றை இவைதாம் கதிரனின் இன்றைய தோற்றம் !

தான் அழாமலே மற்றவர்களை அழவைக்கக் கூடிய, அந்தப் பரிதாப உருவம் சிறைக்கம்பிகளின் உள்ளே கூனிக் குறுகி நிற்கிறது. அதைத் தனிமையிலே, நீண்ட நாட்களுக்குப் பிறகு கண்ட பொழுது பூமணியின் அங்கமெல்லாம் கண்ணீராய் ஓடியதில் வியப்பென்ன ?

விம்மிப் புடைத்து வெடிக்கின்ற அந்தச் சில நிமிஷங்களை, ஏன்தான் வருந்தி விண்ணப்பித்துப் பெற்றோம் என்று பூமணி நினைக்கிறாள். ''ஐயோ ! அத்தான ! அருச்சுனனாகவும், காத்தவராயனாகவும் வேடம் போடும் உனது கம்பீரச் சௌந்தரிய தோற்றம் எங்கே ஒளிந்துவிட்டது ?'' என்று பூமணியின் நெஞ்சு புலம்பிப் புலம்பி ஓய்கிறது. அவள் ஒன்றுமே பேசவில்லை. வார்த்தைகளின் உற்பத்திஸ்தானமான நா, சோக சமுத்திரத்தினுள்ளே அமுங்கிப்போய் முக்குளிக்கையில் பேச்சிற்கு இடம் ஏது ?

பூமணி மௌனமாக நிற்கிறாள். அந்த மௌனத்தைக் கதிரன் தப்பர்த்தம் செய்து கொள்கிறான். ''மச்சாள் ! இன்னும நீ என்னை நம்பவில்லையா? அம்மானை நான்தான் கொன்றேன் என்று நீ நினைக்கிறாயா ?'' அரையுங் குறையுமாகக் கதிரனின் வாய் விம்மலுக்கிடையிலே உதிர்த்த வார்த்தைகள், இவை.

''அத்தான் ! நீ குற்றவாளியே யல்ல. நீ ஊரும் எறும்புக்குக் கூடத் தீங்கு செய்யமாட்டாய் என்பதை நான் அறிவேன். நீ நிரபராதி ! நிரபராதி ! நிரபராதி !'' என்று சிறைச்சுவர்களெல்லாம் அதிரும்படி குரல் எடுக்கவேண்டும் என்று பூமணி நினைத்தாலும், வார்த்தைகள் என்னவோ தட்டுத் தடுமாறி மிக மெதுவாகத்தான் வெளியேறுகின்றன. ''நான் உங்களை நம்புகிறேன். வீணிலே உணர்ச்சிவசப்பட்டு, நீங்கள் குற்றவாளி என்று தப்புக்கணக்குப் போட என்மனம் இடந்தராது. அந்தப் பாவத்தை இனியும்நான் செய்யமாட்டேன்.''



**மனிதர்களால் வெட்டப்பட்ட செயற்கைக் கால்வாய் எனப் பெயர் பெற்ற சுயெஸ் கால்வாய் 1869-ம் ஆண்டு வெட்டப்பட்டதாம். இக்கால்வாய் யாருடைய தலைமையின் கீழ் வெட்டப்பட்டது. தெரியுமா ? பேடினன்டி லெசப்ஸ்என்ற என்ஜினியரின் தலைமையில் வெட்டப்பட்டது. இக்கால்வாயின் நீளம் 103 மைல். ஆழம் 38 அடியாகும்.**

**— அ. கனகசூரியர்**

கதிரன் ஆனந்த பரவசனாகி விடுகிறான். துள்ளிக் குதிக்காத குறையாய்க் கம்பிகளுக்கு அருகே ஓடிவந்து, அவற்றினூடாகக் கையை வெளியேவிட்டுப் பூமணியின் கைகளைப் பற்றிக் கொள்கிறான். ''உண்மையாகவா? மச்சாள்! நான் அவ்வளவு பாக்கியசாலியா ?''

பூமணி பேசவில்லை. அவளின் விழிகளிலிருந்து பெருகி ஓடும் கண்ணீர் கதிரனின் கையிலே பட்டுத் தெறிக்கிறது. 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ?'

கதிரன் மெய்ம்மறந்து பித்தன் போலப் புலம்பத் தொடங்குகிறான். ''மச்சாள் ! இனி நான் செத்தால் கூடப் பரவாயில்லை. நான் யாரை என் நெஞ்சிலே கோயில்கட்டி வழிபட்டேனோ, அந்தத் தெய்வம் எனது தூய்மையை உணர்ந்து விட்டது. அது போதும்! மச்சாள் ! பன்னிரண்டு வருடங்கள் என்ன ? அதைப்போல் இன்னும் பன்னிரண்டு வருடங்களையும் சிறையிலே கிடந்து கழிக்க நான் தயார்'' கம்பீரமாக நிமிர்ந்து நின்று அவன் இந்த வார்த்தைகளை உதிர்த்தபோது, பூமணியின் உடம்பு முழுதும் சிலிர்த்தது. போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. ''வேண்டாம் அத்தான்! நல்ல பிள்ளையாக நடந்து விரைவிலே வெளியே வரப்பாருங்கள்.........''

கதிரனுக்கு வெறியே ஏற்பட்டு விடுகிறது. அவன் பூமணியின் கைகளை அழுத்திப் பிடித்தபடி 'நீ எனக்காகக் காத்திருப்பாயா ?' என்று கேட்கிறான்.

''காத்திருப்பேன். உங்களுக்காக என் நெஞ்சிலே அன்பைச் சுமந்து கொண்டு காலமெல்லாம் காத்திருப்பேன்.'' என்று நிலை தளராத உறுதியோடு பூமணி சொல்கிறாள்.

கதிரனுக்கு என்னசொல்வது, என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் அந்த வார்த்தைகள் தந்த இன்ப சுகானுபவத்திலே மூழ்கிப்போய்க் கண்களை மூடிக்கொண்டு நிற்கிறான்.

நீண்ட நெடும் யுகங்கள் உற்பவித்து வாழ்ந்து மறைந்து போகின்றன !

திடீரென்று கதிரன் விம்மி, விம்மி அழுகிறான். ''மச்சாள் ! உன்னை விளங்கிக் கொள்ளாமல், என் வாழ்வையே நரகமாக்கி விட்டேன், பார்த்தாயா ? ............... போகட்டும், கறந்தபால் இனி முலை ஏறவா போகிறது? ஆனால் ஒன்று. நான் தனிமையிலே கடவுளைக் கும்பிட நேரும் போதெல்லாம் ஒன்றைத்தான் வேண்டிக் கொள்ளப் போகிறேன்..........''

''என்ன வேண்டுதல்?'' என்ற கேள்வி பூமணியின் விழிகளிலே குத்திட்டு நிற்க, அவள் கதிரனை நிமிர்ந்து நோக்குகிறாள்.

''ஏழேழ பிறப்பிலும் பூமணியே என் மனைவியாக வேண்டும் என்பது தான் அது''

வார்த்தைகளின் பொருளும் பொருள் பொதிந்த வாழ்வும் கற்பனைக்கனவாக அவர்கள் இருவருடையவும் மனக்கண்களின் முன்பு விரிய–

மெய்ம் மறந்து நிற்கிறார்கள் ! திடீரென்று நினைவு வரக் கதி

ரன், அவளின் கைகளைவிட்டு விட்டு மன்றாடுங்குரலிலே, "மச்சாள்! நான் திரும்பிவரும்வரையில் ஆத்தையைக் கவனிக்க வேண்டியது உன்பொறுப்பு......"

பூமணிக்குத் 'திக்' என்கிறது. என்ன சொல்வதென்றே தெரியாது தலைகுனிந்து நிற்கிறாள். கண்ணீர்சளுக்குள்ளே நெறிகட்டுகிறது.

எப்படிச்சொல்வாள்? உண்ணாமல், குடிக்காமல் பைத்தியம்போல அலைந்து திரிந்து, கதிரனின் தாய் செத்துப்போனாள்; அனாதைப்பிணமாகச் சுடலைக்காற்றிலே கலந்து விட்டாள்; என்று பூமணி எப்படிச் சொல்வாள்?

நல்லகாலம்! தருமரைப்பொய் சொல்வதிலிருந்து கிருஷ்ணனின் பாஞ்சசன்னியம் எப்படிக் காத்ததோ, அதுபோலச் சிறைக்காவலாளியின் "நேரமாகி விட்டது" என்ற குரல் பூமணியைப் பொய்மையினின்றும் காப்பாற்றி விடுகிறது!

அவள் வெளியேவந்து செல்வரத்தினத்தோடும், சீதாவோடும் சேர்ந்து கொள்கிறாள்.

லோபியின் சருந்தனம்போல நாளிலும், பொழுதிலும் பூமணியின் நினைவிலே சுழலகின்ற எண்ணங்கள், எப்பொழுதும் கதிரனையே சுற்றிப் படர்ந்தபடி இருக்கின்றன.

கவிஞனுக்குக் காவியத்தையும், பாடகனுக்குச் சோககீதத்தையும், சிற்பிக்கு உயிர்ச்சிற்பங்களையும் வடிக்க வழிவகுக்கும், இந்த எண்ணங்கள் பூமணிக்கு எவ்வகையில்உபயோகமாகப் போகின்றன?

அவளின் நிலை 'இலவுகாத்த கிளி'யின் நிலை போன்றது தானா? பன்னிரண்டு வருடங்கள்......!

(தொடரும்)


**வேடரைப் பற்றிய வெளியீடுகளுக்கும்**
**சித்திரக்கலை நுட்ப வெளியீடுகளுக்கும்**
எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தற்போது கைவசமுள்ள நூல்கள்:

1. **யாரிந்த வேடர்** ரூ. 2-50
2. **பறவைகளை வரைவதெப்படி?** ரூ. 2-50

தொடர்ந்து பல நூல்கள் வெகுவிரைவில் வெளிவரும்.

விபரங்களுக்கு:

**ஜீவா பதிப்பகம்**
பிரதானவீதி, தேற்றாத்தீவு
களுவாஞ்சிக்குடி P. O., இலங்கை.

# சிங்கள இலகு பாடம்--5

நான்காவது பாடத்தில் ஈரெழுத்துச் சொற்கள் சிலவற்றைப் படித்தோம். இப்பாடத்தில் சில மூன்றெழுத்துச் சொற்களையும் அவற்றின் கருத்தையும் படிப்போம். சொற்களை எழுத்துக் கூட்டி மனனம் செய்து கொள்க.

| சிங்களம் | உச்சரிப்பு | தமிழ்க் கருத்து |
|---|---|---|
| අඩිය | அடிய | அடி |
| අයියා | அய்யா | அண்ணன் |
| අලියා | அலியா | யானை |
| කපුටා | கபுட்டா | காகம் |
| කතුර | கத்துற | கத்தரிக்கோல் |
| කුමරා | குமரு | அரசகுமாரன் |
| කුකුළා | குகுளா | சேவல் |
| කුක්කා | குக்கா | நாய்க்குட்டி |
| කිකිලි | கிக்கிலி | கோழி |
| කෙසෙල් | கெசெல் | வாழை |
| කෙල්ල | கெல்ல | சிறுமி |
| ගිරවා | கிறவா | கிளி |
| ගෙඩිය | கெடிய | பழம் |
| ගොවියා | கொவியா | கமக்காரன் |
| ගෙදර | கெதற | வீடு |
| මල්ලි | மல்லி | தம்பி |
| මඩම | மடம | மடம் |
| මහන | மகன | தையல் |
| මාළුවා | மாலுவா | மீன் |
| මිරිස් | மிறிஷ் | மிளகாய் |
| මුහුණ | முகுண | முகம் |
| මුහුද | முகுத | கடல் |
| මිනිහා | மினிகா | மனிதன் |
| මොණරා | மொணரு | மயில் |
| යහන | யகன | கட்டில் |

| | | |
|---|---|---|
| යතුර | யத்துற | சாவி |
| යාරය | யாறய | யார் |
| වරාය | வறாய | துறைமுகம் |
| වතුර | வத்துற | தண்ணீர் |
| වලහා | வளகா | கரடி |
| වනය | வனய | காடு |
| වත්ත | வத்த | தோட்டம் |
| බල්ලා | (b)பள்ளா | நாய் |
| බළලා | (b)பலளா | பூனை |
| බසය | (b)பசய | பஸ் |
| බිසව | (b)பிசவ | அரசி |
| බූරුවා | (b)பூறுவா | கரடி |
| බිහිරා | (b)பிகிரு | செவிடன் |
| බෙල්ල | (b)பெல்ல | கழுத்து |
| පනාව | பனுவ | சீப்பு |
| පතෝල | பத்தோல | புடலங்காய் |
| පහන | பகன | விளக்கு |
| පාදුර | பாதுற | பாய் |
| පිහිය | பிகிய | கத்தி |
| පුටුව | புட்டுவ | கதிரை |
| පොරව | பொறவ | கோடரி |
| තරුව | தறுவ | நட்சத்திரம் |
| තාත්තා | தாத்தா | தகப்பன் |
| සතුරා | சத்துரு | சத்துரு |
| සායම | சாயம | சாயம் (கலர்) |
| සිනුව | சினுவ | மணி |
| සිවලා | சிவளா | நரி |
| නළල | நழல | நெற்றி |

| | | |
|---|---|---|
| නාසය | நாசய | மூக்கு |
| නෑදෑයා | நැதැயா | உறவினர் |
| නෙල්ලි | நெல்லி | நெல்லிக்காய் |
| ළමයා | லமயா | பிள்ளை |
| එළුවා | எளுவா | ஆடு |
| ලියුම | லியும | கடிதம் |
| එළිය | எலிய | வெளிச்சம் |
| ඔළුව | ஒளுவ | தலை |
| ඔරුව | ஒறுவ | படகு |

## பயிற்சி — ௫

1. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை எழுதுக :

(1) கடிதம் = (4) தோட்டம் =
(2) வீடு = (5) பழம் =
(3) கடல் = (6) நெற்றி =


2. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

(1) පූටුව = (4) මොණරා =
(2) වතුර = (5) නාසය =
(3) මල්ලි = (6) කපුටා =

3. பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக :

(1) ගො—යා — கமக்காரன்
(2) —ලහා — கரடி
(3) බළ— — பூனை
(4) යා—ය — யார்
(5) —තෝල — புடலங்காய்
(6) ලියු— — கடிதம்

# புத்தக மதிப்புரை



நூல் :

கன்னிப்பெண்

ஆசிரியர் :

''நகுலன்''

விலை :

ரூபா 2-50

பக்கங்கள் :

148+xvi

பதிப்பு :

கலைவாணி அச்சகம்,
யாழ்ப்பாணம்.

தரமுள்ளனவும், தரமில்லாதனவுமான சிறுகதைத் தொகுதிகள் மலிவு பொலிவாக வெளிவந்து கொண்டிருக்கும் போது திரு. நகுலன் அவர்கள் தாம் எழுதிய முப்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகள் தினகரன், வீரகேசரி, ஈழநாடு, சுதந்திரன் விவேகி, கலைவாணி முதலிய பத்திரிகைகளில் வெளிவந்திருந்தும் புத்தக ரூபமாக வெளியிடாதது சிறுகதைப் பிரியர்களுக்கு பெருந் துன்பமாகவே இருந்திருக்கும்.

இத்துன்பத்தைநீக்க விரும்பி தாம் எழுதிய பன்னிரண்டு கதைகளைத் தொகுத்து புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார்.

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை B. A. Ph. D. (lond) அவர்களளித்த ஆசியுரையும், கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரியர் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் செல்வி க. சௌ. சந்தன நங்கை அவர்கள் அளித்த வாழ்த்துரையும், 'ஈழநாடு' ஆசிரியர் உயர் திரு. கே. பி. ஹரன் அவர்கள் உதவிய அணிந்துரையும், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் உயர் திரு. ச. அம்பிகைபாகன் B. A. அவர்கள் மகிழ்ந்தளித்த, மதிப்புரையும் கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர், பண்டிதர் சு. இராசையா அவர்கள் வழங்கிய வாழ்த்தொலியும், ஆசிரியர் நகுலனின் முயற்சித்திறனைப் பல்வேறு கோணங்களில் படம்பிடித்துக் காட்டுவனவாயமைந்துள்ளன.

திரு. 'நகுலன்' அவர்கள் ஓர் ஆசிரியராயும், நடனம், சித்திரம், நாடகமாதிய நுண்கலைகளிற் பரிச்சயம் உள்ளவராயும் இருப்பதினுல் தமது கதைகள் மூலம், குடி, சூது, சீதனம் முதலிய சமூக ஊழல்களை நீக்குதற்குரிய அவசியத்தை இலாவகமாக விளக்கியுள்ளார்.

கவர்ச்சியான அட்டைப் படத்துடன், வெண்மையான கெட்டித்தாளில் அச்சிடப்பட்டிருக்கும் ''கன்னிப் பெண்'' ஒவ்வொருவர் கையிலும் இருக்குமென நம்புகிறோம்.

— ஆசிர்

**பாரதி நினைவுக் கட்டுரை**

# "செப்ரெம்பர் பதினொன்று"

## (ஐயா. ஜோசப்)

**க**விஞன் —

அவன மனித அமைப்புக் கொண்ட அற்புதப் பிறவி அவனது பாடல்கள் காலத்தை வென்று நிற்கும். சொற் சித்திரங்களில் அவன் வடிக்கும் கவிதைகள் ஆழ்ந்த பொருட் சிறப்பையும், புதிய புதிய சிந்தனையையும் தூண்டி புதுமையை விளைவிக்கும். படிக்கப் படிக்க தெவிட்டாத இனிமையை உள்ளத்தில் ஏற்படுத்தி ஆனந்த வெள்ளத்தில மனதை திக்கு முக்காட வைக்கும். அவன் பாடல்கள் தீமைக்கு வேட்டு வைத்து நன்மைக்கு பாதையமைக்கும். அவன் சிந்தனைகள் அதர்மத்தை அழித்து சத்தியத்தை நிலைநாட்டும். இறைக்க இறைக்க பெருக்கெடுத்துப் பாயும் நீரூற்று அவனது கவிதா சக்தி. காவியங்கள் ஓவியங்களெல்லாம் கவிதையில் கொஞ்சும். அவன்தான் உண்மைக் கவிஞன். மக்கள் உள்ளத்தில் அவனுக்கு எக்காலத்திலும் நீங்காத ஒரு நிரந்தர இடம் உண்டு.

எழுத்தாளனைப் பற்றி கோல்ட்ஸ் சிமித் என்ற அறிஞர் கூறுகிறார். "அவர் தொடாதது ஒன்றுமில்லை. தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதில்லை"யென்று

கம்பராமாயணமும், திருக்குறளும், சிலம்பும் தோன்றிய பின்னர் நீண்ட காலமாக தமிழக கவிதை வானில் ஒரு மலர்ச்சியற்ற மந்த நிலை--தமிழர்களின் கவிப் பெருமை நலிந்து, மெலிந்து இல்லாமையாகி விடுமோ என்ற ஏக்க நிலையில் "பொழுது புலர்ந்தது யாம் செய்தவத்தால் புன்மையிருட் கணம் போயின யாவும்" என்ற சங்க நாதம் தமிழில் கமழ 1882-ம் வருடம் காலை இளம் பரிதி போல தமிழர்களின் தவப்பயனாக அவதரித்தார் கவியரசர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார். பாரதியின் தோற்றத்தினால் தமிழில் கவிதை வளம் உயர்ந்தது. எளிய தமிழ் தமிழர்களின் உள்ளங்களில் குடி கொண்டது. வசன நடை மறு மலர்ச்சி பெற்றது. ஏக்கநிலை மாறி தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்க ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அந்நியர் ஆட்சியில்--அடிமைத் தளையில் வருந்திச் சோர்ந்த பாரத மக்களின் உள்ளத்திற்கு விடுதலை வேட்கையை மூட்டி சுதந்திர உணர்வை கொழுந்து விட்டெரியச் செய்த பாடல்கள் கவிஞர் பாரதியின் உணர்ச்சி மிக்க விடுதலைப் பாடல்கள்தாம். "என்று தணியும் இந்த சுதந்திர தாகம். என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்" என்பதில் சுதந்திரத்தில் பாரதிக்கிருந்த பற்றையும், அடிமைத் தனத்தை வேரோடு களைய அவர் கொண்டுள்ள திட சங்கற்பமும் தெரிகிறது.

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமே" என்ற தீர்க்க தரிசனத்தை முன் மொழிந்து எதிர்கால பாரதம் பெற இருந்த பெருமை **மிக்க**

சுதந்திரத்தை தமது தீர்க்க தரிசன கவிதை நெஞ்சத்தால் உணர்ந்து ஆனந்தக் கூத்தாடிய கவிஞர் அவர்.

பாலிய வயதிலிருந்தே புலவர் வறுமை அவரைப் பிடித்துக் கொண்டது.

துன்பங்கள் தொடர்ந்தன-- மனம் கலங்கினரா ? வறுமையை எள்ளி நகையாடிய புலவர் அவர். ''தனி ஒருவனுக்கு உணவில்லை யென்றால் இந்த பரந்த உலகம் இருந்தும் பயன் என்ன ? என்று விண்மட்டும் முரசறைந்த புலவர் அவர். காலனுக்கும் சவால்விட்ட புலவர் அவர். ''தேடிச் சோறு நிதந் தின்று-பல சின்னஞ் சிறு கதைகள் பேசி-மனம் வாடித் துன்பமிக உழன்று-பிறர் வாட பல செயல்கள் செய்து-நரை கூடிக் கிழப்பருவ மெய்திக்-கொடுங் கூற்றுக்கிரையெனப் பின்மாயும் பல வேடிக்கை மனிதரைப் போல-- நான் வீழ்வேன என்று நினைத் தாயோ ! என்று வீரம் பேசுகிறார். நான கவிதை எழுதுகிறேன். என்கையில் இருக்கும் ஆயுதம் எளுத்தாணி-என் தெய்வம் என்றும் ''எனக்கு தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்......'' ,'எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்'' என்று எழுத்திலும் தெய்வத்தை காண்கிறார் பாரதியார்.

இன்றைய பாப்பாக்களே (சிறுவர்களே) எதிர்கால நாட்டின் மன்னர்கள் என்பதை உணர்ந்து அறிவையும், வீரத்தையும் மழலை மொழிகளில் அவர்களுக்கு ஊட்டி களிப்புற எண்ணிய புலவர். 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா. தெய்வம் நமக்கு

> **உலகில் சனத்தொகை அதிகமுள்ள நாடு சீனு. இங்கு எவ்வளவு பேர் வசிக்கிறார்கள் தெரியுமா ? ,64 கோடி என்று கணக்கெடுத்துள்ளார்கள்.**
>
> **— அ. கனகசூரியர்**

துணைபாப்பா-ஒரு தீங்குவர மாட்டாது பாப்பா' என்னும் வண்ணம் அறிவை புகட்டுகிறார் அது மட்டுமா தீமை செய்பவர்களை 'மோதி மிதி' என்றும் வீரத்தை புகட்டுகிறார். புதிய ஆத்திசூடியை தந்து 'அச்சம் தவிர்' என்று ஆண்மையை இளம் நெஞ்சத்தில் பதிய வைக்கிறார். வாழும் நெறிகாட்டி வாழவைக்கும் ஆசிரியனாகவும் திகழுகிறார்.

தமிழ் நாட்டின்பெருமையை தமிழர்களின் உயர்வை எண்ணி, எண்ணி புளகாங்கிதமடைந்த புலவா தமது எண்ணத்தை கவிதைகளில் வடிக்கும் விதம், அதன் பெருமையை பாருக்குச் சொல்லி பெருமைப்பட வேண்டும் என்ற தாபம் அவர் இதயத்தில் இழையோடிக் கொண்டிருக்க வேண்டும். உடனே கணீர் என்ற மணிக்குரலில்.

''செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி
பிறக்குது மூச்சினிலே!' என்றும்
'வேதம் நிறைந்த தமிழநாடு......'

'கம்பனை, வள்ளுவனை, இளங் கோவை ஈன்ற இன்பத் தமிழ் நாடு என்று பண்ணிசைத்து முழங் குகிறார் கவிஞர்.

மனிதர்கள் சிலரின் தன்நலப் போக்கு, உள்ளத்தில் ஒன்று வைத்து உதட்டில் விஷமப் புன் னகையை வேண்டுமென்று வரு வித்து ''நானும் நண்பன்'' தான் என்று நடிக்கும் போலி வேடதா ரிகளை பாரதியார் கனல் கக்க சாடுகிறார். அவர் ஆத்திரம் பீறிட்டு ரோமம் சில்லிட்டு குத்தி நிற்கிறது-

''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்
திறனுமின்றி
வஞ்சனை சொல்வாரடி கிளியே
வாய்சொல்லில் வீரடி'' என்றும்
''நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மனிதனை
நினைந்துவிட்டால்......''

என்ற விதமாக தனது ஆத்தி ரத்தை கொட்டி தீர்த்துக் கொள் கிறார்.

வாழ்க்கை மலர்ச் சோலையல்ல. இன்பமும், துன்பமும். மாறி, மாறி மனிதனை ஆட்டிப் படைப்பது தான் வாழ்க்கையின் நியதி. 'மனிதா உள்ளத்தில் உரம் கொண்ட நீ இதற்கெல்லாம் அஞ்சி, துஞ்சிக் கிடக்கலாமா? பயம் கொள்ளாதே தெளிவுகொள் ''இன்னல் வந்திடும் போதகற் கஞ்சோம் ஏழையராகி இனி மண் ணில் துஞ்சோம்'' என்று மனித இதயங்களை தட்டி வீர உரை பக ரும் பாடல்களுக்கு உரிமையாளர் கவியரசர் பாரதிதான். அதுமட்டுமா

தேம்பி, தேம்பி, கவலைப்பட்டு செத்து மடியும் மானிட இனத் தின் கோழைத் தன்மையை பாரதி யார் கண்டிக்கிறார். வெறுக்கிறார். வீரர்களாக வேண்டாம். ஆனால் கோழைகளாக வேண்டுமா என்று கேட்கிறார். மாண்டு மடிந்து மண் ணாகவா நாம் பிறவி எடுத்தோம் நாம் எடுத்த பிறவியின் பயன என்ன என்று கேட்டு

''வடகோடிங் குயர் தென்னே
சாய்ந்தாலென்னே
..............................
திடங்கொண்டு வாழ்ந்திடுவோம்
தேம்பல் வேண்டா
தேம்புவதில் பயனில்லை
தேம்பித் தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடி
கோடி
எதற்குமினி அஞ்சாதீர்
புவியிலுள்ளீர்'' என்றவாறு

மானிட சமூகத்திற்கு கோழை மனப் பாண்மையை விட்டு வீரத் துடனும், தீரத்துடனும் வாழு மாறு கவிதை பொழிந்து புதிய தெம்பு நிறைந்த சமுதாயத்தை காண விழைகிறார். எதற்கும் அஞ் சாதீர் மாடனிடர்களே என்கிறார்.

''பெண்மை வாழ்கவென்று
கூத்திடுவோமடா''
''வந்தே மாதரம் என்போம்''.

இவையெல்லாம் சமூகம் பெண் ணினத்தின் உரிமையை மறுத்து அடக்கி ஆண்டதை நினைத்த பாரதி யின் உள்ளத்தின் அடியின் அடி யிலிருந்து உதிரத்துடன் கலந்து தெறிக்கும் ஆவேசம் நிறைந்த சமத்துவ கூப்பாடுகள். கோசங்கள். இவை சமத்துவ நோக்கில் பாரதி கொண்ட பற்றின் உள்ளத்து குமு றல்கள். மாதர் யார்? நாட்டின் முடி சூடா மன்னர்களை பெற்று வளர்த்து, பேணிக்காத்து உலவவிட்ட தெய் வங்களல்லவா பெண்கள். இத் தகைய பெண்குலத்தினை அடிமை

யாக்கி, அடக்குவது முறையா? நீதியா? ''மாதர் தம்மை இழி செய்யும் மடமை கொழுத்துவோம்' ''வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா' இத்தகைய பெருமை வாய்ந்த பெண்குலத்தை ஒதுக்கி ஆண்கள் வாழ்வதா? கூடாது என்று துடிக்கிறார் பாரதியார். அத்துடன் விட்டாரா. பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள் பேசிக் களிப்போடு நர்ம்பாட.........'

''கும்மியடி தமிழ் நாடு
முழுவதும் கும்மியடி....'
'எட்டையும் பெண்கள்
தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து
விட்டார்'
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டிவைப்போமென்ற

விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்'' என்று பாடி அன்னையர் குலத்தின் விடுதலை விலங்கறுத்தார். இதனால் சில வயிர நெஞ்சங்களின் வயிற்றெரிச்சலையும் வாரிக் கட்டிக் கொண்டார்.

பாவேந்தர், பாவுக்கரசர் பாற்றியார் எல்லாருக்கும், எல்லாவரிற்கும் தமது பாடல்களில் இடம் தந்திருக்கிறார். பாரதி பாடாது விட்டதொன்றில்லை. அதுமட்டுமா? அவர் காவிய வடிவில் தந்திருக்கும் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாடல்கள், குயிற்பாட்டு இவைகள் போதுமே தமிழர்களின் பெருமையை – நானிலத்தார் புரிந்து கொள்ள – கவிதை வளர்ச்சியை தெரிந்துகொள்ள. தமிழனின் பெருமையை – தமிழின் இனிமையை உணர்ந்து தமது கவிதா சக்தியால் தமிழினத்தை தலை நிமிரச் செய்த பாரதியார் இன்று நம்மிடையே இல்லை. அவர் அமரராகி விட்டார். அவர் அமரரான தினம்தான் (1921ம் ஆண்டு) 'செப்ரெம்பர் பதினொன்று' தமிழனுக்கும், தமிழ் மொழிக்கும் அழியாத பெருமையை தேடித்தந்து—துன்பத்தை சகித்து — அகால மரணமடைந்த சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தமிழர் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கச் செய்வது தமிழர்களாகிய ஒவ்வொருவருடைய தலையாய கடனாகும்.

வாழ்க, வளர்க பாரதி நாமம்!


# 'வசந்தம்'

ஈழத்தின் தலை சிறந்த கலை இலக்கிய மாத இதழ்.
முற்போக்கான கதை, கட்டுரை, கவிதைகள்
தாங்கி வரும் புதுமை ஏடு!
ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களான
க. கைலாசபதி, கே. டானியல், டொக்டர் நந்தி,
செ. யோகநாதன், பெனடிக்ட்பாலன், நீர்வை பொன்னையன்
முதலியோர் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் 15ந் திகதி வெளிவரும்.

விலைசதம்: 35

ஊவாப்பகுதி ஏகவினியோகஸ்தர்:

எஸ். சதாசிவம்
87, பக்டரி வீதி,
கந்தேகெதற

சப்-ஏஜென்ஸிகள் தேவை.

'வீட்டுச் சலவையின் பெருமை
ரதிசோப் சலவையின் அருமை'

# ரதி சோப்

★ இலங்கை அரசாங்க விஞ்ஞான ஆராய்ச்சிப் பகுதியினரால் பரிசோதிக்கப்பட்டு திறமை வாய்ந்ததென நிரூபிக்கப்பட்டது.

★ ரதி சோப்பினுல் சலவை செய்யும் உடைகளெல்லாம் பிரகாசிப்பது ஏன்?

★ அதில் முதற்தரமான இரசாயனப் பொருட்கள் சேர்ந்திருப்பதனுல்.

★ அதிக நுரையும் நிகரில்லாத வெண்மையும் சிகரமான தூய்மையும் கொடுப்பது.

- ரதி நீலசோப்
- ரதி நீலபார்சோப்
- ரதி சோப்
- ரதி பார்சோப்

தயாரிப்பாளர் :

**சண்முகா தொழிற்சாலை**

நல்லூர்

# 'விவேகி'

# குறுக்கு எண் போட்டி – 19

## போட்டிக் குறிப்புகள்

1. 9 தொடக்கம் 24 வரையுள்ள இலக்கங்களால் ஆக்கப்படவே வேண்டும்.

2. ஓர் எண் இரண்டாவதுமுறை எழுதப்படக் கூடாது.

3. தொடர்பாக இருக்கும் 4 சதுரங்களில் உள்ள எண்களைக்கூட்ட 66 விடையாக வரவேண்டும்.

4. சதுரத்தில் கொடுபட்டுள்ள மூன்று எண்களும் அவ்வவ்விடங்களி லேயே இருக்கவேண்டும்.

5. விடைகள் **1-10-65** புதன்கிழமை அல்லது, அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக

'விவேகி குறுக்கு எண் போட்டி—19
29, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

இங்கே வெட்டி அனுப்புக

---

## போட்டி—19

**கூப்பன் 1**

| | | | |
|---|---|---|---|
| | 20 | | |
| 10 | | | |
| | | | |
| | | | 9 |

**கூப்பன் 2**

| | | | |
|---|---|---|---|
| | 20 | | |
| 10 | | | |
| | | | |
| | | | 9 |

இரு சதுரங்களுக்கும்

**கட்டணம் 10 சத முத்திரை ஒன்று**

பெயர் : ..........................................................................

விலாசம் : ..........................................................................

..........................................................................

# 'விவேகி' குறுக்கு எண்போட்டி–18

## சரியான விடை :

| | | | |
|---|---|---|---|
| 9 | 20 | 16 | 21 |
| 23 | 14 | 18 | 11 |
| 22 | 15 | 19 | 10 |
| 12 | 17 | 13 | 24 |

பதினெட்டாவது போட்டிக்கு ஆசிரியரின் விடைக்குச் சரியாக 67 பேர் விடை அனுப்பியிருந்தார்கள். அவர்களில் ஐவர் தெரிவுச் சீட்டு மூலம் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகளைப் பெறுகின்றனர்.

முதலாம் பரிசு : ஆ. அஞ்சலா
C/o பா. ஆரோக்கியநாதர்
பாத்திமா வீதி, மாதகல்

இரண்டாம் பரிசு (1) வேலு புவனேஸ்வரன்
பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு
அரசினர் கல்லூரி
மட்டக்களப்பு

(2) துரைசாமி துரைரத்தினம்
பழம் பாலம்
தொண்டைமானாறு

மூன்றும் பரிசு : (1) பி. எம். குணம்
இந்துராண தோட்டம்
வாக்குல

(2) யா. ஜேசலின் குரூஸ்
1-ம் குறுக்குத்தெரு, பேசாலை

## பரிசு விபரம்

**முதலாவது பரிசு :**
ஒரு வருடம் விவேகி இலவசமாக அனுப்பப்படும்.

**இரண்டாவது பரிசு :** (இருவருக்கு)
அரைவருடம் விவேகி இலவசமாக அனுப்பப்படும்.

**மூன்றாவது பரிசு :** (இருவருக்கு)
கால் வருடம் விவேகி இலவசமாக அனுப்பப்படும்

இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம், 32, கண்டி வீதியில் உள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 10-9-65இல் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.

*Registered at the G P. O. as a Newspaper*

உங்கள் அச்சு வேலைகளுக்கு:

**ஆசீர்வாதம் அச்சகம்**
**32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

ඔබගේ මුද්‍රණ වැඩ කර දෙමි

**ආසීර්වාදම් මුද්‍රණාලය,**
**32, නුවර පාර, යාපනය.**

For your Printing Requirements:

**ASIRVATHAM PRESS**
**32, KANDY ROAD, JAFFNA.**

भवतां संस्कृतमुद्रणस्य

**आशीर्वादयन्त्रशाला**
**32, कण्डिवीथी, वीणागानपुरम्**